©
GOVERNMENT OF TAMIL NADU
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No.197/2009.
[Price: Rs. 51.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 194A] சென்னை, திங்கள்கிழமை, ஏப்ரல் 28, 2025
சித்திரை 15, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு-2056

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

பக்கங்கள்

சட்டமுன்வடிவுகள்:

எண். 13/2025—தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டம் .. .. .. 2–32

எண். 14/2025—தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. 33–42

எண். 15/2025—தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. .. .. 43–52

எண். 16/2025—தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் .. .. .. 53–58

எண். 17/2025—தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டம் .. .. 59–66

எண். 18/2025—தமிழ்நாடு பதிவுச் (தமிழ்நாடு திருத்த) சட்டம் .. .. .. .. 67–68

எண். 19/2025—தமிழ்நாடு கலைஞர் பல்கலைக்கழகச் சட்டம் .. .. .. .. 69–122

எண். 20/2025—தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் 123–127

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/2025**

## 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்புப் பணிகள் அமைப்புச் சட்டத்தை நீக்கறவு செய்து அதை மீண்டும் சட்டமியற்றுவதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:–

### அத்தியாயம் – I.

### முன்னுரை.

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம் 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாக குறிப்பிடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி, –

(a) ''மேல்முறையீட்டு அலுவலர்'' என்பவர் 54 ஆம் பிரிவின்கீழ் அரசால் அறிவிக்கை செய்யப்படும் மேல்முறையீட்டு அலுவலர் ஆவார்.

(b) ''கட்டடம்'' என்பது, 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டட விதிகளின் 2 ஆம் விதியின் (15) ஆம் கூறில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான கட்டடம் என்று பொருள்படும் மற்றும் பெட்ரோல், டீசல் அல்லது வாயு இணைப்புகள், நிறுவல்கள் அல்லது குழாய்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்;

(c) ''துணை விதி'' என்பது இந்திய தேசிய கட்டட விதித் தொகுப்பு, 2016 ஆம் ஆண்டு மாதிரி கட்டிட துணை விதிகளின் கீழ், இந்திய அரசால் உருவாக்கப்பட்ட தீ பாதுகாப்பு ஒழுங்குமுறை விதிகள் அல்லது விதிமுறைகள் அல்லது வழிகாட்டுதல்கள், எண்ணெய் தொழில்துறை பாதுகாப்பு இயக்குநரக வழிகாட்டுதல்கள், பெட்ரோலிய சட்டம் மற்றும் விதிகள், வெடிபொருள் சட்டம் மற்றும் தீ தடுப்பு தொடர்பான விதிகள், அல்லது அவ்வப்போது திருத்தப்படும் அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பின் ஏதேனும் தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் 31 ஆம் பிரிவின்கீழ் வகுத்துரைக்கப்படலாகும் விதிகள் என்று பொருள்படும்;

(d) ''இயக்குநர்'' என்பவர், 6 ஆம் பிரிவின்கீழ் பணியமர்த்தப்பட்ட தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் இயக்குநர் ஆவார்;

மையச் சட்டம் 53/2005.

(e) ‘‘பேரிடர்’’ என்பது, 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (d) கூறில், பொருள் வரையறை செய்யப்பட்டவாறான ஒரு பேரிடர் என்று பொருள்படும்;

(f) ‘‘கட்டமைப்பவர்‘‘ என்பது, மக்கள் பயன்பாட்டிற்காக பந்தல் அல்லது ஏதேனும் கட்டமைப்பினை ஒரு நிரந்தர அல்லது தற்காலிக அடிப்படையில் நிறுவுகின்ற அல்லது செய்கின்ற நபரொருவர் அல்லது கூட்டுநிறுவனம் அல்லது பிறவாறாக உள்ள நபர்களின் கழகம் என்று பொருள்படும்;

(g) ‘‘தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர்‘‘ என்பவர், 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணியமர்த்தப்பட்ட ஓர் அலுவலர் என்று பொருள்படும்;

(h) ‘‘தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அல்லது மீட்புப் பணிகள் நிலையம்’’ என்பது, 8 ஆம் பிரிவின்கீழ் அரசால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அல்லது மீட்புப் பணிகள் நிலையம் மற்றும் பிற கள அமைப்புகள் என பொதுவாக அல்லது குறிப்பாக அமைக்கப்பட்ட, முறைப்படுத்தப்பட்ட அல்லது மறுசீரமைக்கப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு உபகரணங்கள், சாதனங்கள் மற்றும் பணியாளர்களுக்காக கட்டப்பட்ட ஒரு கட்டடம் என்று பொருள்படும்;

(i) ’’தீ ஏற்படாமல் தடுத்தல் மற்றும் உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள்‘‘ என்பது, தீ, புகை, நீர்ம ஆவி மற்றும் இவை அல்லது இவைப் போன்ற காரணங்களால் எழும் அச்சத்திலிருந்து தனிப்பட்ட அல்லது கூட்டாக உயிர்ப் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான அத்தகைய நடவடிக்கைகள் என்று பொருள்படும்; மேலும் தீயைக் கட்டுக்குள் வைத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் அணைத்தல் ஆகியவற்றிற்கான உபகரணங்களை வழங்குதல் மற்றும் தீ ஏற்படும் நேர்வுகளில் அல்லது ஏதேனும் பிற அவசர காலங்களில் அவ்வப்போது துறையால் வகுத்துரைக்கப்படலாகும் உயிர் மற்றும் சொத்துகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்;

(j) ‘‘தீயணைப்புப் பாதுகாப்பு தணிக்கை முகமை‘‘ என்பது, 32 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அரசால் பட்டியலிடப்பட்ட நபர் அல்லது நிறுமம் என்று பொருள்படும்;

(k) ‘‘தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலர்’’ என்பவர் 33 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலராக பணியமர்த்தப்பட்ட நபர் ஆவார்;

(l) ‘‘அரசு’’ என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

(m) ‘‘உள்ளாட்சி அமைப்பு‘‘ என்பது, 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டட விதிகளின் 2 ஆம் விதியின் (66) ஆம் கூறில், பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளவாறான ஓர் உள்ளாட்சி அமைப்பு என்று பொருள்படும்;

(n) ‘‘தேசிய கட்டட விதித்தொகுப்பு’’ என்பது இந்திய தர நிர்ணய நிறுவனத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் கட்டடங்கள், இடங்கள், வளாகங்கள், பட்டறைகள், கிடங்குகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட வேண்டிய தீ தடுப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் அடங்கிய புத்தகம் அல்லது புத்தகங்கள் என்று பொருள்படும்;

(o) ‘‘குடியிருப்பு’’ என்பது, அதனைச் சார்ந்துள்ள துணைக் குடியிருப்புகள் உள்ளடங்கலாக, குடியிருப்பாக பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு கட்டடம் அல்லது கட்டடத்தின் ஒரு பகுதியின், முதன்மைக் குடியிருப்பு என்று பொருள்படும்;

(p) ‘‘குடியிருப்பவர்‘‘ என்பவர்,—

(i) நிலம் அல்லது கட்டடத்தைப் பொறுத்து, செலுத்தப்படுகிற அல்லது செலுத்த வேண்டிய அந்த நிலத்தின் அல்லது கட்டடத்தின் அல்லது அதன் பகுதி எதனின் வாடகையை அப்போதைக்கு உரிமையாளரிடம் செலுத்தி வருகின்ற அல்லது செலுத்த வேண்டிய பொறுப்பு கொண்டுள்ள எந்தவொரு நபரும்;

(ii) தனது நிலம் அல்லது கட்டடத்தின் பயன்பாட்டைக் கொண்டிருக்கும் அல்லது பிறவாறாக பயன்படுத்தும் ஓர் உரிமையாளர்;

(iii) நிலம் அல்லது கட்டடம் எதிலும் வாடகையின்றி குடியிருப்பவர்;

(iv) நிலம் அல்லது கட்டடம் எதனின் பயன்பாட்டைக் கொண்டுள்ள ஓர் உரிமதாரர்; மற்றும்

(v) நிலம் அல்லது கட்டடம் எதனின் பயன்பாட்டிற்கும் மற்றும் குடியிருப்பதற்கும், உரிமையாளரிடம் இழப்பீடு செலுத்த பொறுப்புக் கொண்டுள்ள எந்தவொரு நபரும் என்று பொருள்படும்.

(q) ‘‘உரிமையாளர்’’ என்பவர், நிலம் அல்லது கட்டடம் அல்லது அவற்றின் ஒரு பகுதியை ஒரு வாடகைதாரருக்கு வாடகைக்கு விடப்பட்டால், அப்போதைக்கு, நிலம் அல்லது கட்டடத்தின் வாடகையை அவர் சொந்த கணக்கிலோ அல்லது மற்றொருவர் சார்பாக அல்லது அவரின் சார்பாக மற்றும் பிறரது கணக்கில், அல்லது ஒரு முகவர், அறங்காவலர், பாதுகாவலர் அல்லது சொத்து பேணுநர் அல்லது பிற நபர் எவரும் அல்லது அதன் வாடகையைப் பெறுவதற்கு அல்லது பெற உரிமையுடைய ஒரு நபர் என்பதையும் உள்ளடக்கும்;

(r) ‘‘பந்தல்’’ என்பது நிரந்தர அல்லது தொடர்ச்சியான குடியிருப்புக்கு ஏற்றுக்கொள்ளப்படாத தென்னங்கீற்று, பனை ஓலை, வைக்கோல், உலர்ந்தபுல், ஏதேனும் புல் வகை, பாய், திரைச்சீலை, துணி அல்லது இவை போன்ற பிற மூலப்பொருட்களினால் ஆன கூரை அல்லது சுவர்களுடனான ஒரு தற்காலிக அமைப்பு என்று பொருள்படும்;

(s) ‘‘வகுத்துரைக்கப்பட்ட’’ என்பது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(ț) ‘‘மீட்பு’’ என்பது, பேரிடர் உள்ளடங்கலான, எந்தவொரு தீவிர சூழல் அல்லது நிகழ்விலும் தேவைப்படும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் உடனடி நடவடிக்கை என்று பொருள்படும்;

(ப) ‘‘மாநிலம்’’ என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்;

**அத்தியாயம் II.**

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் அமைப்பு, மேற்பார்வை, கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பு.**

3. மாநிலத்தில், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் என்று அழைக்கப்படும், ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியானது அரசால் நிறுவப்பட்டு பராமரிக்கப்படுதல் வேண்டும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை நிறுவுதல்.

4. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கண்காணிப்பும் கட்டுப்பாடும் அரசிடம் உற்றமைதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்க, இதன்பொருட்டு அரசால் அவ்வப்போது பணியமர்த்தப்படும் அத்தகைய அலுவலர்களின் வாயிலாக, அரசால் நிருவகிக்கப்படுதலும் வேண்டும். தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு.

5. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, பல்வேறு நிலைகளில் அத்தகைய எண்ணிக்கையிலான பணியிடங்களையும் அத்தகைய அமைப்புகளையும் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய அமைப்புகளைக் கொண்டிருக்கும் மற்றும் அரசானது பொது அல்லது சிறப்பு ஆணையின் மூலம் தீர்மானிக்கலாகும் அத்தகைய அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அமைத்துருவாக்கம் மற்றும் வகைப்பாடு.

(2) (i) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையில் உள்ளடங்கியுள்ள பதவிகள்; மற்றும்

(ii) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை பணியாளர்களின் பணி நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகள் ஆகியவற்றை ;

அரசானது விதிகளில் பரிந்துரைக்கலாம்.

(3) அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கையின் வாயிலாக, மாநிலத்தில் தற்போதுள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகளின் அமைப்பை மறுஆய்வு செய்யலாம், மேலும் பொருத்தமெனக் கருதினால் அதனை மாற்றியமைக்கலாம்.

(4) இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது வேறுவிதமாக வழங்கப்பட்டாலன்றி, இந்தச் சட்டம் தொடங்குவதற்கு உடனடி முந்தைய தேதியில், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும் அந்தப் பதவியை வகிக்கும் ஒவ்வொரு நபரும், அந்தத் தேதிக்கு முன்பு அவருக்குப் பொருந்தக்கூடிய அதே வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் அவர்கள் தொடர்ந்து பதவியில் இருத்தல் வேண்டும்; மேலும், இந்தச் சட்டத்தின்கீழ் அல்லது அதன் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டவற்றுடன் கூடுதலாக முன்பு இருந்தாற்போன்று அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்துதலும் அத்தகைய கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரை நியமனம் செய்தல்.

6. (1) அரசானது, காவல் துறை தலைமை இயக்குநர் அல்லது காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் படிநிலையில் உள்ள ஓர் அலுவலரைத் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் இயக்குநராக நியமனம் செய்தல் வேண்டும்.

(2) இயக்குநரானவர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் தலைவராக இருத்தல் வேண்டும்.

(3) அரசின் கட்டுப்பாடு, பணிப்புரைகள் மற்றும் மேற்பார்வைகளுக்குட்பட்டு இயக்குநரானவர், இந்தச் சட்டத்தினால் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளினால் மற்றும் வழங்கப்பட்டு மற்றும் விதிக்கப்பட்டுள்ளவாறு அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்தலும் அத்தகைய கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

இயக்குநரின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பணிகள்.

7. (1) இயக்குநரானவர், அரசின் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, தீப்பாதுகாப்பு மற்றும் தீ ஏற்படாமல் தடுத்தல், தீயணைப்பு உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள், பயிற்சி, கடமைகளைப் பகிர்ந்தளித்தல், சட்டங்களைப் பயிலுதல், நடைமுறைகளின் சீர்மை, நடவடிக்கைகளின் ஆணைகள் மற்றும் முறைகள் குறித்த அனைத்து பொருட்பாடுகள் தொடர்பான மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் நிர்வாக விவரங்கள் அல்லது தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் ஒழுங்குமுறை பேணுதல் தொடர்பான அனைத்து பொருட்பாடுகளையும் நெறிப்படுத்துதலும் ஒழுங்குமுறைப்படுத்துதலும் வேண்டும்.

(2) 6 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு குந்தகமின்றி, இயக்குநர் பதவி இடத்தில், இயக்குநரானவர் துறையின் தலைவராக செயல்படுவார், மற்றும்—

(i) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் மேம்பாட்டிற்கு, அரசுடன் ஒருங்கிணைப்பில் இருத்தல்;

(ii) மாநிலத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மேம்பாடு தொடர்பான கொள்கைகளை வகுத்தல் மற்றும் அக்கொள்கைகளுக்கு அரசு ஒப்புதல் அளிப்பதன் பேரில், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்;

(iii) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளைத் திறம்பட செயல்படுத்துவதற்குத், தீயணைப்பு உபகரணங்கள், சொத்துகள் மற்றும் மனித ஆற்றலின் காலமுறையிலான மறுஆய்வு தொடர்பாக திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகளைத் தயாரித்து அரசிடம் சமர்ப்பித்தல்;

(iv) மிகப்பெரும் தீ விபத்துகள், கட்டட இடிபாடுகள் மற்றும் பிற மீட்புப் பணிகளின் நேர்வுகளில் அத்தகைய திறன்மிகு நடவடிக்கைகள் மற்றும் உடனடி நடவடிக்கைகளை எடுத்தல் அல்லது எடுக்கச் செய்தல்;

(v) தீப்பற்றிய காரணத்தை விசாரணை செய்தல் அல்லது காரணத்தை ஆராய்தல் மற்றும் அரசு தடய அறிவியல் ஆய்வுக்கூடங்களின் உதவியை நாடுதல் மற்றும் தீயணைப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைச் செயல்படுத்த அதிகார அமைப்புகளுக்கு அறிவுரை வழங்குதல்;

(vi) இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் கீழ் அவரது அதிகாரத்தைச் செலுத்துகையில் அல்லது அவரது கடமையைப் புரிகையில், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர் எவருக்கும் உதவிபுரிய தேவைப்படலாகும் அத்தகைய எண்ணிக்கையிலான அலுவலர்கள் மற்றும் பணியாளர் தொகுதி அல்லது பணியாளர்களை வழங்குதல்;

(vii) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களின் ஒவ்வொரு நிலையிலும், ஒப்படைக்கப்பட்ட பணிகளுக்கு இணங்க திறன்மிகு மனிதவள மேம்பாடு கொள்கைகளைச் செயல்படுத்துதல் மற்றும் அந்த நோக்கத்திற்காக, அரசின் ஒப்புதலுடன் பயிற்சி மையங்களை அவர் நிறுவலாம்;

(viii) மாநிலத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் தரத்தினைக் காலத்திற்கேற்றவாறு தரம் உயர்த்தும் ஒரு நோக்கத்தோடு, தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளில் அரசை சார்பாற்றம் செய்தல்; மற்றும்

(ix) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்தல் மற்றும் அத்தகைய பிற கடமைகளையும், செயற்பணிகளையும் புரிதல் வேண்டும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள், மீட்புப் பணி நிலையம் மற்றும் பிற கள அமைப்புகளை அமைத்தல்.

**8.** **(1)** மக்கள் தொகை, சில தொழிற்சாலைகள், பெரிய அளவிலான வணிக மற்றும் வணிகம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் கட்டடங்களில் ஏற்படக்கூடிய தீ அபாயங்களைக் கருத்தில் கொண்டு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு வகைசெய்ய மற்றும் பராமரிக்கப்பட தேவையான, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான போதிய எண்ணிக்கையிலான அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை வழங்கும் நோக்கத்திற்காக, மாநிலத்தில் தீ ஏற்படாமல் தடுத்தல் மற்றும் உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்யும் நோக்கத்திற்காக, அரசானது ஆணையின் வாயிலாக பொருத்தமெனக் கருதும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள், மீட்பு பணி நிலையங்கள் மற்றும் பிற கள அமைப்புகளை அமைக்கலாம், முறைப்படுத்தலாம் அல்லது மறுசீரமைக்கலாம்.

**(2)** **(1)** ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு ஆணையும், நிர்வாகம் மற்றும் இயக்க திறனுக்காக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள், மீட்புப் பணி நிலையங்கள் மற்றும் பிற கள அமைப்புகளின் எல்லைகளை வரையறை செய்தல் வேண்டும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி அலுவலர் மற்றும் பிற அலுவலர்களை நியமனம் செய்தல்.

**9.** **(1)** அரசு, ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம், மீட்பு பணிகள் நிலையம் மற்றும் பிற கள அமைப்புகளுக்கு, அத்தகைய நிலையம் அல்லது கள அமைப்பின் பொறுப்பில் உள்ள, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர் ஒருவரை நியமனம் செய்தல் வேண்டும்; மற்றும் அவர், அத்தகைய நிலையம் அல்லது கள அமைப்புகளின் பகுதிகளுக்குள் தகவல்தொடர்பு அமைப்பு, நெடுநீர்க்குழாய் உள்ளிட்ட நீர் ஆதாரங்களின் பராமரிப்பிற்குப் பொறுப்புடையவராய் இருத்தல் வேண்டும் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் செயல்பாடுகளுக்குப் பொறுப்பாளராக இருத்தல் வேண்டும்.

**(2)** தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் திறன்மிகு செயல்பாட்டிற்குத் தேவைப்படலாகும் அத்தகைய பிற அலுவலர்கள் மற்றும் பணியாளர் தொகுதியினரைப் பணியமர்த்துதல் வேண்டும்; மற்றும் அவர்களின் தகுதிகள் மற்றும் பிற பணி நிபந்தனைகளானது வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலரின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பணிகள்.

**10.** இயக்குநரின் கட்டுப்பாடு, பணிப்புரை மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றிற்கு உட்பட்டு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர், இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஆணைகளின்படி வழங்கப்பட்ட மற்றும் விதிக்கப்பட்ட அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய கடமைகள் மற்றும் செயற்பணிகளைப் புரிதலும் வேண்டும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளருக்கு சான்றிதழ் வழங்குதல்.

**11.** (1) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்குப் பணியமர்த்தப்படுகிற ஒவ்வொரு நபரும், இயக்குநர் அல்லது அரசால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரின் கையொப்பத்துடன், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் ஒரு சான்றிதழைப் பெறுதல் வேண்டும் மற்றும் அதன்பின்னர், அத்தகைய நபர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளருக்குரிய அனைத்து அதிகாரங்கள், செயற்பணிகள் மற்றும் சிறப்புரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட சான்றிதழானது, அதில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர், எந்தக் காரணத்திற்காகவும், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளராக இருப்பது அற்றுப் போய்விட்டால், அச்சான்றிதழ் பயன்விளைவைக் கொண்டிருப்பதிலிருந்து அற்றுப் போய்விடும், மற்றும் அத்தகைய பணியாளராக இருப்பது அற்றுப் போனவுடன், அவர் உடனடியாக சான்றிதழைப் பெற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலரிடம் ஒப்படைத்துவிடுதல் வேண்டும்.

(3) பணியமர்த்த சான்றிதழானது, அதில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணியாளராக இருப்பது அற்றுப்போய்விட்டால், அது இல்லாநிலையதும் செல்லாநிலையதும் ஆகிவிடுதல் வேண்டும் மற்றும் அவரது இடைநீக்க காலத்தின்போது செயல்படா நிலையில் இருத்தல் வேண்டும்.

(4) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளரானவர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு சார்பு பணிகளுக்கான சிறப்பு விதிகளால் முறைப்படுத்தப்படுதல் வேண்டும். எந்தவொரு பொருட்பாட்டிலும் எந்தவொரு சிறப்பு விதிகளும் வகுத்துரைக்கப்படாதவிடத்து, அரசு அலுவலர்களின் பணி நிபந்தனைகள் மற்றும் அனைத்துப் பிற பொருட்பாடுகள் பொறுத்து அவர்களுக்குப் பொருந்துகிறவாறான சட்டங்களும் விதிகளும் பொருந்துதல் வேண்டும்.

பணியிடை நீக்கத்தின் விளைவு.

**12.** (1) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் எந்தவொரு பணியாளரிடமும் உற்றமைந்துள்ள அதிகாரங்கள், செயற்பணிகள் மற்றும் சிறப்புரிமைகளானது பணியிடை நீக்கத்தின் காலஅளவின் போது நிறுத்தி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய நபரானவர், அவர் பணியிடை நீக்கத்தில் இல்லாதிருக்கையில், எந்த அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்திருப்பாரோ அதே அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டிற்கு இணங்கி தொடர்ந்து பணியில் இருத்தல் வேண்டும்.

துணை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்.

**13.** தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை மேம்படுத்துவது தேவையென அரசுக்கு தோன்றுகிறபோதெல்லாம்,

வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், அவர்கள் அத்தகைய பகுதிக்குத் தன்னார்வலர்களின் பெயரைப் பதிவு செய்தல் மூலம் துணைப்பணிகளை வழங்கலாம்.

## அத்தியாயம் III.

## தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகளின் ஏற்புத்தன்மை.

அழைப்புகளின் ஏற்புத்தன்மை.

**14.** தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்கள், தீயணைப்பு மற்றும் மீட்பு, பிற அவசர காலங்கள் எதிலும் தொடர்புடைய அனைத்து அழைப்புகளையும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பணியாளர்கள் மற்றும் உபகரணங்களின் அளவுகோல்.

**15.** எந்தவொரு தீயணைப்பு நடவடிக்கையின் போதும் அல்லது பிற எந்த மீட்புப் பணி அழைப்பின் போதும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், வளங்கள், உபகரணங்கள் மற்றும் தீயணைப்பு பணியாளர்கள் ஈடுபடுத்துதலை இயக்குநர் உறுதி செய்தல் வேண்டும்.

இயக்க மேலாண்மை.

**16.** (1) இயக்குநர், திட்டமிடல், ஒருங்கிணைத்தலின் விபரங்களை வழங்குதலும், பணியாளர்களை ஈடுபடுத்துதலும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், களத்தின் வழக்கமான கண்காணிப்பை உறுதி செய்தல் வேண்டும்.

(2) இயக்குநர், தொடர்புடைய மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டங்களுக்கு இணங்கி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள், மீட்புப் பணி நிலையங்கள் மற்றும் பிற கள அமைப்புகளின் தீயணைப்பு மற்றும் மீட்பு மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

தீ விபத்து அல்லது மீட்பு நடவடிக்கையின் போது தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளருக்குள்ள அதிகாரங்கள்.

**17.** எந்தவொரு பகுதியிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் போது, தீயணைப்பு அல்லது மீட்பு நடவடிக்கைகளின் பொறுப்பு கொண்டுள்ள, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர் எவரும் அவ்விடத்திலேயே —

(i) தீயை அணைக்கும் அல்லது உயிர் அல்லது உடைமையைக் காக்கும் நடவடிக்கையில், குறுக்கிடுகின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற எந்தவொரு நபரையும், தனது வருகையின் மூலம் நீக்கலாம் அல்லது நீக்கும்படி செய்யலாம் அல்லது தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் ஏதேனும் பிற பணியாளரிடம் நீக்கும்படி ஆணையிடலாம்;

(ii) மீட்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தீ ஏற்பட்ட இடத்தில் அல்லது அதன் அருகில் உள்ள எந்தவொரு தெரு அல்லது பாதையையும் மூடிவிடலாம் அல்லது மூடிவிடும்படி செய்யலாம்;

(iii) தீயை அணைக்கும் மற்றும் மீட்புப் பணியை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, நெளிவுக் குழாய் அல்லது பிற சாதனங்களுக்கு வழி ஏற்படுத்த, எந்தவொரு வளாகத்தையும் உடைக்கலாம் அல்லது நுழையலாம் அல்லது இடித்துத் தள்ளலாம் அல்லது தீயை அணைக்கும் நோக்கத்திற்காக, முடிந்தளவு குறைவான சேதம் ஏற்படுத்தி எந்தவொரு வளாகத்தையும் உடைக்கும்படி அல்லது நுழையும்படி அல்லது இடித்துத் தள்ளும்படி செய்யலாம்;

வரம்புரையாக, நேர்விற்கேற்ப, அத்தகைய வளாகங்களின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவருக்கு, அவ்வாறு ஏற்பட்ட சேதத்தின் அளவிற்கு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் உரிய இழப்பீடு வழங்கப்படுதல் வேண்டும்.

(iv) தீ விபத்து ஏற்பட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட அழுத்தத்தில் நீர் வழங்குவதற்காக, நீர் ஆதாரத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும், அத்தகைய தீப் பரவலைத் தடுக்கவும் அல்லது மட்டுப்படுத்தும் நோக்கத்திற்காக, பொது அல்லது தனியாரைச் சேர்ந்த ஏதேனும் நீரோடை, நீர்த்தேக்கத் தொட்டி, கிணறு அல்லது தொட்டி அல்லது கிடைக்கக்கூடிய நீர் ஆதாரம் எதனையும் பயன்படுத்துவதற்கு மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மீட்பு பணிகளை மேற்கொள்வதற்கு, அந்தப் பகுதியில் நீர் வழங்கலுக்கு பொறுப்புடைய அதிகாரியை வேண்டுறுத்தலாம்;

(v) தீயணைப்பு அல்லது மீட்புப் பணிகளை அநேகமாக இடையூறு செய்யும், நபர்களின் கூட்டத்தைக் கலைப்பதற்கு, அவர் ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவலராக இருந்தாற்போன்று, அதே அதிகாரங்களைச் செலுத்தலாம் மற்றும் அந்தக் கூட்டமானது சட்டத்திற்குப் புறம்பான ஒரு கூட்டமாக இருந்தால், அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துவது பொறுத்து, அத்தகைய அலுவலருக்கு கிடைக்கக்கூடிய அதே சட்டவிலக்களிப்புகள் மற்றும் பாதுகாப்பிற்கு உரிமையுடையவராய் இருத்தல் வேண்டும்;

(vi) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு வேண்டுமென்றே இடையூறு செய்கின்ற மற்றும் தடுக்கின்ற எந்தவொரு நபரையும், கைது செய்யலாம் மற்றும் ஒரு காவல் அலுவலரிடம் அல்லது அருகில் உள்ள காவல் நிலையத்தில், தவிர்க்கக்கூடிய எவ்வித தாமதமுமின்றி, கைது செய்த நேரம், தேதி மற்றும் காரணத்தைக் குறிப்பிட்டு ஒரு சிறு குறிப்புடன் சேர்த்து அவரை ஒப்படைக்கலாம்;

(vii) தீயணைப்பு நோக்கங்களுக்காக பணியாளர்கள் அல்லது உபகரணங்கள் அல்லது இரண்டையும் பணியமர்த்தும் மற்றும் பராமரிக்கும் எந்தவொரு நபருடனும், எந்தவொரு பகுதியிலும் ஏற்படும் தீயை அணைக்கும் நோக்கத்திற்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையறைகளின் பேரில், அத்தகைய பணியாளர் அல்லது உபகரணத்தைப் பாதுகாக்க, உடன்படிக்கை செய்து கொள்ளலாம்; மற்றும்

(viii) தீயை அணைப்பதற்கு அல்லது உயிர் அல்லது உடைமையைப் பாதுகாப்பதற்கு அல்லது இரண்டிற்கும் தேவையானதென அவருக்குத் தோன்றலாகும் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

## அத்தியாயம் IV.
## நீர் வழங்கல்.

தீயணைப்பின் போது நீர் வழங்கலுக்கு ஏற்பாடு செய்யும் அதிகாரம்.

**18.** தீயணைப்பு செயல்பாட்டின் போது, தேவையென அவர் கருதும் மற்றும் தேவைப்படலாகும் அத்தகைய நிகழ்வுகளிலும், அந்தப் பகுதியில் உள்ள எந்தவொரு நீர் ஆதாரத்தில் இருந்தும், தீயணைப்பு நடவடிக்கைகளின் இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர் நீர் எடுத்தல் சட்டப்படியானதாக இருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய நீர் ஆதாரத்தின் மீது கட்டுப்பாடு கொண்டுள்ள அதிகாரஅமைப்பு அல்லது உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், அந்த நோக்கத்திற்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வீதத்தில் நீர் வழங்குதல் வேண்டும்.

நீர் வழங்கலுக்கு ஏற்பாடு செய்வதற்கான கடமை.

**19.** இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், தீப்பிடித்த நேர்வில், பயன்படுத்துவதற்குப் போதுமான அளவு நீர் இருப்பதை உறுதி செய்வதற்கு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அனைத்து உரிய நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

20. இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மூன்றாம் நபருக்குப் பணம் செலுத்துவதற்கான நடைமுறை மற்றும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி நீர் வழங்கலின் தேவை மற்றும் நீரின் அவசர தேவையை எதிர்கொள்ளும் பொருட்டு, உள்ளாட்சி அமைப்பு, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியம் அல்லது தமிழ்நாடு நீர்வளத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தவொரு முகவாண்மையுடனும், ஓர் உடன்படிக்கையை மேற்கொள்ளலாம்.

நீர் வழங்கலுக்கான உடன்படிக்கை மேற்கொள்ளும் அதிகாரம்.

21. எந்தவொரு பகுதியிலும், நீர் வழங்கும் பொறுப்பைக் கொண்டுள்ள அதிகார அமைப்பு எதுவும், 17 ஆம் பிரிவின் (iv) கூறில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாட்டிற்கு இணங்கலாக மட்டுமே ஏற்பட்ட ஏதேனும் நீர் வழங்கல் தடையின் காரணத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டிற்கான கோருரிமை எதற்கும் பொறுப்பு கொண்டிருத்தலாகாது.

நீர் வழங்கலின் தடைகளுக்கு இழப்பீடு இல்லை.

22. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளால் தீயணைப்புப் காரணத்திற்காக பயன்படுத்தப்படும் தண்ணீருக்கு, நீர் வழங்கலை பொறுப்பில் கொண்டுள்ள அதிகார அமைப்பு அல்லது உள்ளாட்சி அமைப்பு எதனாலும் கட்டணம் எதுவும் விதிக்கப்படுதலோ அல்லது வசூலிக்கப்படுதலோ கூடாது.

நீரைப் பயன்படுத்துதல்.

## அத்தியாயம் V

## தீ ஏற்படாமல் தடுத்தல் மற்றும் உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பொது நடைமுறைகள்.

23. அரசு அறிவிக்கையின் வாயிலாக, பகுதி எதிலும் உள்ள வளாகம் எதனின் அல்லது வளாகத்தின் வகைகள் எதனின் உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பவர்கள் அல்லது பந்தல் அமைப்பாளர்கள், அவர்களது கருத்தில், அங்கு, தீ அபாயத்தை ஏற்படுத்தக்கூடியதாகக் கருதினால், அத்தகைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கும்படி அவர்களைக் கோரலாம்.

தடுப்பு நடவடிக்கைகள்.

24. (1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும், பந்தல்களை அமைப்பவர்கள், வகுத்துரைக்கப்படலாகும் தீத்தடுப்பு மற்றும் உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்குச் சுய ஒழுங்குமுறை கட்டுப்பாட்டாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

பந்தல்களில் தீத்தடுப்பு மற்றும் உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சுய ஒழுங்குமுறைக்கு உடையதாக இருத்தல்.

(2) பந்தல் அமைப்பவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும், அதில் வகுத்துரைக்கப்படலாகும் மற்றும் அனைத்து தீத்தடுப்பு மற்றும் தீப்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக அவரின் சொந்த கையெழுத்துடனும், ஓர் அறிவிப்பை பந்தலின் முக்கியமான இடத்தில் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

(3) இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், (2) ஆம் உட்பிரிவின்படி அமைப்பாளரால் அவ்வாறு செய்யப்பட்ட அறிவிக்கையின் உண்மைத்தன்மையை சரிபார்க்கும் பொருட்டும், பந்தலுக்குள் நுழைந்து ஆய்வு செய்வதும், குறைபாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றை சுட்டிக்காட்டி குறிப்பிட்ட நேரத்திற்குள் அத்தகைய குறைபாடுகளைச் சரிசெய்வதற்கான வழிமுறைகளைச் செய்வதற்குச் சட்டப்படி அதிகாரமுடையவர் ஆவார். அவ்வாறு கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட நேரத்திற்குள் ஆய்வு அலுவலரின் வழிமுறைகளுக்கு இணங்கவில்லை எனில், அது குறித்து வட்டார நிர்வாக நடுவருக்கு புகார் அளித்தல் வேண்டும் மற்றும் அவர், தனது தரப்பில் கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்கிய பின்னர் பந்தலை மூடி முத்திரையிடுதல் வேண்டும்.

(4) பந்தல் அமைப்பாளர் எவரும், பந்தலில் வகுத்துரைக்கப்பட்ட தீத்தடுப்பு மற்றும் தீப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இணங்கியதாக பொய்யாக அறிவிக்கிறாரெனில், அவர் இந்தச் சட்டத்தின்கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றம் இழைத்துள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

தீ அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது தீயை அணைப்பதற்கு ஏதேனும் தடையாக இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகள் அல்லது பொருள்கள் அல்லது சரக்குகளை அப்புறப்படுத்துதல்.

25. (1) 23 ஆம் பிரிவின்கீழ் ஓர் அறிவிக்கை வெளியிடப்பட்டிருக்குமிடத்து, தீ அபாயம் அல்லது தீயை அணைப்பதற்கு ஏதேனும் தடையை ஏற்படுத்தக்கூடிய ஆக்கிரமிப்புகள் அல்லது சரக்குகளைப் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தும்படி, இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர் கட்டளையிடுவது சட்டப்பூர்வமாக இருத்தல் வேண்டும். நேர்விற்கேற்ப, உரிமையாளர், குடியிருப்பவர் அல்லது அமைப்பாளர் அவ்வாறு செய்யத் தவறுவாராயின், இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், நேர்விற்கேற்ப உரிமையாளர், குடியிருப்பவர் அல்லது அமைப்பாளருக்கு, எடுத்துரைப்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, எந்த அதிகாரவரம்பில் வளாகம் அல்லது கட்டடம் அல்லது பந்தல் அமைந்துள்ள நிலப்பகுதி அமைந்துள்ளதோ அந்த வட்டார நிர்வாக நடுவரிடம் அறிக்கை அளிக்க கோரலாம்;

வரம்புரையாக, இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், அத்தகைய ஆக்கிரமிப்புகள் அல்லது பொருள்கள் அல்லது சரக்குகள் தீ அபாயம் அல்லது தீயணைப்புப் பணிகளுக்கு தடையை ஏற்படுத்தும் உடனடிக் காரணம் எனக் கருதுமிடத்து, அவர் அத்தகைய வளாகம் அல்லது கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் அல்லது அமைப்பாளர் ஆக்கிரமிப்பை அல்லது பொருள்கள் அல்லது சரக்குகளை உடனடியாக அகற்றுமாறு பணிக்கலாம். நேர்விற்கேற்ப, உரிமையாளர், குடியிருப்பவர் அல்லது கட்டட உரிமையாளர் அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், நேர்விற்கேற்ப, இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்பு அலுவலர், அப்பணியை நீக்கிவிட்டு, சம்பந்தப்பட்ட வட்டார நிர்வாக நடுவருக்கு அறிக்கை செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படியான ஓர் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பேரில், வட்டார நிர்வாக நடுவர், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் அல்லது அமைப்பாளருக்குத், தீ அபாயம் அல்லது தீ அணைப்பிற்குத் தடை ஏற்படுத்தக்கூடியதாக உள்ள ஆக்கிரமிப்பு அல்லது பொருட்கள் அல்லது சரக்குகளை அப்புறப்படுத்துவதற்கு எதிராக காரணம் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பினை வழங்கிய பின்னர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அத்தகைய ஆக்கிரமிப்புகள் அல்லது பொருட்கள் அல்லது சரக்குகளைக் கைப்பற்றுவதற்கு, தடுத்து வைப்பதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு ஓர் ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) (2) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையை நிறைவேற்றுவதற்குப் பொறுப்புக் கொண்டுள்ள நபர், அத்தகைய ஆணையின்படி அவர் கைப்பற்றுகை செய்கின்ற பொருட்கள் மற்றும் சரக்குகளின் ஒரு விவரப்பட்டியலை உடனடியாக தயார் செய்தல் வேண்டும்; மற்றும் அதே நேரத்தில், கைப்பற்றுகை செய்யும்போது, அவற்றின் உடைமையைக் கொண்டிருக்கும் நபருக்கு, கூறப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அவை கோருரிமை செய்யப்படவில்லை எனில், அதில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களும் சரக்குகளும் விற்பனை செய்யப்படும் என்று, இதன் பொருட்டு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் ஓர் எழுத்து வடிவிலான அறிவிப்பு கொடுத்தல் வேண்டும்.

(4) கைப்பற்றுகை செய்யப்பட்ட நேரத்தில் பொருட்களையும் சரக்குகளையும் தனது உடைமையில் கொண்டிருந்த நபர், (3) ஆம் உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட அறிவிப்பின் தொடர்ச்சியாக கைப்பற்றுகை செய்யப்பட்ட பொருட்களின் மீது உரிமைக்கோரல் செய்ய தவறியதன் பேரில், வட்டார நிர்வாக நடுவர் பொது ஏலத்தின் மூலம் அவற்றை விற்பனை செய்தல் வேண்டும்.

கட்டடங்களின் வகைப்பாடு.

26. (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு கட்டடங்களும், வகுத்துரைக்கப்படலாகிறவாறு வகை A அல்லது வகை B அல்லது வகை C கட்டடங்களாக வகைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) நேர்விற்கேற்ப, கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்போர், கட்டடத்தில் குடியிருப்பதற்கு முன்பு வகுத்துரைக்கப்படலாகும் நேரத்திற்குள், நேர்விற்கேற்ப, A வகை கட்டடங்களுக்குத் தீயணைப்பு உரிமம் அல்லது B வகை கட்டடங்களுக்குத் தீப்பாதுகாப்பு சான்றிதழ் அல்லது C வகை கட்டடங்களுக்கு சுய சான்றளிக்கப்பட்ட தீப்பாதுகாப்பு நெறிமுறை சான்றிதழ் ஆகியவற்றைப் பெறுதல் வேண்டும்.

தீயணைப்பு உரிமம் வழங்குதல்.

27. (1) நேர்விற்கேற்ப, A பிரிவு கட்டடங்களின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் எவரும், தீயணைப்பு உரிமம் பெறுவதன் நோக்கத்திற்காக, அரசால், ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கப்படலாகும் இணையவழி வாயிலின் வழியாக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய மின்னணுப் படிவத்தில், விண்ணப்பம் செய்தல் வேண்டும்:

வரம்புரையாக, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்துவரும் எந்தவொரு கட்டடத்திற்கு இந்தச் சட்டத்தின் கீழ் தீயணைப்பு உரிமம் தேவைப்படுகிறதோ, அந்தக் கட்டடம் ஒவ்வொன்றையும் பொறுத்த வரையில், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து நூற்று எண்பது நாட்களுக்குள் அல்லது இருந்துவரும் தீயணைப்பு உரிமம் முடிவுறும் தேதிக்குள் இதில் எது பிந்தையதோ அத்தேதியில் தீயணைப்பு உரிமத்திற்கான விண்ணப்பம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஒவ்வொரு விண்ணப்பமும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணம் மற்றும் அத்தகைய ஆவணங்களுடன் சேர்த்து இருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்டவுடன், அரசால், அறிவிக்கையின் மூலம் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், கட்டடத்தை ஆய்வு செய்து, விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து உரிமம் வழங்க வேண்டும் அல்லது அத்தகைய காலத்திற்குள் அத்தகைய மின்னணு படிவத்தில் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக அத்தகைய உரிமத்தை வழங்க மறுத்தல் வேண்டும்.

(4) (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பம் பரிசீலிக்கப்படாதவிடத்து, அறிவிக்கை வாயிலாக அரசால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய உயர்நிலை அலுவலரிடம் மேலனுப்புதல் வேண்டும். அவர், கூறப்பட்ட விண்ணப்பத்தைப் பரிசீலித்து, பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் அத்தகைய உரிமத்தை வழங்குதல் அல்லது வழங்க மறுத்தல் வேண்டும்.

(5) விண்ணப்பமானது, (4) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் முடிவு எதுவும் எடுக்கப்படாதவிடத்து, உரிமமானது வழங்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்; மற்றும் அது இணைய வழியில் தானாக உருவாக்கப்படுதல் வேண்டும்.

(6) இந்தப் பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமமானது, அந்த உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் காலஅளவிற்குச் செல்லுபடியாகும். உரிமமானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வளாகத்தின் முக்கியமான ஓர் இடத்தில் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(7) உரிமம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணங்களைச் செலுத்துவதன் பேரிலும், அத்தகைய முறையிலும், அத்தகைய காலஅளவிற்கும் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(8) நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலரால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் எதனையும் அல்லது உரிமத்தில் குறிப்பிடப்பட்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் எதற்கும் இணங்கத் தவறினால், இதன் பொருட்டு அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், கேட்பதற்கான வாய்ப்பொன்றை வழங்கிய பின்னர், உரிமத்தை தற்காலிகமாக இடைநிறுத்தம் அல்லது இரத்து செய்யலாம்.

(9) உரிமம் இரத்து செய்யப்பட்ட, கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், கட்டடத்தில் குடியிருத்தல் ஆகாது.

(10) (3) ஆம், (4) ஆம் அல்லது (8) ஆம் உட்பிரிவுகள் ஆகியவற்றின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணையொன்றினால் இடருற்ற நபரெவரும், இதன் பொருட்டு அரசால் அறிவிக்கை செய்யப்பட வேண்டிய மேல்முறையீட்டு அதிகாரமைப்பின் முன்பு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நேரத்திற்குள், அத்தகைய மின்னணு படிவிலும் முறையிலும் அத்தகைய ஆணைக்கெதிராக மேல்முறையீட்டினைத் தாக்கல் செய்யலாம்.

(11) மேல்முறையீட்டு அதிகார அமைப்பானது கூறப்பட்ட மேல்முறையீட்டினை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நேரத்திற்குள் முடித்து வைத்தல் வேண்டும்.

தீப்பாதுகாப்பு தணிக்கை முகமைகளால் வழங்கப்படும் தீப்பாதுகாப்புச் சான்றிதழ்.

28. (1) நேர்விற்கேற்ப, B வகை கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் எவரும், தீப்பாதுகாப்புச் சான்றிதழ் பெறும் நோக்கத்திற்காக, அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு தீப்பாதுகாப்பு தணிக்கை முகமையிடம் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் முறையிலும், விண்ணப்பம் செய்தல் வேண்டும்:

வரம்புரையாக, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்துவரும் எந்தவொரு கட்டடத்திற்கு இந்தச் சட்டத்தின் கீழ் தீயணைப்பு பாதுகாப்புச் சான்றிதழ் தேவைப்படுகிறதோ, அந்தக் கட்டடம் ஒவ்வொன்றையும் பொறுத்த வரையில், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து நூற்று எண்பது நாட்களுக்குள் விண்ணப்பம் செய்யப்படுதல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, அத்தகைய கட்டடம், 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு பணிகள் சட்டத்தின்படி செல்லுபடியாகும் தீயணைப்பு உரிமத்தை கொண்டிருப்பின், விண்ணப்பம், அத்தகைய தீயணைப்பு உரிமம் முடிவுறும் தேதிக்குள் அல்லது இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து நூற்று எண்பது நாட்களுக்குள், இவற்றில் எது பிந்தியதோ அதற்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 40/1985

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஒவ்வொரு விண்ணப்பமும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணம் மற்றும் அத்தகைய ஆவணங்களுடன் சேர்த்து இருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றவுடன், அங்கீகரிக்கப்பட்ட தீப்பாதுகாப்பு தணிக்கை முகமையானது, கட்டடத்தில் தீப்பாதுகாப்பு ஏற்பாடுகளைப் புறநிலை மதிப்பீடு செய்தல் மற்றும் நிகழக்கூடிய இடர்ப்பாடு எவையேனும் இருப்பின், அவற்றை குறைப்பதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல் வேண்டும்; மற்றும் பரிந்துரைக்கு இணங்கிய பின்பு மட்டுமே, தீப்பாதுகாப்பு தணிக்கை முகமையானது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் தீயணைப்புப் பாதுகாப்புச் சான்றிதழை வழங்கலாம்.

(4) இந்தப் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ், அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும்.

(5) சான்றிதழ் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவதன் பேரிலும், அத்தகைய முறையிலும், அத்தகைய காலஅளவிற்கும் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், 27 ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள இணையவழி வாயிலில், அத்தகைய முகமையால் வழங்கப்பட்ட தீப்பாதுகாப்புச் சான்றிதழை, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் பதிவேற்றம் செய்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வளாகத்தின் முக்கியமான இடத்தில் அச்சான்றிதழை காட்சிப்படுத்துதலும் வேண்டும்.

சுயசான்றிடப்பட்ட தீப்பாதுகாப்பு நெறிமுறை.

29. (1) நேர்விற்கேற்ப, C வகை கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் எவரும், சுயசான்றிடப்பட்ட தீப்பாதுகாப்பு நெறிமுறையைப் பெறுவதன் நோக்கத்திற்காக 27 ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள இணையவழி வாயிலில் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய ஆவணங்களுடன் சேர்த்து அத்தகைய முறையில், அத்தகைய மின்னணுப் படிவத்தில், விண்ணப்பித்தல் வேண்டும்:

வரம்புரையாக, இந்தச் சட்டத்தின்கீழ் சுய சான்றிடப்பட்ட தீ பாதுகாப்பு நெறிமுறை தேவைப்படும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியில் இருக்கும் அத்தகைய கட்டடம் எதனையும் பொறுத்தவரையில், அவை, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து நூற்று எண்பது நாட்களுக்குள் விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ், பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மைத்தன்மைக்கு உட்பட்டு, சுய சான்றிடப்பட்ட தீப்பாதுகாப்பு நெறிமுறையானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும், இணைய வழியில் வழங்கப்படுதலும் தானே உருவாக்கப்படுதலும் வேண்டும்.

(3) நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், வளாகத்தின் முக்கியமான இடத்தில் சுய சான்றிடப்பட்ட தீப்பாதுகாப்பு நெறிமுறையை காட்சிப்படுத்துதல் வேண்டும்.

(4) நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை கூறப்பட்ட நெறிமுறைக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

தற்காலிக தீயணைப்பு உரிமம்.

30. (1) நேரடி நிகழ்ச்சிகள், கண்காட்சி, கேளிக்கைகள் அல்லது விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகள் எதிலும், தீப்பற்றக்கூடிய அல்லது அபாயகரமான பொருட்களைப் பயன்படுத்தினாலும் பயன்படுத்தப்படாவிட்டாலும் தற்காலிக தீயணைப்பு உரிமம் இல்லாமல் நடத்தப்படுதல் ஆகாது.

(2) நிகழ்விடம் அல்லது களம் முழுவதின் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் எவரும், தற்காலிக தீயணைப்பு உரிமத்தைப் பெறும் நோக்கத்திற்காக, 27 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இணைய வலைவாயில் மூலம் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய மின்னணு படிவத்தில், அரசால், இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய அலுவலரிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணம் மற்றும் அத்தகைய சான்றிதழுடன் சேர்த்து இருத்தல் வேண்டும்.

(4) அத்தகைய விண்ணப்பத்தைப் பெற்றதன் பேரில், இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், நிகழ்விடம் அல்லது களம் ஆகியவற்றை ஆய்வு செய்தும் விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்தும் தற்காலிக தீயணைப்பு உரிமம் வழங்கப்பட வேண்டும் அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய மின்னணு வடிவிலும் முறையிலும் அத்தகைய காலத்திற்குள் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக அத்தகைய தற்காலிக தீயணைப்பு உரிமத்தை வழங்க மறுத்தல் வேண்டும்.

(5) இந்தப் பிரிவின்கீழ் வழங்கப்படும் தற்காலிக தீயணைப்பு உரிமம், அந்த உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றுதலுக்கு உட்பட்டு, உரிமத்தில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய காலத்திற்குச் செல்லுபடியாதல் வேண்டும். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் நிகழ்விடம் அல்லது களத்தின் முக்கியமான இடத்தில் தற்காலிக தீயணைப்பு உரிமத்தை காட்சிப்படுத்துதல் வேண்டும்.

(6) நிகழ்ச்சி ஏற்பாட்டாளர், தற்காலிக தீயணைப்பு உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கத் தவறினால், அலுவலர், நிகழ்ச்சி ஏற்பாட்டாளருக்குக் கேட்பதற்கான ஒரு வாய்ப்பை வழங்கிய பிறகு, அந்த உரிமத்தை இடைநிறுத்தம் அல்லது இரத்து செய்யலாம்.

(7) (4) ஆம் உட்பிரிவு அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் இடருற்ற நபரெவரும், அத்தகைய ஆணைக்கு எதிராக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள், அத்தகைய மின்னணுப் படிவத்திலும் முறையிலும், இதன்பொருட்டு, அரசால் அறிவிக்கை செய்யப்பட வேண்டிய மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் முன்பு மேல்முறையீட்டைத் தாக்கல் செய்யலாம்.

(8) மேல்முறையீட்டு அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் கூறப்பட்ட மேல்முறையீட்டைத் தீர்வு செய்தல் வேண்டும்.

தீத்தடுப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு வகைசெய்வதற்கான உரிமையாளர் அல்லது குடியிருப்பவரின் பொறுப்பு.

**31.** (1) அவ்வப்போது திருத்தம் செய்யப்படும் இந்திய தேசிய கட்டட விதித் தொகுப்பின் வகைமுறைகளுக்கு அல்லது ஏதேனும் பிற சட்டம் அல்லது துணை விதி அல்லது இந்தச் சட்டத்தில் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தீ பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு குந்தகமின்றி, இந்தச் சட்டத்தால் வகைப்படுத்தப்பட்ட ஒரு கட்டிடத்தில் தனியாகவோ அல்லது கூட்டாகவோ பொறுப்புடைய உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், அதில் தீத்தடுப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு வகை செய்தல் வேண்டும்.

(2) நேர்விற்கேற்ப, அத்தகைய உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், வகுத்துரைக்கப்படலாகும் தீத்தடுப்பு உயிர்ப் பாதுகாப்பு அமைப்புகளுக்கு வகைசெய்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் விளக்கக் குறிப்புகளில் தீத்தடுப்பு மற்றும் உயிர்ப் பாதுகாப்பு அமைப்புகளைச் செயல்பாட்டிலுள்ள நிலையில் பராமரித்தல் வேண்டும்.

(3) நேர்விற்கேற்ப, கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் தீயைத் தடுக்க அல்லது அணைப்பதற்குத் தனது கட்டடத்தில் தீப்பாதுகாப்பு அமைப்புகள் பொருத்தப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

(4) எந்தவொரு நபரும், அத்தகைய கட்டடத்திலோ அல்லது அதன் பகுதியிலோ நிறுவப்பட்ட எந்தவொரு தீத்தடுப்பு மற்றும் உயிர்ப் பாதுகாப்பு உபகரணங்களையும் சேதப்படுத்தவோ, மாற்றவோ, அகற்றவோ அல்லது சிதைக்கவோ அல்லது சேதத்தை ஏற்படுத்தவோ அல்லது வேறு எந்த நபரையும் அவ்வாறு செய்யத் தூண்டவோ கூடாது.

தீயணைப்புப் பாதுகாப்பு தணிக்கை முகமையை பட்டியலில் சேர்த்தல்.

32. (1) இந்தச் சட்டத்தின்கீழ், அரசால் வழங்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டதன் சான்றிதழின்றி, நபர் எவருமோ அல்லது நிறுமம் எதுவுமோ தீயணைப்புப் பாதுகாப்பு தணிக்கை முகமையாக செயல்படுதலாகாது.

(2) அரசு, அறிவிக்கை வாயிலாக, தேவை ஏற்படும்போது தீப்பாதுகாப்பு தணிக்கை முகமையை பட்டியலில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை கோரலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவின்கீழ் தீப்பாதுகாப்பு தணிக்கை முகைமையைப் பட்டியலில் சேர்ப்பதற்கான சான்றிதழை வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், 27 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி வாயில் வழியாக அத்தகைய மின்னணு படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணம் மற்றும் அத்தகைய ஆவணங்களுடன் சேர்த்து இருத்தல் வேண்டும்.

(4) அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றவுடன், அரசு, பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில், பட்டியலில் சேர்ப்பதற்கான சான்றிதழை வழங்கலாம் அல்லது அத்தகைய சான்றிதழை வழங்க மறுக்கலாம்.

(5) நபரெவரும் அல்லது நிறுமம் எதுவும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய தகுதிகள் மற்றும் பிற தேவைப்பாடுகளை அவர்கள் கொண்டிருந்தாலன்றி, (4) ஆம் உட்பிரிவின்கீழ் சான்றிதழ் வழங்கப்படுதல் ஆகாது.

(6) (4) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டதற்கான சான்றிதழ், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலஅளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(7) பட்டியலில் சேர்க்கப்பட்டதன் சான்றிதழ் வழங்கப்பட்ட நபரெவரும் அல்லது நிறுமம் எதுவும் இந்தச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகள் எதனையும் மீறியிருப்பதாக அல்லது சான்றிதழின் நிபந்தனைகளுடன் இணங்கத் தவறியிருப்பதாக அல்லது தகுதியின்மை, ஒழுக்கக்கேடு அல்லது மோசடி அல்லது பிற காரணங்கள் எதனாலும் அவர், தகுதியற்றவராக உள்ளார் என நம்புவதற்கு, அரசு காரணம் கொண்டிருப்பின், அரசு, கேட்பதற்கு நியாயமான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, ஆணையின் மூலம் சான்றிதழை இடைநிறுத்தம் அல்லது இரத்து செய்யலாம்.

(8) பட்டியலில் சேர்க்கப்பட்ட ஏதேனும் ஒரு தீயணைப்பு பாதுகாப்பு தணிக்கை முகமை, அத்தகைய சான்றிதழை மோசடியாக வழங்கினால், அந்த முகமைமீது, ஒரு லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படுதல் வேண்டும், மேலும் அந்த கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டு, கொடுங்காயம் அல்லது உயிர் இழப்பு ஏற்பட்டால், தீ விபத்துக்கான காரணம் அத்தகைய மோசடி செயலாக இருந்தால், அந்த முகமைக்கு ஓராண்டு வரை நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனையும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம்.— இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, ‘கொடுங்காயம்’ என்ற சொல், 2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் 116 ஆம் பிரிவின்கீழ் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும். மையச் சட்டம் 45/2023.

(9) இந்தச் சட்டத்தின்கீழ் பட்டியலில் சேர்க்கப்பட்ட தீயணைப்புப் பாதுகாப்பு தணிக்கை முகமை தவிர நபர் எவரும் அல்லது நிறுவனமும், வகுத்துரைக்கப்படலாகும் கண்காணித்தல் பணி அல்லது தீப்பாதுகாப்பு சான்றிதழை வழங்குதல் அல்லது எந்த இடத்திலும் அல்லது கட்டடத்திலும் அல்லது அதன் பகுதி எதிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தகைய பிற தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது.

விளக்கம்.— இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ‘‘நிறுமம்’’ என்பது, கூட்டு நிறுவனம் எதுவும் என்று பொருள்படும் மற்றும் பதிவு செய்யப்பட்டிருப்பினும் இல்லாவிடினும் நிறுமம் அல்லது பிற தனிநபர்களின் கழகத்தை உள்ளடக்கும்.

தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலரின் பணியமர்த்தம் மற்றும் செயற்பணிகள்.

33. (1) அடிப்படையான தீ அபாய வகைகளின்கீழ் அபாயகரமான தொழிற்சாலை அல்லது தொழிற்கூடம், வணிக அல்லது பொதுக் கட்டடங்கள் அல்லது இதன் பொருட்டு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வளாகங்களில் ஆற்றல் வாய்ந்த தீத்தடுப்பு மற்றும் உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்ய, நேர்விற்கேற்ப ஒவ்வொரு உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் அல்லது அத்தகைய உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பவர்களின் சங்கம்,—

(a) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய தகுதிகளைக் கொண்டுள்ள தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலர் ஒருவரை நியமித்தல் வேண்டும்; மற்றும்

(b) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய மின்னணு படிவத்தில் இயக்குநருக்கு அத்தகைய நியமனம் குறித்த இணக்க அறிக்கையை அனுப்புதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ், அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலர் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய மின்னணு படிவத்திலும் அத்தகைய முறையிலும் பெயர் பதிவுச் சான்றிதழ் ஒன்று இயக்குநரால் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவின்படி நியமனம் செய்யப்பட்ட தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலரின் பணியிடமானது, பதவி விலகல் காரணமாகவோ அல்லது பிறவாறாகவோ, காலியாக உள்ள நேர்வில், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் அல்லது அத்தகைய உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பவர்களின் சங்கமானது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

(4) (1) ஆம் உட்பிரிவு அல்லது (3) ஆம் உட்பிரிவுக்கு இணங்கத்தவறும் நேர்வில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், அது குறித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காகவும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் இயக்குநரிடம் அறிக்கையை அனுப்பலாம்.

(5) தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலர், இதன் பொருட்டு அரசால் குறிப்பிடப்படும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநிலப் பயிற்சி மையத்தில் பயிற்சியினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

வரம்புரையாக, நாக்பூர், தேசிய தீயணைப்புப் பணிகள் கல்லூரியில் அல்லது அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட அதற்கு இணையான பிற நிறுவனம் எதிலும், ஏற்கனவே அத்தகைய பயிற்சியினை மேற்கொண்டுள்ள ஒருவர், அத்தகைய பயிற்சி ஒன்றைப் பெறத் தேவைப்படுதல் ஆகாது.

(6) தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலரின் செயற்பணிகள் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

ஆய்வு செய்வதற்கான அதிகாரம்.

34. (1) இயக்குநர் அல்லது உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் மற்றும் அதற்கு மேற்பட்ட படிநிலையில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், இடம் அல்லது கட்டடம் அல்லது அதன் பகுதியில் குடியிருப்பவருக்கு அல்லது குடியிருப்பவர் எவரும் இல்லாதிருக்கும் போது, உரிமையாளருக்கு பன்னிரெண்டு மணிநேர அறிவிப்பு கொடுத்த பின்பு, தீத்தடுப்பு மற்றும் உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் போதியதன்மை அல்லது மீறுகையை உறுதி செய்வதற்கு, அத்தகைய ஆய்வு தேவையானதெனத் தோன்றுமாயின், சூரிய உதயத்திலிருந்து சூரிய மறைவிற்குள் எந்நேரத்திலும் அத்தகைய இடம் அல்லது கட்டடம் அல்லது அதன் பகுதி எதனிலும் நுழைந்து ஆய்வு செய்யலாம்.

வரம்புரையாக, இயக்குநர் அல்லது அத்தகைய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலருக்கு அத்தகைய இடம் அல்லது கட்டடம் அல்லது அதன் பகுதி எதிலும், வேலை நடைபெற்றுக் கொண்டிருக்குமாயின், அல்லது உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு அவ்வாறு செய்வது உகந்தது மற்றும் தேவையானதெனத் தோன்றுமாயின், அவர், எந்நேரத்திலும் அத்தகைய இடம் அல்லது கட்டடம் அல்லது அதன் பகுதி எதிலும் நுழைந்து ஆய்வு செய்யலாம்.

(2) இயக்குநர் அல்லது அத்தகைய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆய்வினை மேற்கொள்வதற்கு, நேர்விற்கேற்ப, அத்தகைய இடம் அல்லது கட்டடம் அல்லது அதன் பகுதி எதனின், உரிமையாளர் அல்லது குடியிருப்பவரால் இயன்றளவிலான அனைத்து உதவிகளும் செய்யப்படுதல் வேண்டும்.

(3) உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் அல்லது பிற நபர் எவரும், இந்தப் பிரிவின்படி ஆய்வுக்காக அதிகாரமளிக்கப்பெற்ற அல்லது உரிமை வழங்கப்பெற்ற ஒரு நபர், எந்தவொரு நிலம் அல்லது கட்டடத்தில் நுழைவதைத் தடுக்கவோ அல்லது தடையை ஏற்படுத்தவோ கூடாது; மற்றும் ஆய்விற்கான அத்தகைய நுழைவிற்குப் பின்னர், அவர்களை தவறாக நடத்துதல் அல்லது துன்புறுத்துதல் கூடாது.

(4) மனிதர்கள் வசிப்பிடமாக பயன்படுத்தப்படும் அத்தகைய இடம் அல்லது கட்டடம் அல்லது அதன் பகுதி எதனுள்ளும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நுழையப்பட்டிருக்குமிடத்து, அதில் குடியிருப்பவர்களின் சமூக மற்றும் மத உணர்வுகளுக்கு உரிய மதிப்பு கொடுக்கப்படுதல் வேண்டும்; பழக்கவழக்க முறைப்படி, பொது வெளியில் தோன்றாத ஏதேனும் பெண்ணின் உண்மையான குடியிருப்பில் உள்ள கட்டடம் அல்லது அத்தகைய கட்டடத்தின் பகுதி எதனிலும் அவ்வாறு நுழைவதற்கு முன்பு, அவர் அவ்விடத்திலிருந்து விலக உரிமை கொண்டுள்ளார் என்று அறிவிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அவர் விலகிச் செல்வதற்குரிய நியாயமான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(5) இயக்குநர் அல்லது அத்தகைய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், இந்தப் பிரிவின்கீழ், இடம் அல்லது கட்டடம் அல்லது அதன் பகுதியின் ஆய்வினை முடித்த பின்னர்,—

(i) தீத்தடுப்பு மற்றும் உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பொறுத்த தேவைகளிலிருந்து விலகிச் செல்லுதல் அல்லது மீறல்கள்; அல்லது

(ii) கட்டடத்தின் உயரத்துடன் வகை செய்யப்பட்டுள்ள அல்லது அது தொடர்பாக வகை செய்யப்பட வேண்டிய அத்தகைய நடவடிக்கைகளின் போதாமை அல்லது இணங்காமை; அல்லது

(iii) அத்தகைய இடத்தில் அல்லது கட்டடத்தில் அல்லது அதன் பகுதி எதிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகளின் தன்மை,

மீதான தனது கருத்தைப் பதிவு செய்து கொண்டு, நேர்விற்கேற்ப, அத்தகைய கட்டடம் அல்லது அதன் பகுதி எதனின், உரிமையாளர் அல்லது குடியிருப்பவருக்கு ஓர் அறிவிப்பை வழங்கி, அந்த அறிவிப்பில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய நேரத்திற்குள் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கட்டளையிடுதல் வேண்டும்.

(6) இந்தப் பிரிவின் முந்தைய வகையங்களின்படி, அத்தகைய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலரால் ஆய்வு மேற்கொள்ளப்படுமிடத்து, அவர், இயக்குநர் அல்லது தொடர்புடைய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி அலுவலர் எவருக்கும், அத்தகைய ஆய்வு எதனையும் குறித்து ஓர் அறிக்கையை அளித்தல் வேண்டும்.

கட்டடங்கள் அல்லது வளாகத்தை மூடி முத்திரையிடுவதற்கான அதிகாரம்.

**35.** (1) 34 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டிருக்குமிடத்து, அல்லது தாமாக முன்வந்து, கட்டடம் அல்லது வளாகம் எதனின் நிலையானது, உயிருக்கு அல்லது சொத்துகளுக்கு ஆபத்து என இயக்குநருக்குத் தோன்றுமிடத்து, இந்தச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குக் குந்தகமின்றி, ஆணையின் மூலம் அத்தகைய கட்டடம் அல்லது வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், அத்தகைய கட்டடம் அல்லது வளாகத்திலிருந்து உடனடியாக வெளியேற்றுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு இணங்கவில்லையெனில், அத்தகைய நபர்களை அந்தக் கட்டடம் அல்லது வளாகத்திலிருந்து வெளியேற்ற, இயக்குநரானவர், அந்தப் பகுதியில் அதிகார வரம்புடைய காவல்துறை அலுவலர் எவருக்கும் கட்டளையிடலாம் மற்றும் அத்தகைய காவல்துறை அலுவலர் அத்தகைய கட்டளைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

(3) நேர்விற்கேற்ப, (1) ஆம் உட்பிரிவு அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் நபர்களை வெளியேற்றிய பின்பு, இயக்குநர், தொடர்புடைய மாவட்டத்தின் கூடுதல் மாவட்ட நடுவருக்கு அறிக்கையொன்றினை அனுப்புதல் வேண்டும். அந்த அறிக்கையின் அடிப்படையில், கூடுதல் மாவட்ட நடுவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், அந்தக் கட்டடம் அல்லது வளாகத்தை மூடி முத்திரையிடுதல் வேண்டும்.

(4) நபரெவரும், கூடுதல் மாவட்ட நடுவரின் ஆணையின்றி, அத்தகைய முத்திரையை அகற்றக்கூடாது.

(5) கூடுதல் மாவட்ட நடுவரின் ஆணையின்றி, அத்தகைய முத்திரையை அகற்றிய நபரெவரும், மூன்று மாதம் வரை நீட்டிக்கப்படலாகும் சிறைத்தண்டனை அல்லது இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் அபராதம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**36.** தீ விபத்து தொடர்பாக தகவல் கொடுக்க சட்டப்படி கட்டுப்பட்டுள்ள எந்தவொரு நபரும், எவ்வித தாமதமுமின்றி அதுகுறித்து அருகில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு அல்லது அரசால் அறிவிக்கை செய்யப்படும் அவசரகால ஏற்புத்தன்மை ஆதரவு அமைப்பிற்கு தகவல் தெரிவித்தல் வேண்டும். தீ விபத்து குறித்த தகவல்.

## அத்தியாயம் VI.
## குற்றங்களும் தண்டத்தொகைகளும்.

**37.** 25, 27 மற்றும் 28 ஆகிய பிரிவுகளின் வகையங்கள் எதனையும் மீறுகிற எந்தவொரு நபரும், இந்தச் சட்டத்தின்படியும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின்படியும் அவருக்கெதிராக எடுக்கப்பட்டுள்ள ஏதேனும் பிற நடவடிக்கைக்கு குந்தகமின்றி, மூன்று மாதங்கள் வரை நீட்டிக்கப்படலாகும் ஒரு காலஅளவிற்கு சிறைத் தண்டனை அல்லது ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் அபராதம் அல்லது இவை இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும், மற்றும் குற்றமானது தொடருமாயின் முதல் தண்டனைத்தீர்ப்பிற்குப் பின்னர் நாள் ஒவ்வொன்றுக்கும் மூவாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் கூடுதல் அபராதத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும். குறித்தசில வகையங்களின் மீறுகைக்கான தண்டத்தொகைகள்.

**38.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கை எது எவ்வாறிருப்பினும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் உறுப்பினர் எவரும்,— கடமையை மீறுவதற்கான தண்டத்தொகை.

(1) இந்தச் சட்டத்தின் வகைமுறை எதையும் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனையும் கடமை மீறுகை அல்லது வேண்டுமென்றே மீறியிருப்பதாக கண்டறியப்பட்டால்; அல்லது

(2) கோழைத்தனமான குற்றவாளியாகக் கண்டறியப்பட்டால்; அல்லது

(3) கடமையிலிருந்து விலகுவது அல்லது அனுமதியின்றி அல்லது குறைந்தது இரண்டு மாத முன்னறிவிப்பு கொடுக்காமல் தனது பதவியிலிருந்து விலகினால்; அல்லது

(4) விடுப்பின் பேரில் வாராமையில் இருந்து, அத்தகைய விடுப்பு முடிவுற்ற பின்பும், எவ்வித நியாயமான காரணமின்றி தன்னை பணியில் ஈடுபடுத்திக்கொள்ள தவறினால்; அல்லது

(5) 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகளின் வகைமுறைகளுக்கு முரணாக, வேறு எந்த வேலையையும் அல்லது பதவியையும் ஏற்றுக்கொண்டாலோ அல்லது ஏதேனும் தொழில் ஒன்றில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டாலோ,

மூன்று மாதங்கள் வரை நீட்டிக்கப்படலாகும் சிறைத்தண்டனை அல்லது அத்தகைய உறுப்பினரின் மூன்று மாத ஊதியத்திற்கு மேற்படாத தொகை வரை நீட்டிக்கப்படலாகும் அபராதம் அல்லது இவை இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**39.** (1) ஒரு கட்டடத்தின் அல்லது வளாகத்தின் உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பவர்கள் எவரும் அல்லது அத்தகைய உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பவர்களின் சங்கம் எதுவும், நேர்விற்கேற்ப, இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி அலுவலரால் இதன்பொருட்டு 33 ஆம் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அறிவிப்பை பெற்ற முப்பது நாட்களுக்குள், தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலர்களை நியமிக்கத் தவறினால், அவர்கள் ஒவ்வொருவரும் கூட்டாகவும் தனித்தனியாகவும் தவறிழைத்தவராகக் கருதப்படுவர். தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலர்களை நியமிக்கத் தவறும் நேர்வில் தண்டத்தொகை.

(2) தீயணைப்புப் பாதுகாப்பு அலுவலரை நியமிக்க பொறுப்புகொண்டுள்ள நபர், தவறிழைத்ததாகக் கருதப்படுகிறபோது, இயக்குநரால் தீர்மானிக்கப்பட்டவாறு, வளாகத்தில் உள்ள பொதுவான பகுதிகளின் வீதம் உள்ளடங்கலாக, அவருக்குச் சொந்தமான அல்லது அவரின் குடியிருப்புப் பகுதியின் சதுரமீட்டர் ஒன்றுக்குப் பத்து ரூபாய்க்குக் குறையாத மற்றும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத தொகையை, ஒவ்வொரு மாதத் தவறுகைக்கும் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றுக்கும் தண்டத்தொகையாக அவரிடமிருந்து வசூலிக்கலாம்.

(3) அவர், அத்தகைய தண்டத்தொகையைச் செலுத்தத் தவறினால், செலுத்த வேண்டிய தொகையானது, நில வருவாய் நிலுவைத் தொகை போன்று அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற முறையில் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

இழப்பீடுச் செலுத்துவதற்கு உரிமையாளரின் பொறுப்பு.

40. (1) நபரெவரின் சொத்தானது, அவர் தன்னுடைய சொந்த அல்லது அவருடைய முகவரின் கவனக்குறைவால் அல்லது வேண்டுமென்ற செய்கையின் விளைவாக தீப்பற்றி, அவர், பிற நபரின் சொத்திற்குச் சேதம் ஏற்படுத்துவாராயின், 17 ஆம் பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் பேரில், அவர், அந்த நபருக்கு இழப்பீடு செலுத்துவதற்கு பொறுப்பு உடையவராவார்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் அனைத்து கோருரிமைகளும், சேதம் எந்தத் தேதியில் விளைவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அந்த மாவட்டத்தின் கூடுதல் மாவட்ட நடுவருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) அந்த மாவட்டத்தின் கூடுதல் மாவட்ட நடுவரானவர், தரப்பினருக்குக் கேட்பதற்கான வாய்ப்பொன்றை அளித்த பின்பு, செலுத்தக்கூடிய இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானித்து மற்றும் இழப்பீட்டுத் தொகையையும் அதற்குப் பொறுப்புடைய நபரையும் குறிப்பிட்டு ஆணை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும். பிறப்பிக்கப்பட்ட ஆணையானது இந்த உட்பிரிவின்கீழ் ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணையின் செயல்திறனைக் கொண்டிருக்கும்.

தகவல் அளிக்க தவறுதல்.

41. தகவல் அளிப்பதற்குச் சட்டத்தின்படி கட்டுப்பட்டிருந்து, நியாயமான காரணமின்றி, தீ விபத்து குறித்து தன்னிடம் உள்ள தகவல்களைத் தெரிவிக்கத் தவறுகிற எந்தவொரு நபரும், ஒரு மாதம் வரை நீட்டிக்கப்படலாகும் ஒரு காலஅளவிற்குச் சாதாரண சிறைத் தண்டனை அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் அபராதம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தவறுதல்.

42. 23 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு தேவைப்பாடுகளுக்கும், நியாயமான காரணமின்றி இணங்கத் தவறுகிற எவரும், பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகை மற்றும் அத்தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பும் மீறுகை தொடருமாயின், அத்தகைய தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பு, நாள் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் கூடுதல் அபராதம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

தீயணைப்பு அல்லது மீட்பு நடவடிக்கைகளை வேண்டுமென்றே இடையூறு செய்வதற்கான தண்டத்தொகை.

43. தீயணைப்பு அல்லது மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடும், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர் எவரையும், வேண்டுமென்றே இடையூறு செய்யக்கூடிய அல்லது குறுக்கிடக்கூடிய நபர் எவரும், மூன்று மாதம் வரை நீட்டிக்கப்படலாகும் சிறைத்தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் அபராதம் அல்லது இவை இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

44. ஒரு விவர அறிக்கை, செய்தி அல்லது பிறவாறாக அத்தகைய அறிக்கையைப் பெற அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரிடமும், தீப் பரவல் ஏற்பட்டுள்ளதாக, அறிந்தே தவறான அறிக்கை அளிக்கிற அல்லது அளிக்கச் செய்கிற எந்தவொரு நபரும், மூன்று மாதம் வரை நீட்டிக்கப்படலாகும் சிறைத்தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் அபராதம் அல்லது இவை இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும். தவறான அறிக்கை.

45. தண்டனை எதற்கும் வகைசெய்யப்பட்டிராத, இந்தச் சட்டத்தின் பிற வகைமுறை எதனையும் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதி அல்லது அறிவிக்கை எதனையும் மீறுகின்ற நபர் எவரும், இந்தச் சட்டம் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின் கீழ் அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட பிற நடவடிக்கை எதற்கும் குந்தகமின்றி, பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகை விதிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பும் மீறுகை தொடருமாயின், அத்தகைய தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பு, நாள் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் கூடுதல் அபராதம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும். மீறுகையின் தண்டத் தொகைக்குரிய பொது வகைமுறை.

46. (1) இச்சட்டத்தின் கீழ் குற்றமொன்று நிறுமத்தால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அக்குற்றம் இழைக்கப்பட்டபோது, அந்நிறுமத்தின் அலுவல் நடைபெறுவதற்கு அந்நிறுமத்தின் பொறுப்பிலிருந்த மற்றும் பொறுப்பைக்கொண்டிருந்த ஒவ்வொருவரும், மற்றும் அந்நிறுமமும், அக்குற்றத்தைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படுதல் வேண்டும். நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்.

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரும், அக்குற்றம் தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டிருப்பதாக அல்லது அத்தகைய குற்றத்தை தடுக்க தம்மால் இயன்ற அனைத்தையும் செய்ததாக மெய்ப்பித்தால், அத்தகைய நபருக்கு எந்தவிதமான தண்டனையும் அளிக்கப்படுதல் ஆகாது.

(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் குற்றம் எதுவும் நிறுமத்தால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்தக் குற்றமானது, அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் அனுமதியுடன் அல்லது உடந்தையுடன் அல்லது அவருடைய கவனமின்மை காரணமாக செய்யப்பட்டிருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டால், அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர், அல்லது பிற அலுவலர் அக்குற்றத்தைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்; மற்றும் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படுதல் வேண்டும்.

விளக்கம்.— இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,—

“நிறுமம்” என்பது, ஒரு கூட்டு நிறுவனம் என்று பொருள்படும் மற்றும் ஒரு நிறுவகம் அல்லது பிற தனி நபர்களின் கழகத்தை உள்ளடக்கும்; மற்றும்

“இயக்குநர்” என்பவர், ஒரு நிறுவகத்தைப் பொறுத்தவரையில், நிறுவகத்தில் ஒரு பங்குதாரர் ஆவார்.

குற்றங்களைச் சமரசமாக தீர்த்தல்.

47. (1) 35, 37, 41, 43 மற்றும் 44 ஆம் பிரிவுகளின்கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றச்செயல் எதுவும், குற்றவழக்கைத் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ அத்தகைய அலுவலர்களால் மற்றும் அரசால் அறிவிக்கை வாயிலாக ***தமிழ்நாடு அரசிதழில்*** இதன்பொருட்டு குறிப்பிடக்கூடிய அத்தகைய தொகையைச் செலுத்துவதன் மூலம் சமரசமாக தீர்க்கப்படலாம்:

வரம்புரையாக, அரசாலோ அல்லது அதன் சார்பாகவோ அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பெற்ற எந்தவொரு அலுவலர்களாலோ பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு, ஆணை அல்லது கோரிக்கைகளுக்கு இணங்கத் தவறுவதால் செய்யப்பட்ட குற்றம் எதுவும், இணங்கி நடக்க முடியுமாயின், அவ்வாறாக இணங்கி நடக்கும் வரை சமரசமாக தீர்க்கப்படுதல் ஆகாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றமொன்று சமரசமாக தீர்க்கப்படும்போது, குற்றவாளி, காவலில் இருந்தால், விடுவிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய குற்றத்தைப் பொறுத்து, அவருக்கு எதிராக கூடுதல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் ஆகாது.

மீறுகைகளைச் சமரசமாக தீர்த்தல்.

48. (1) 42 மற்றும் 45 ஆம் பிரிவின்கீழ் அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதி எதனின் மீறுகை எதுவும், தீர்ப்பு நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ, ஆனால் தண்டத்தொகை விதிக்கப்படுவதற்கு முன்பு, அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அந்த அலுவலரால் குறிப்பிடப்படலாகும் அத்தகைய தொகையைச் செலுத்துவதன் பேரில், இதன் பொருட்டு, அரசால் அதிகாரமளிக்கப்படலாகும் அத்தகைய அலுவலரால் சமரசமாக தீர்க்கப்படலாம்:

வரம்புரையாக, அவ்வாறு சமரசமாக தீர்க்கப்பட்ட மீறுகைக்கான அத்தகைய தொகையானது, எந்நேர்விலும், இந்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படலாகும் அதிகபட்ச தண்டத்தொகைக்கு மேற்படுதல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ், மீறுகை எதுவும் சமரசமாக தீர்க்கப்பட்டபோது, அவ்வாறு சமரசமாக தீர்க்கப்பட்ட மீறுகையைப் பொறுத்து, இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எதுவும் தொடங்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடத்தப்படுதலோ கூடாது.

தீர்ப்பளிக்கும் அலுவலர்.

49. (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின்கீழ் தண்டத்தொகைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய முறையில் விசாரணையை நடத்தவும் தண்டத்தொகையை விதிக்கவும், மாவட்ட தீயணைப்பு அலுவலர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவரைத் தீர்ப்பளிக்கும் அலுவலராக நியமிக்கலாம்:

வரம்புரையாக, அரசானது, தேவைப்படலாகும் எண்ணிக்கையில் தீர்ப்பளிக்கும் அலுவலர் பலரை நியமிக்கலாம்.

(2) தீர்ப்பளிக்கும் அலுவலரின் கருத்தில், விசாரணையின் பொருட்கூறுகளுக்குப் பயனுள்ளதாகவோ அல்லது அதற்கு தொடர்புடையதாகவோ இருக்கும் எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்ய அல்லது சாட்சியம் அளிக்க, வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நன்கு அறிந்த நபரெவரையும், தீர்ப்பளிக்கும் அலுவலர், அழைப்பாணை விடுத்து வருகை தருமாறு கட்டாயப்படுத்தலாம் மற்றும் அத்தகைய விசாரணையின் பேரில், தொடர்புடைய நபர், 48 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட வகைமுறைகள் அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகள் எதனையும் இணங்கத் தவறினார் என அவர் மனநிறைவடைந்தார் எனில், அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய தண்டத்தொகையை விதிக்கலாம்:

வரம்புரையாக, தொடர்புடைய நபருக்குக் கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்காமல் அத்தகைய தண்டத்தொகை எதுவும் விதிக்கப்படுதலாகாது.

50. 49 ஆம் பிரிவின்கீழ் தண்டத்தொகை விதிக்கப்பட்டிருப்பின், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வைப்பீடு செய்யப்படாவிட்டால், நிலுவைத் தொகையானது நில வருவாயின் நிலுவைத் தொகை போன்று அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற முறையில் வசூலிக்கப்படுதல் வேண்டும். நிலுவைகளை வசூலித்தல்.

51. இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனின் விளைவாக நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்ய கருதப்பட்ட எதனையும் பொறுத்து, எந்தவொரு நபருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்றவியல் வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படுதல் ஆகாது. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

52. இயக்குநர் அல்லது அவரால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலரிடமிருந்து பெறப்பட்ட தகவலின் பேரில் அல்லாமல், இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின்படி தண்டனைக்குரிய குற்றவியல் எதனையும் நீதிமன்றம் எதுவும், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது. குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

53. நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இந்தச் சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய எந்தவொரு குற்றத்தையும் விசாரித்தல் வேண்டும். நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு.

## அத்தியாயம் VII
## மேல்முறையீடு.

54. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பு அல்லது ஆணை அல்லது பணிப்புரை எதனாலும் இடருற்ற நபரெவரும், அந்த அறிவிப்பு அல்லது ஆணை அல்லது பணிப்புரை அவருக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், இதன் பொருட்டு அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பிடம் அத்தகைய அறிவிப்பு அல்லது ஆணை அல்லது பணிப்புரைக்கு எதிராக வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய மின்னணு வடிவத்தில் மேல்முறையீட்டினைத் தாக்கல் செய்யலாம் மற்றும் அரசானது அது பொருத்தமெனக் கருதலாகும் பல மேல்முறையீட்டு அதிகாரஅமைப்புகளை நியமிக்கலாம். மேல்முறையீடு.

(2) மேல்முறையீட்டாளர், உரிய காலத்தில் மேல்முறையீடு செய்வதிலிருந்து போதிய காரணங்களால் தடுக்கப்பட்டார் என அது மனநிறைவு கொள்கிறவிடத்து, கூறப்பட்ட காலஅளவிற்குப் பின்னரும், செய்யப்பட்ட ஒரு மேல்முறையீட்டினை ஏற்றுக்கொள்ளலாம்.

(3) மேல்முறையீட்டு அதிகாரமைப்பானது, மேல்முறையீட்டாளருக்குக் கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நேரத்திற்குள் முடிவு செய்தல் வேண்டும்.

(4) மேல்முறையீடானது நிலுவையிலுள்ளபோது, மேல்முறையீட்டு அதிகாரமைப்பானது அந்த அறிவிப்பு அல்லது ஆணை அல்லது பணிப்புரை எதுவும் மேல்முறையீடு முடித்துவைக்கும் வரையில் செயல் விளைவு அளிக்காது என ஆணையிடலாம்.

சீராய்வு.

**55.** (1) அரசு அல்லது இதன் பொருட்டு அறிவிக்கையின் மூலம் அரசால் அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் எவரும் அவர்களது அல்லது அவரின் சொந்த முடிவினாலோ அல்லது இணையவழி விண்ணப்பத்தின் பேரிலோ, இந்தச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது அறிவிப்பு அல்லது பணிப்புரை எதனையும் பொறுத்து, அழைப்பாணை விடுத்து பதிவுகளை ஆய்வு செய்யலாம் மற்றும் அவர்கள் அல்லது அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஆணைகளைப் பிறப்பிக்கலாம்:

வரம்புரையாக, இந்தப் பிரிவின்கீழ் அதிகாரங்களைச் செயல்படுத்துவதற்காக, அரசிடம் அல்லது கூறப்பட்ட அதிகார அமைப்பிடம் செய்யப்படும் ஒவ்வொரு இணையவழி விண்ணப்பமும், அது தொடர்பான ஆணை விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும்.

(2) நபரொருவருக்கும், ஊறுவிளைவிக்கின்ற ஆணை எதுவும், அவர் தனது விண்ணப்பத்தைச் செய்வதற்கான நியாயமான வாய்ப்பொன்றை அவருக்கு வழங்கப்பட்டாலன்றி பிறப்பிக்கப்படுதலாகாது.

(3) நேர்விற்கேற்ப, அரசோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரோ, (1) ஆம் உட்பிரிவின்கீழ், அவரின் அல்லது அவர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தும் வகையில், கூறப்பட்ட ஆணை அல்லது அறிவிப்பு அல்லது பணிப்புரையினை நிறுத்தி வைக்கலாம்.

## அத்தியாயம் VIII

## கட்டணம் மற்றும் பிற செலவினங்களை விதித்தல்.

மாநில எல்லைகளுக்கு அப்பால் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையை ஈடுபடுத்து வதற்கான கட்டணம் மற்றும் நிலுவைத் தொகையை வசூலித்தல்.

**56.** (1) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர்களை, இம்மாநிலத்தின் எல்லைகளுக்கு அப்பால், அனுப்புமிடத்து, மாநில அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பு அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அதிகாரஅமைப்பின் வேண்டுகோளின் பேரில், தீயை அணைப்பதன் பொருட்டு அனுப்பப்பட்டால், அத்தகைய வேண்டுகோள் விடுக்கும் அதிகாரஅமைப்பானது, இதன்பொருட்டு, அவ்வப்போது அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்தைச் செலுத்த பொறுப்பு கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட கட்டணமானது, இயக்குநரால் ஒரு கோரிக்கை அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட ஒரு மாத காலத்திற்குள், நேர்விற்கேற்ப, அத்தகைய அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பு அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அதிகாரஅமைப்பினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய அதிகார அமைப்பு, இந்தச் சட்டத்தின்கீழ் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தத்தவறுமிடத்து, நில வருவாயின் நிலுவைகள் போன்று அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வசூல் செய்யப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் IX

## பல்வகை.

பிற தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகளுடன் பரஸ்பர தீயணைப்பு ஏற்பாடுகள்.

**57.** தீயணைக்கும் நோக்கத்திற்காக, பணியாளர்கள் அல்லது உபகரணங்கள் அல்லது இரண்டையும் வழங்குவதற்காக இந்த மாநிலத்தின் எல்லைக்கு அப்பால் அமைந்துள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அல்லது கூறப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளைப் பராமரிக்கும் அதிகாரமைப்பு எதனுடனும் பொது நலன் கருதி, பரஸ்பர அடிப்படையில், அத்தகைய உடன்படிக்கையின் மூலம் வழங்கப்படலாகும் அத்தகைய வரையறை மற்றும் நிபந்தனைகளின் பேரில், இயக்குநர், அரசின் முன் ஒப்புதலுடன், ஓர் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

**58.** இயக்குநர் அல்லது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், பிற அதிகார அமைப்பு எதனின் அல்லது நிறுவனம் எதனின் அல்லது தனிநபரின் தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் அல்லது உடைமைகளைக் கோருமிடத்து, அவர், ஆணையின் மூலம், எந்தவொரு பகுதியிலும் தீயை அணைக்கும் அல்லது ஏதேனும் பிற அவசரநிலை நோக்கத்திற்காக, அத்தகைய உபகரணங்கள் அல்லது உடைமையைக் கோரலாம் மற்றும் நேர்விற்கேற்ப, அவற்றை கூறப்பட்ட அதிகார அமைப்பு அல்லது எந்தவொரு நிறுவனத்திடமிருந்தும் அல்லது தனிநபரிடமிருந்தும், உடைமையில் எடுத்துக் கொள்ளலாம். தீயணைப்பு உடைமைகளைக் கோருதல்.

**59.** தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையினரின் கருவிகள், உபகரணங்கள் மற்றும் பயிற்சி ஆகியவற்றின் காரணமாக எந்தவொரு மீட்பு, அழிவு மீட்பு அல்லது பிற பணிகளில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகளுக்கு ஈடுபடுத்துவது, அரசு அல்லது அவர்களால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவருக்கும், சட்டப்பூர்வமாயிருத்தல் வேண்டும். பிற கடமைகளில் வேலைவாய்ப்பு.

**60.** இதன்பொருட்டு பொது அல்லது சிறப்பு ஆணையினால் அரசால் அதிகாரமளிக்கப்பட்ட தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் இயக்குநர் அல்லது பணியாளர்கள், இந்தச் சட்டத்தின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, குறிப்பிடப்படலாகும் கட்டடத்தின் அல்லது பிற சொத்தின், உரிமையாளர் அல்லது குடியிருப்பவரைக் குறிப்பிடப்படலாகும் அந்தக் கட்டடத்தின் அல்லது பிற சொத்தின் தன்மை தொடர்பான தகவல்களை வழங்க கோரலாம், கிடைக்கக்கூடிய நீர் வழங்கல்கள் மற்றும் அதனை அணுகுவதற்கான வழிமுறைகள் அல்லது வேறு ஏதேனும் பொருள் விவரங்கள் மற்றும் அத்தகைய உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் தம்மிடம் உள்ள அனைத்து தகவல்களை அளித்தல் வேண்டும். தகவல் பெறும் அதிகாரம்.

**61.** தீயணைப்பு மற்றும் மீட்பு நடவடிக்கை எதிலும் அல்லது தீ அபாயத்தை உள்ளடக்கிய எந்தவொரு சரக்குகளையும் பறிமுதல் செய்தல் அல்லது தடுத்துவைத்தல் அல்லது அகற்றுதல் தொடர்பான பிற ஏதேனும் கடமைகளிலும், இந்தச் சட்டத்தின் கீழ் இயக்குநர் அல்லது அத்தகைய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி அலுவலர், தங்களது கடமைகளை நிறைவேற்றுவதில் உதவுவதும், பங்குகொள்வதும் அனைத்து படிநிலைகளிலுள்ள காவல்துறை அலுவலர்களின் கடமையாயிருத்தல் வேண்டும். காவல் அலுவலர்களின் உதவி.

**62.** (1) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் இம்மாநிலத்தில் இருந்த தமிழ்நாடு தீயணைப்பு பணிகளானது, 3 ஆம் பிரிவின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகளாகவே கருதப்படுதல் வேண்டும். இருந்துவரும் தீயணைப்பு பணிகள் மற்றும் தீயணைப்பு நிலையங் களுக்கான வகைமுறைகள்.

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தில் இருந்த தமிழ்நாடு தீயணைப்புப் பணி அல்லது துணைப் பணியின் பணியாளர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையின் பணியாளர்களாக நியமிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தில் இருந்த தீயணைப்பு பணி நிலையங்கள், மீட்பு பணி நிலையங்கள் மற்றும் பிற கள அமைப்புகள் இந்தச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு உடனடி முன்பு, தமிழ்நாடு தீயணைப்பு துறையின் பணியாளர் எவரிடமும் நிலுவையிலுள்ள நடவடிக்கைகள் அனைத்தும், (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவர் எந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறாரோ அப்பதவியினை வகிப்பவர் என்ற முறையில் அவரது முன்பு நிலுவையிலுள்ளதாகவே கருதப்படுதல் வேண்டும் மற்றும் அது அதற்கிணங்கிய வகையில், கையாளப்படுதல் வேண்டும்.

பணியாளர்கள் அரசு ஊழியர்களாய் இருத்தல்.

**63.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்கீழ் செயல்படுகின்ற தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையின் பணியாளர் ஒவ்வொருவரும், 2023 ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் 2 ஆம் பிரிவின் (28) ஆம் கூறிலுள்ள பொருளின்படி ஓர் அரசுப் பணியாளராக கருதப்படுதல் வேண்டும். மையச் சட்டம் 45/2023.

விவர அறிக்கைகள், விவர அறிவிப்பு, விவரவுரை போன்றவற்றைக் கோருதல்.

**64.** இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள், செயல்பாட்டிலுள்ள பணியாளர்கள் மற்றும் செயல்பாட்டிலுள்ள சார்நிலை பணியாளர் ஆகியோரின் தீத்தடுப்பு மற்றும் தீப்பாதுகாப்பு, மீட்பு நடவடிக்கை, ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும் கடமைகளைப் புரிதல் ஆகியவை தொடர்பான பொருட்கள் எதனைப் பற்றியும், அத்தகைய விளக்க அறிக்கைகள், அறிக்கைகள் மற்றும் விவர அறிக்கைகளை அரசு கோரலாம்; மற்றும் அவை உடனடியாக வழங்கப்படுதல் வேண்டும்.

அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.

**65.** (1) (a) அரசானது, அறிவிக்கையின் மூலம் தமிழ்நாடு அரசிதழில், 67 ஆம் பிரிவின் கீழுள்ள இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம் மற்றும் 68 ஆம் பிரிவின் கீழுள்ள விதிகளைச் செய்வதற்கான அதிகாரம் ஆகியவற்றைத் தவிர, இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அவருக்கு உற்றமைந்த அதிகாரங்கள் எதனையும் செயல்படுத்துவதற்கு, அதிகாரஅமைப்பையோ அல்லது அலுவலர் எவருக்குமோ அதிகாரமளிக்கலாம் மற்றும் அதே வகையில், அத்தகைய அதிகாரமளித்தலை திரும்பப் பெறலாம்.

(b) அரசானது, அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் எவரின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் சீராய்வு செய்வதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (a) இயக்குநரானவர், ஆணையின் மூலம், இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் எதனையும் அல்லது விதிக்கப்பட்ட கடமை எதனையும், அந்த ஆணையில் குறிப்பிடப்படலாகிறவாறு, அத்தகைய சூழ்நிலையில் மற்றும் எவையேனுமிருப்பின் அத்தகைய நிபந்தனைகளின்கீழ் அந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அலுவலர் எவராலும் கூட செயல்படுத்துதலும் புரியப்படுதலும் வேண்டும்.

(b) அரசானது, அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் எவரின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் சீராய்வு செய்வதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

பிற சட்டங்களை விட மீதூர்ந்தியங்கும் தன்மை.

**66.** தீத்தடுப்பு மற்றும் உயிர்ப் பாதுகாப்பு தொடர்பான வகைமுறைகளைப் பொறுத்தவரையில், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளானது, அப்போதைக்கு நடைமுறையிலுள்ள, பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள முரண்பாடு எது எவ்வாறிருப்பினும், மீதூர்ந்த தன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**67.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதையும் செயற்படுத்துவதில், இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஓர் ஆணையின் வாயிலாக, அத்தகைய இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவை அல்லது உகந்தவை என அரசுக்குத் தோன்றுகிற வகைமுறைகளை, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலஅளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

68. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) 67 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது எனச் சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

69. அரசானது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்திறப்படுத்துவதற்கு அரசு தான் உகந்ததெனக் கருதும் அத்தகைய பணிப்புரைகளை அவ்வப்போது இயக்குநருக்கு வழங்கலாம் மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது இயக்குநரின் கடமையாகும். பணிப்புரைகளை வழங்க அரசுக்குரிய அதிகாரம்

தமிழ்நாடு சட்டம் 40/1985. 70. (1) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு பணிகள் (தமிழ்நாடு சட்டம் 40/1985) சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவு மற்றும் காப்புரைகள்.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட சட்டத்தின்படி செயல் எதுவும் அல்லது செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் தொடர்புடைய வகைமுறைகளின்கீழ் தொடரலாம் மற்றும் முடிவடையலாம்.

**நோக்கக்காரண விளக்கவுரை**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையை 13.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிமுகம் செய்தபோது தீ விபத்து மற்றும் தடுக்கப்படக்கூடிய பல்வேறு விபத்துகளால் பெருமளவிலான மனித மற்றும் பொருளாதார இழப்புகள் ஏற்படுகின்றன என்றும், ஆதலால் அதிக தொழில்நுட்பம் சார்ந்த தீ பாதுகாப்பு செயலாக்க நடவடிக்கைகள் மூலம் தீ தடுப்புக்கு இந்த அரசு முக்கியத்துவம் அளிக்கும் மற்றும் செயல்பாட்டு நேரத்தைக் குறைப்பதற்கு அறிவியல்சார் நில வரைப்படத்தின் அடிப்படையில் புதிய தீயணைப்பு நிலையங்களின் அமைவிடங்கள் ஏற்படுத்தப்படும் என தெரிவித்தார். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடைமுறையில் உள்ள 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டம் முழுமையாக மாற்றி அமைக்கப்படும் எனவும் அறிவித்தார். மேற்கூறிய அறிவிப்பிற்கு செயல்விளைவை அளிப்பதற்கு, 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 45/1985) நீக்கறவு செய்து, கூறப்பட்ட நோக்கத்திற்காக, ஒரு புதிய சட்டத்தை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்கூறிய முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க.ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(3), 2(h), 5, 7, 8, 9(2), 10, 11, 13, 14, 15, 16(1), 17, 18, 19, 20, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 47, 48, 49(1), 50, 54, 55, 56(1), 60, 65, 67, 68 மற்றும் 69 ஆகிய பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு, ஆணைகளை பிறப்பிப்பதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**மு.க.ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2025 ஏப்ரல் 28.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 14/2025

### 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தி ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**

**1.** (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) (a) 2, 3, 5, 7, 10 மற்றும் 18 ஆம் பிரிவுகளானது, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) 4, 6 மற்றும் 19 முதல் 23 வரையுள்ள பிரிவுகளானது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(c) மீதமுள்ள அனைத்து பிரிவுகளும், மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/1999.

**4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின், (1–A) ஆம் உட்பிரிவின் (i) கூறில் ''சென்னை மாநகராட்சி'' எனும் சொற்றொடருக்காக, ''பெருநகர சென்னை மாநகராட்சி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**70 ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**3.** முதன்மைச் சட்டத்தின் 70 ஆம் பிரிவின்,—

(1) (1) ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''வரம்புரையாக, குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள், வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டை தாக்கல் செய்யாததற்கு நியாயமான காரணமிருப்பின், அந்த ஆண்டின் பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்போ, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டை மன்றத்தின் முன் தாக்கல் செய்வதற்கு அரசானது, ஆணையாளருக்கு அதிகாரமளிக்கலாம்:

(2) (3) ஆம் உட்பிரிவிற்கு பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''வரம்புரையாக, குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டை ஏற்றுக்கொள்ளாததற்கு நியாயமான காரணமிருப்பின், அந்த ஆண்டின் மார்ச்சு திங்கள் முடிவடையும் அன்றோ அல்லது அதற்கு முன்போ வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டை ஏற்றுக்கொள்வதற்கு அரசானது மன்றத்திற்கு அதிகாரமளிக்கலாம்.''.

**84 ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**4.** முதன்மைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின், (2) ஆம் உட்பிரிவில் உள்ள ''ஓர் அரையாண்டு'' மற்றும் ''ஒரு விழுக்காடு'' எனும் சொற்களுக்காக, முறையே, ''நிதியாண்டு'' மற்றும் ''அரை விழுக்காடு'' எனும் சொற்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

100 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 100 ஆம் பிரிவில், (3) ஆம் உட்பிரிவிற்கான முதலாம் வரம்புரையில், "சென்னை மாநகராட்சி" எனும் சொற்றொடருக்காக, "பெருநகர சென்னை மாநகராட்சி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

102 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 102 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் "மூன்று ஆண்டுகளுக்கு மிகாத" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

109–A எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 109 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"109–A. படகு சவாரிக்கான நடவடிக்கைகளைப் பதிவு செய்தலும் உரிமம் வழங்குதலும்.–** நகராட்சிக்கு சொந்தமான நீர்நிலை எதிலும், துணைவிதிகளில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய முறையில் படகுகளை பதிவு செய்யாமலும் உரிமம் பெறாமலும், பொழுது போக்கிற்காக படகு சவாரி எதுவும் மேற்கொள்ளப்படுதலாகாது.".

114–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** முதன்மைச் சட்டத்தின் 114–A ஆம் பிரிவின் (c) கூறில், "குற்றவியல் நடுவர் முன் தண்டனையின் பேரில், அபராதம்" மற்றும் "அத்தகைய குற்றம்" எனும் சொற்றொடர்களுக்காக, முறையே "தண்டத்தொகைக்காக" மற்றும் "அத்தகைய செயல்" எனும் சொற்றொடர்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

117–Q ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**9.** முதன்மைச் சட்டத்தின் 117–Q ஆம் பிரிவின்,–

(1) 117–Q ஆம் பிரிவானது, அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில் "இந்தப் பிரிவின்" எனும் சொற்களுக்காக, "இந்த உட்பிரிவின்" எனும் சொற்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவுக்கு பின்னர், பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(2) இந்த அத்தியாயத்தில் உள்ள எதுவும் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதி அல்லது ஆணையில் உள்ளடங்கிய எதிலும் மாநில அரசு, மைய அரசு, நகராட்சி அல்லது சட்டப்பூர்வ அமைப்பு அல்லது மாநில அல்லது மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனத்தால் நிறுவப் பெற்றுள்ள எந்தவொரு விளம்பரப்பலகை, மின்னணுத் திரை அல்லது விளம்பர அட்டை ஆகியவற்றிற்குப் பொருந்தாது:

வரம்புரையாக, இந்த உட்பிரிவின்படியான விலக்களிப்பானது, விளம்பரப்பலகை, மின்னணுத் திரை அல்லது விளம்பர அட்டையின், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அளவு மற்றும் தன்மைக்குட்பட்டு இருத்தல் வேண்டும்.".

**10.** முதன்மைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:–

126–A மற்றும் 126–B எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**"126–A. பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளிகளின் பட்டியலின் மாறுபாடு அல்லது திரும்பப்பெறப்படுதல்.–** (1) அரசு, எந்த நேரத்திலும், தாமாக முன்வந்தோ அல்லது தொடர்புடைய நகராட்சி அல்லது ஆர்வமுள்ள நபர் எவரின் வேண்டுகோளின் பேரிலோ, 126 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்டுள்ள பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளிகளின் பட்டியலை மாறுதல் செய்யலாம் அல்லது திரும்பப் பெறலாம்.

(2) அத்தகைய மாறுதலை அல்லது திரும்பப் பெறுதலை, செய்வதற்கு முன்பு, அத்தகைய மாறுபாடு அல்லது திரும்பப் பெறுதல் பற்றிய வரைவை அரசு வகுத்துரைக்கப்பட்ட முறையில் வெளியிடுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய வரைவு எந்தத் தேதியன்று அல்லது அதற்குப் பிறகு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் தேதியைக் குறிப்பிடும் அறிவிப்பு ஒன்றையும் வெளியிடுதல் வேண்டும். மேலும், அத்தகைய வரைவு தொடர்பாக நகராட்சியிடமிருந்தோ அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்பு ஆர்வமுள்ள எவரிடமிருந்தோ பெறப்படும் மறுப்பு அல்லது கருத்துரை எதனையும் அரசு பரிசீலித்தல் வேண்டும்.

**126–B. குறித்த சில நேர்வுகளில் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தல்.–** 126 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பூங்கா, விளையட்டு மைதானம் அல்லது திறந்தவெளி எதனையும், அரசின் முன்அனுமதியின்றி, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியன்று எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டதோ அந்த நோக்கம் அல்லது நோக்கங்களைத் தவிர, பிற எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்துதல் கூடாது.''.

**11.** முதன்மைச் சட்டத்தின் 178 ஆம் பிரிவில், (3) ஆம் உட்பிரிவில், ''தண்டத்தொகையுடன் தண்டிக்கப்படத்தக்கவர்'' எனும் சொற்றொடருக்காக, ''தண்டத்தொகைக்கு பொறுப்புடையவர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

178 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**12.** முதன்மைச் சட்டத்தின் 179–F ஆம் பிரிவில் ''முதலாம் குற்றத்திற்கு அபராதத்துடன் தண்டிக்கப்படத்தக்க'' மற்றும் ''பிந்தைய குற்றம்'' எனும் சொற்றொடர்களுக்கு, முறையே, ''முதலாம் மீறுகைக்கு தண்டத்தொகைக்கு பொறுப்புடைய'' மற்றும் ''பிந்தைய மீறுகை'' ஆகிய சொற்றொடர்கள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

179–F ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**13.** முதன்மைச் சட்டத்தின் 179–G ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''இரண்டாம் குற்றம்'' எனும் சொற்களுக்காக ''இரண்டாம் மீறுகை'' எனும் சொற்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

179–G ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**14.** முதன்மைச் சட்டத்தின் 179–H ஆம் பிரிவில்,–

179–H ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில், ''ஒரு குற்றம்'' மற்றும் ''அத்தகைய குற்றம்'' எனும் சொற்களுக்காக, ''ஒரு மீறுகை'' மற்றும் ''அத்தகைய மீறுகை'' எனும் சொற்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில், ''ஒரு குற்றம்'' மற்றும் ''அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டாலும்'' எனும் சொற்றொடர்களுக்காக, ''ஒரு மீறுகை'' மற்றும் ''அத்தகைய மீறுகைக்காக நீதிமுறையில் தீர்ப்பளிக்க வழக்கு தொடரப்பட்டாலும்'' எனும் சொற்றொடர்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**15.** முதன்மைச் சட்டத்தின் 180 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

180 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

"**180. தண்டத்தொகைகள்.–** இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் அல்லது அவற்றின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது துணை விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகள் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது பணிப்புரை எவற்றையும் மீறுகின்ற நபர் எவரும், இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகைக்கும், தொடர்கின்ற மீறுகையின் நேர்வில், முதல் மீறுகைக்காக தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பு அல்லது முதல் மீறுகையினை சமரசமாக தீர்த்த பின்பு, அத்தகைய மீறுகை தொடர்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் கூடுதல் தண்டத்தொகையை செலுத்துவதற்கு பொறுப்புடையவராதல் வேண்டும்:

வரம்புரையாக, எழுத்து மூலமாக பதிவு செய்யப்படக்கூடிய சிறப்பு மற்றும் போதுமான மாறான காரணம் இல்லாதபோது, இந்தப் பிரிவின்படியான தண்டத்தொகையானது ஐந்நூறு ரூபாய்க்கு குறைவாக இருத்தல் கூடாது.

180–B, 180–C, 180–D மற்றும் 180–E எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**16.** முதன்மைச் சட்டத்தின் 180–A ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**180–B. நீதிமுறையில் தீர்ப்பளித்தல்.–** (1) இயக்குநர், 114–A, 134, 178, 179–F மற்றும் 180 ஆம் பிரிவுகளின்கீழ் தண்டத்தொகைகளை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், அதனின் மீறுகைகளுக்கு விசாரணை நடத்தி தண்டத்தொகை விதிப்பதற்கு, ஓர் அலுவலரை, நீதிமுறையில் தீர்ப்பளிக்கும் அலுவலராக நியமிக்கலாம்:

வரம்புரையாக, தேவைப்படலாகும் அத்தகைய எண்ணிக்கையில், நீதிமுறையில் தீர்மானிக்கும் அலுவலர்கள் பலரை இயக்குநர், நியமனம் செய்யலாம்.

(2) தீர்ப்பளிக்கும் அலுவலர், விசாரணையின் பொருட்பாடு பயனுள்ளதாகின்ற அல்லது தொடர்புடையதாக இருக்கக்கூடியதென அலுவலரின் கருத்துரையிலுள்ள எந்தவொரு சாட்சியத்தை அளிப்பதற்கு அல்லது ஆவணத்தையும் முன்னிலைப்படுத்துவதற்கு, வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நன்கு அறிந்த எந்தவொரு நபருக்கும் அழைப்பாணை விடுத்து அவரின் வருகையை கட்டாயப்படுத்தலாம் மற்றும் அத்தகைய விசாரணையின் பேரில் தொடர்புடைய நபர் 114–A, 134, 178, 179–F மற்றும் 180 ஆம் பிரிவுகளில் சுட்டப்பட்டுள்ள ஏதேனும் வகைமுறைகளுக்கு இணங்கி நடக்க தவறியுள்ளார் என்று அவர் மனநிறைவடைவாராயின், அவர் பொருத்தமெனக் கருதுகின்ற அத்தகைய தண்டத்தொகையை விதிக்கலாம்:

வரம்புரையாக, தொடர்புடைய நபருக்கு விளக்கமளிப்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்காமல், அத்தகைய தண்டத்தொகை எதுவும் விதிக்கப்படுதல் கூடாது.

**180–C. மேல்முறையீடு.–** (1) 180–B ஆம் பிரிவின் கீழ் தீர்ப்பளிக்கும் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் இடருற்ற நபரெவரும், ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், அரசால் அறிவிக்கப்படலாகும் மேல்முறையீட்டு அலுவலரிடம் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மேல்முறையீடு செய்யலாம்:

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர், அந்தக் காலஅளவிற்குள் மேல்முறையீடு செய்யாமலிருப்பதற்குப் போதிய காரணம் இருந்திருக்கிறது என மேல்முறையீட்டு அலுவலர் மனநிறைவடைந்தால், அறுபது நாள் காலஅளவு கழிந்த பின்பும் மேல்முறையீட்டை ஏற்கலாம்.

(2) மேல்முறையீட்டு அலுவலர், மேல்முறையீட்டின் தரப்பினருக்கு விளக்கமளிப்பதற்கான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) மேல்முறையீட்டு அலுவலர், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் மேல்முறையீட்டை முடித்து வைத்தல் வேண்டும்.

**180–D. மீறுகைகளைச் சமரசமாக தீர்த்தல்.–** (1) இந்தச் சட்டத்தின் 114–A, 134, 178, 179–F மற்றும் 180 ஆகிய பிரிவுகளின்கீழ் மீறுகை எதுவும், தீர்ப்பு நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ, ஆனால் தண்டத்தொகை விதிக்கப்படுவதற்கு முன்பு, அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அந்த அலுவலரால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய தொகையைச் செலுத்துவதன் பேரில், இயக்குநரால், இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய அலுவலரால் சமரசம் செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அவ்வாறு சமரசமாக தீர்க்கப்படும் மீறுகைக்கான தண்டத்தொகையானது, எந்நேர்விலும், இந்தச் சட்டத்தின்கீழ் மீறுகைக்காக விதிக்கப்படலாகும் அதிகபட்ச தண்டத்தொகைக்கு மேற்படுதல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ், மீறுகை எதுவும் சமரசமாக தீர்க்கப்படுகின்றபோது, அவ்வாறு சமரசமாக தீர்க்கப்பட்ட மீறுகையைப் பொறுத்து, இந்தச் சட்டத்தின்கீழ் பிற நடவடிக்கை எதுவும் தொடரவோ அல்லது தொடர்ந்து நடத்தப்படவோ கூடாது.

**180–E. வசூலித்தல்.–** நேர்விற்கேற்ப, 180–B பிரிவின் கீழ் அல்லது 180–C பிரிவின்கீழ் தண்டத்தொகை விதிக்கப்பட்டிருப்பின், அது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வைப்பீடு செய்யப்படவில்லையெனில், செலுத்தப்படவேண்டிய தொகையானது, 116–A பிரிவின்கீழ் நிலுவை வரித் தொகையாக வசூலிக்கப்படுதல் வேண்டும்.".

188–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

17. முதன்மைச் சட்டத்தின் 188 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**188–A. நிறுமங்களால் செய்யப்படும் மீறுகை.–** (1) இச்சட்டத்தின் வகைமுறைகள் எதுவும் அல்லது அதன்கீழான விதி, துணை விதி அல்லது செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதி எதுவும் அல்லது அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது பணிப்புரை எதனின் மீறுகை, ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருப்பின், அம்மீறுகையின்போது, அந்நிறுமத்தின் அலுவல் நடைபெறுவதற்கு அந்நிறுமத்தின் பொறுப்பிலிருந்த மற்றும் பொறுப்பைக் கொண்டிருந்த நபர் எவரும், மற்றும் அந்நிறுமமும், அம்மீறுகையைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்தொகைக்கு பொறுப்புடையவராகுதல் வேண்டும்:

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரும், அம்மீறுகை தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டிருப்பதாக அல்லது அத்தகைய மீறுகையை தடுக்க தம்மால் இயன்ற அனைத்தையும் செய்ததாக மெய்ப்பித்தால், அத்தகைய நபருக்கு, இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்பட்ட தண்டத்தொகை எதுவும் விதிக்கப்படுதல் ஆகாது.

(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் மீறுகை எதனையும் நிறுமமொன்று செய்திருக்கிறவிடத்து, அந்த மீறுகையானது, அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் அனுமதியுடன் அல்லது உடந்தையுடன் அல்லது அவருடைய கவனமின்மை காரணமாக செய்யப்பட்டிருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டால், அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர், அல்லது பிற அலுவலர் அந்த மீறுகையைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்தொகைக்கு பொறுப்புடையவராகுதல் வேண்டும்.

விளக்கம்.— இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக,—

(a) நிறுமம் என்பது, எந்தவொரு கூட்டு நிறுவனம் என்று பொருள்படும் மற்றும் ஒரு அறக்கட்டளை, நிறுவகம், சங்கம் அல்லது பிற தனி நபர்களின் கழகத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) “இயக்குநர்” என்பவர்,—

(i) ஒரு நிறுவகத்தைப் பொறுத்தவரையில், நிறுவகத்தில் ஒரு பங்குதாரர் ஆவார்;

(ii) ஒரு சங்கம், ஒரு அறக்கட்டளை அல்லது தனிநபர்களின் பிற கழகத்தைப் பொறுத்தவரையில் சங்கம், அறக்கட்டளை அல்லது பிற கழகத்தின் விதிகளின் கீழ் நேர்விற்கேற்ப சங்கம், அறக்கட்டளை அல்லது பிற கழகத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதற்காக பொறுப்பளிக்கப்பட்ட நபர் என்று பொருள்படும்.".

198 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

18. முதன்மைச் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் A மற்றும் B இனங்களுக்காக, பின்வரும் இனங்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

"A பிரிவு — பெருநகர சென்னை மாநகராட்சி;

B பிரிவு — பெருநகர சென்னை மாநகராட்சி தவிர பிற மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சி மன்றங்கள்.”.

199—B எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

19. முதன்மைச் சட்டத்தின் 199—A ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

“**199—B. பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.—** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல்விளைவு அளிக்க, இந்தச் சட்டத்தின்கீழ் நகராட்சி அல்லது நகராட்சி அதிகாரஅமைப்பு எதற்கும், அரசானது, தான் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய பணிப்புரைகளை அவ்வப்போது வழங்கலாம் மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது நகராட்சி அல்லது நகராட்சி அதிகார அமைப்பின் கடமையாயிருத்தல் வேண்டும்.”.

சென்னை மாநகராட்சிக்கான பொருள்கோள் குறிப்பு.

20. சட்டம் எதிலும் அல்லது அத்தகைய சட்டத்தின்கீழ் அல்லது முதன்மைச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, அறிவிக்கை, செயல்முறை, ஆணை, ஒழுங்குமுறை விதி, துணை விதிகள் அல்லது பிற முறை ஆவணங்களில் எதிலும் உள்ள, "சென்னை மாநகராட்சி", "சென்னையின் மாநகராட்சி" அல்லது "சென்னை மாநகராட்சி" என்று குறிப்பிடப்படுவது, "பெருநகர சென்னை மாநகராட்சி" என்று குறிப்பாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

சட்ட நடவடிக்கைகள்.

21. முதன்மைச் சட்டத்தின் தொடக்க தேதிக்கு உடனடி முன்பு, "சென்னை மாநகராட்சி", "சென்னையின் மாநகராட்சி" அல்லது "சென்னை மாநகராட்சி" ஒரு தரப்பினராக உள்ள சட்ட நடவடிக்கைகள் எதுவும் நிலுவையில் இருக்குமிடத்து, அந்த நடவடிக்கைகளில் "பெருநகர சென்னை மாநகராட்சி" ஒரு தரப்பினராக மாற்றீடு செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**22.** நீதிமன்றம் அல்லது அதிகார அமைப்பு எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் உள்ளடங்கியது எது எவ்வாறிருப்பினும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை வெளியிட்ட 26 அக்டோபர் 2015 ஆம் தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.152—ஆனது 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் IV/1919) அல்லது முதன்மைச் சட்டத்திற்கு இணங்கவில்லை என்ற காரணத்திற்காக மட்டுமே செல்லுபடியாகாது என்று கருதப்படுதல் ஆகாது மற்றும் எப்போதுமே செல்லுபடியாகாது என்று கருதப்படுதலும் ஆகாது மற்றும் *தமிழ்நாடு அரசிதழில்* இச்சட்டம் வெளியிடப்பட்ட தேதிவரையில் மேற்கூறப்பட்ட அரசாணையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயல்கள், செயல்பாடுகள் அல்லது செய்யப்பட்ட செயல்கள் அல்லது மேற்கூறிய அரசாணையின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியன, அனைத்து நோக்கங்களுக்காக, சட்டத்திற்கிணங்கிய வகையில், எப்பொழுதும் ஏற்கத்தக்க வகையில், செய்யப்பட்டது அல்லது எடுக்கப்பட்டதாகவே கருதப்படுதல் வேண்டும்.

அரசாணையின் செல்லுந்தன்மை.

**23.** முதன்மைச் சட்டத்தில் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள ஏதேனும் பிற சட்டம் அல்லது ஆணை அல்லது அறிவிக்கை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது வேறு அதிகார அமைப்பின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்யாததற்கோ அல்லது ஏற்றுக்கொள்ளாமைக்கோ அல்லது படகுசவாரி நடவடிக்கைகளைப் பதிவுசெய்தல் மற்றும் உரிமம் வழங்குதல் அல்லது பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் அல்லது திறந்தவெளிகளை அவை ஒதுக்கப்பட்ட நோக்கத்தைத் தவிர, பிறவற்றிற்காக, மன்றத்தால் அல்லது ஏதேனும் அதிகார அமைப்பினால், 2023 ஏப்ரல் 13 ஆம் நாள் தொடங்கி *தமிழ்நாடு அரசிதழில்* இச்சட்டம் வெளியிடப்பட்ட தேதியுடன் முடிவடையும் காலத்தில், அரசின் ஒப்புதலுடன், செய்யப்பட்ட எல்லாச் செயல்களும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், அனைத்து நோக்கங்களுக்காகவும், இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தைப்போன்று, அத்தகைய செயல்கள் அல்லது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட அனைத்து முக்கிய நேரங்களிலும் நடைமுறையில் இருந்ததைப் போன்று, சட்டத்திற்கிணங்கிய வகையில், எப்பொழுதும் ஏற்கத்தக்க வகையில், செய்யப்பட்டது அல்லது எடுக்கப்பட்டதாகவே கருதப்படுதல் வேண்டும்.

குறித்த சில நடவடிக்கைகளின் செல்லுந்தன்மை.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

அரசு, தொழில் தொடங்குவதை எளிதாக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பெறப்பட்ட முறையீடுகளின் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 9/1999) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட வணிக அல்லது தொழில் உரிமங்கள் வழங்குவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்த உத்தேசித்துள்ளது. மேலும், சொத்து வரி நிலுவைத் தொகையினை தாமதமாக செலுத்துவதற்கான வட்டி விகிதத்தை குறைக்க அரசு உத்தேசித்துள்ளது. மேலும், குற்றமற்ற நடவடிக்கையை நீக்க முன்னெடுத்துச் செல்லும் வகையில், இந்நோக்கத்திற்காக தீர்ப்பு மற்றும் இணக்க வழிமுறைகளை வழங்குவதன் மூலம், இந்த சட்டத்தின்கீழ் வேறு சில சிறு குற்றங்களை குற்றமற்றதாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்சொன்ன நோக்கங்களுக்காக, அரசானது, தமிழ்நாடு சட்டம் 9/1999–ஐ தகுந்தவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.என்.நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1 (2) (c), 7, 9, 10, 16 மற்றும் 19 ஆகிய கூறுகள், குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அல்லது ஆணைகளை வெளியிடுவதற்கு அரசுக்கும், துணை விதிகளைச் செய்வதற்கு மாநகராட்சி மன்றத்திற்கும், நகராட்சி மற்றும் பேரூராட்சி மன்றத்திற்கும் அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**கே.என்.நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 ஏப்ரல் 28.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 15/2025**

## 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தி ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும். *குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.*

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் மூலம் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*தமிழ்நாடு சட்டம் 21 /1994.* 2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 131–A பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும். *131–A பிரிவினை விட்டுவிடுதல்.*

3. முதன்மைச் சட்டத்தின் IX–A அத்தியாயத்திற்கு பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– *IX–B எனும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்தல்.*

### அத்தியாயம் IX-B.

### விளம்பரப்பலகை, மின்னணுத்திரை மற்றும் விளம்பர அட்டை ஆகியவற்றை முறைப்படுத்துதல்.

**198–J. பொருள் வரையறைகள்.–** இந்த அத்தியாயத்தில்,–

(a) "மின்னணுத்திரை" என்பது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அல்லது அரசியல், மதம் அல்லது வகுப்புவாத அமைப்பு, வணிக ஊக்குவிப்பு எதனின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான விளம்பரம் எதனையும் அல்லது தகவல் எதனையுமோ காட்சிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்பட்ட, பொது அல்லது தனியார் இடம் எதிலும் மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட பலகைத் தட்டிகள் எதுவும் எனப் பொருள்படும்;

(b) "விளம்பரப்பலகை" என்பது நிலம் கட்டடம், சுவர் அல்லது கட்டமைப்பு எதனின் மீதும் அல்லது அதன் மீது முழுவதுமோ அல்லது பகுதியாகவோ எழுப்பப்பட்ட கட்டமைப்பு அல்லது பிற தாங்கி அல்லது பொது மக்களுக்கு முழுவதுமாக அல்லது பகுதியாக காட்சிபடுத்தப்பட்ட ஊர்தி உள்ளடங்கலான விளம்பரத்தை காட்சிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தக் கருதப்பட்ட பொது அல்லது தனியார் இடம் எதிலும் வைக்கப்பட்ட மின்னணுத்திரை மற்றும் விளம்பர அட்டை அல்லாத பலகைத் தட்டிகள் அல்லது பிற கட்டமைப்பு எதுவும் என்று பொருள்படும்;

(c) "விளம்பர அட்டை" என்பது, திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அல்லது கூட்டம் அல்லது எந்தவொரு அரசியல், மதம் அல்லது வகுப்புவாத அமைப்பு, வணிக ஊக்குவிப்பு எதனின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான விளம்பரம் எதையும் அல்லது தகவல் எதனையுமோ காட்சிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்பட்ட, பொது அல்லது தனியார் இடம் எதிலும் மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட, எட்டு அடி உயரம் நான்கு அடி அகலத்திற்கு மேற்படாத அளவிலான பலகைத் தட்டிகள் எதுவும் எனப் பொருள்படும்.

**198–K. விளம்பரப்பலகை வைப்பதற்கான ஒழுங்குமுறை–(1)** கிராம ஊராட்சியில் எந்த இடத்திலும் விளம்பரப் பலகை அமைக்க விரும்பும் ஒவ்வொரு நபரும் தனது பெயரை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (கிராம ஊராட்சிகள்) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் அத்தகைய படிவத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

(2) எந்தவொரு விளம்பரப் பலகையையும் நிறுவுவதற்கு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட நபர் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (கிராம ஊராட்சிகள்) உரிமத்திற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில், அத்தகைய விவரங்களை உள்ளடக்கி, அத்தகைய விண்ணப்பக் கட்டணத்துடன் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (கிராம ஊராட்சிகள்) செய்யப்படுதல் வேண்டும்.

(4) வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (கிராம ஊராட்சிகள்), உள்ளூரில் ஆய்வினை செய்த பின்பும் ஆண்டொன்றுக்கு ஒரு சதுர மீட்டருக்கு பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மிகாத வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்தை செலுத்துவதன் பேரிலும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகளுடன் உரிமத்தினை வழங்கலாம்.

(5) வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (கிராம ஊராட்சிகள்), எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யும் காரணங்களுக்காக, உரிமம் வழங்குவதை மறுக்கலாம்:

வரம்புரையாக, விண்ணப்பதாரருக்கு அவரின் முறையீட்டினை வழங்குவதற்கு வாய்ப்பொன்றை வழங்காமல், உரிமமானது மறுக்கப்படுதலாகாது.

(6) (4) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும், மூன்று ஆண்டுகள் காலத்திற்கு செல்லுபடியாகும். மேலும், அது வழங்கப்பட்ட காலஅளவிற்கு மிகாமல் புதுப்பிக்கப்படலாம்.

(7) (1), (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படும் கட்டணத் தொகையானது, வகுத்துரைக்கப்படலாகும் முறையில், தொடர்புடைய கிராம ஊராட்சியின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

**198–L . மின்னணுத் திரைகளையும் விளம்பர அட்டைகளையும் நிறுவியமைப்பதை முறைப்படுத்துதல்.–** (1) விளம்பரம் அல்லது தகவல் எதனையும் காட்சிப்படுத்துவதற்காக மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை எதுவும், கிராம ஊராட்சிக்குள், நபர் எவராலும், செயலாட்சி அலுவலரின் முன்அனுமதி பெறாமல் நிறுவப்படுதலாகாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்படியான அனுமதிக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விளம்பர அட்டை அல்லது மின்னணுத்திரை ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் அத்தகைய விவரங்களை உள்ளடக்கி, மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டையை நிறுவுவதன் தேதிக்கு பதினைந்து நாட்களுக்கு முன்னதாக செயலாட்சி அலுவலரிடம் எழுத்துருவில் செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அரசியல் நிகழ்வின் நேர்வில், அத்தகைய விண்ணப்பமானது மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை நிறுவப்படும் தேதிக்கு குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்பு செய்யப்படுதல் வேண்டும்.

(3) மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை நிறுவுவதற்கான அனுமதியானது, செயலாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு அத்தகைய நோக்கத்திற்காக ஆறு நாட்களுக்கு மேற்படாத அத்தகைய கால அளவிற்கு, வழங்கப்படலாம்.

(4) செயலாட்சி அலுவலர், எழுத்துருவில் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக அனுமதியினை வழங்க மறுக்கலாம்.

(5) அனுமதி பெற்றதற்குப் பின்னர் மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டையை நிறுவுகின்ற ஒவ்வொரு நபரும், அத்தகைய அனுமதி முடிவுற்றதன் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், சுகாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இன்னல் எதுவும் ஏற்படாத வகையில் அதனை அகற்றி அழித்தல் வேண்டும்.

**198–M. உரிமத்தினை இடைநிறுத்தம் அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம்:–** (1) இந்த அத்தியாயத்தின் கீழ் உரிமதாரர் பொறுப்பாகும் பிற தண்டத்தொகை எதற்கும், குந்தகமின்றி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), எந்த நேரத்திலும், எழுத்துப்பூர்வமான ஆணையின் மூலம்,–

(a) அத்தகைய உரிமமானது, மோசடி, தவறான சித்தரிப்பு அல்லது பொருள் விவரங்களை வெளியிட மறுத்தலின் மூலம் பெற்றிருந்தால், அல்லது

(b) உரிமதாரர், வழங்கப்பட்ட உரிமத்திற்குட்பட்டு, இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதனையும் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது நிபந்தனைகள் எதனையும் மீறினால்,

198–K பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட உரிமத்தை இடை நிறுத்தலாம் அல்லது இரத்து செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமம் ஒன்றை இரத்து செய்வதற்கு முன்பு, வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) உரிமதாரருக்கு அவரின் முறையீட்டை செய்வதற்கு வாய்ப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

**198–N. அதிகாரமளிக்கப் பெறாமல் அமைத்த விளம்பரப் பலகை, மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டையை அகற்றுதல்.–** உரிமமொன்று இல்லாமல் அமைக்கப்பட்ட விளம்பரப் பலகை எதனையும் அல்லது அனுமதியின்றி அமைக்கப்பட்ட மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை எதனையும், அறிவிப்பு ஏதுமின்றி நேர்விற்கேற்ப, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அல்லது செயலாட்சி அலுவலரால், அகற்றிப் பறிமுதல் செய்தல் வேண்டும் மற்றும் அகற்றுவதற்கான செலவினை அங்கீகரிக்கப்படாத, விளம்பர பலகை, மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை ஆகியவற்றை அமைத்த நபரிடமிருந்து நிலவருவாயின் நிலுவைத் தொகையாக வசூலித்தல் வேண்டும்.

**198–O. குறித்த சில நேர்வுகளில் விளம்பரப் பலகை, மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டையினை அகற்றுதல்.– (1)** விளம்பரப் பலகை அல்லது மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை எதுவும் உரிமத்தின் கால அளவு முடிவடைந்த பின்னரும் அகற்றாமல் வைக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது உரிமம் அல்லது அனுமதியின் நிபந்தனைகளுக்கு முரணாக அமைக்கப்பட்டிருக்குமிடத்து, நேர்விற்கேற்ப, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அல்லது செயலாட்சி அலுவலர் எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாக, உரிமதாரர் அல்லது அனுமதிப்பெற்றிருப்பவரை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவுக்குள்ளாக, அத்தகைய விளம்பரப் பலகை அல்லது மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டையினை அகற்றுமாறு கோரலாம்.

(2) அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக விளம்பரப் பலகை அல்லது மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை அகற்றப்படாதவிடத்து, நேர்விற்கேற்ப, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அல்லது செயலாட்சி அலுவலர், மேற்கொண்டு அறிவிப்பு கொடுக்காமலேயே, அத்தகைய விளம்பரப் பலகையை அகற்றி மற்றும் அதற்கான செலவினங்களை தொடர்புடைய நபரிடமிருந்து நில வருவாயின் நிலுவைத்தொகையாக வசூலித்தல் வேண்டும்.

**198–P. விலக்களித்தல்,– (1) இந்த அத்தியாயத்தில் அடங்கியுள்ள எதுவும்,–**

(a) அத்தகைய விளம்பரப்பலகை, மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டையானது அமைக்கப்பட்டுள்ள நிலம் அல்லது கட்டடத்திற்குள் அல்லது அதில் மேற்கொள்ளப்படும் வணிகம் அல்லது வர்த்தகம் அல்லது அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தின் விற்பனை அல்லது வாடகைக்கு விடுதல் எதுவும் அல்லது அதன் மீதான விளைவுகள் எதுவும் அல்லது அங்கு அல்லது அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தில் நடைபெறவிருக்கும் விற்பனை, கேளிக்கை அல்லது கூட்டம் எதற்கும்;

(b) அத்தகைய விளம்பரப்பலகை, மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை அமைக்கப்பட்டுள்ள நிலம் அல்லது கட்டடத்தின் பெயர் அல்லது அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தின் உரிமையாளர் அல்லது அனுபவத்திலிருப்பவரின் பெயர்

ஆகியவற்றிற்கு தொடர்புடைய விளம்பரம் எதனையும் காட்சிப்படுத்தும் விளம்பரப் பலகை, மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை ஆகியவற்றிற்குப் பொருந்தாது:

வரம்புரையாக, இந்த உட்பிரிவின்கீழ், விலக்களிப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விளம்பரப்பலகை, மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை ஆகியவற்றின் அளவு மற்றும் தன்மைக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(2) இந்த அத்தியாயத்தில் உள்ளடங்கியுள்ள எதுவும், மாநில அரசு, மைய அரசு, ஊராட்சி அல்லது சட்டப்பூர்வ அமைப்பு அல்லது மாநில அல்லது மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனங்களால் நிறுவப் பெற்றுள்ள விளம்பரப்பலகை, மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை எதற்கும் பொருந்தாது:

வரம்புரையாக, இந்த உட்பிரிவின்கீழான விலக்களிப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் விளம்பரப் பலகை, மின்னணுத் திரை அல்லது விளம்பர அட்டையின் அத்தகைய அளவு மற்றும் தன்மைக்குட்பட்டு இருத்தல் வேண்டும்.

**198–Q. மேல்முறையீடு.– (1)** இந்த அத்தியாயத்தின் கீழ், நேர்விற்கேற்ப, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அல்லது செயலாட்சி அலுவலரால் உரிமம் வழங்குவதற்கு அல்லது புதுப்பித்தலுக்கு மறுத்தல் அல்லது அனுமதி வழங்குதலை மறுத்தல் அல்லது இரத்து செய்தல் ஆகியவற்றின் ஆணைக்கெதிராக, அந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீட்டினை செய்யலாம்.

(2) மேல் முறையீடானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும், படிவத்திலும் மற்றும் அத்தகைய கட்டணத்துடனும் இருத்தல் வேண்டும்.

(3) மேல் முறையீட்டு அதிகார அமைப்பானது, அத்தகைய மேல் முறையீட்டினை பெறுவதன் பேரில், தேவைப்படலாகும் அத்தகைய விசாரணையை செய்த பின்னர் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்கிய பின்னர், அது தக்கதெனக் கருதலாகும் அத்தகைய ஆணையினை பிறப்பிக்கலாம்.

**198–R. ஊராட்சியிடமுள்ள சொத்துகளில் விளம்பரம் செய்வதற்கான உரிமையை வழங்குவதற்கான அதிகாரம்:–** 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி (சிதைவைத் தடுத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1959) அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதனின் வகைமுறைகளுக்குட்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய கட்டணத்தை செலுத்துவதின் பேரில், ஊராட்சியிடம் உள்ள, அல்லது ஊராட்சிக்கு சொந்தமான சொத்துகளில் விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்கு, நேர்விற்கேற்ப, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அல்லது செயலாட்சி அலுவலர், நபர் எவருக்கும் அல்லது நபர்களின் வகைகள் அல்லது நிறுவனம் அல்லது அமைப்பு எதற்கும் உரிமையினை வழங்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஊராட்சிக்கு செலுத்தப்படும் எந்தத் தொகையும், நேர்விற்கேற்ப, 198—K பிரிவு அல்லது 198—L பிரிவின்கீழ் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களுடன் சேர்ந்தாகவும், அதிலிருந்து வேறுபட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவில் உள்ளடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அல்லது தொடர்புடைய செயலாட்சி அலுவலர், எந்தவொரு நபரையும் அல்லது நபர்களின் வகையினரையும் அல்லது ஊராட்சிக்கு சொந்தமான அல்லது அதன் சொந்த செலவில் ஒரு பொதுச் சொத்தை பராமரிக்கும் எந்தவொரு நிறுவனம் அல்லது அமைப்பையும் தங்கள் சொந்த விளம்பரத்தை காட்சிப்படுத்த அனுமதிக்கலாம்.

**198—S. குறித்த சில விளம்பரப் பலகைகளை, மின்னணுத்திரைகளை அல்லது விளம்பர அட்டைகளை வைப்பதற்கான தடை.—** இந்தச் சட்டத்தில் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்பு, தீர்ப்புரை அல்லது ஆணை எதிலும் அடங்கியுள்ளது எவ்வாறிருப்பினும்,—

(a) (i) தடையற்ற மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து இயக்கத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்துவதைப் போன்று சாலையில் போக்குவரத்திற்கு தெளிவாக தெரியக்கூடிய விளம்பரப் பலகை எதுவும் (போக்குவரத்து அடையாளக் குறி மற்றும் சாலை வழிகாட்டியைத் தவிர) பாதுகாப்பான சாலை போக்குவரத்து இயக்கத்திற்கு ஆபத்தாக மற்றும் இடையூறாக இருக்கிறவிடத்து, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) எழுத்து மூலமான அறிவிப்பினால், அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய காலத்திற்குள் உரிமம் பெற்றவரை அல்லது அத்தகைய விளம்பரப் பலகையை வைத்துள்ள நபர் எவரையும் அத்தகைய விளம்பரப் பலகையை அகற்றுமாறு கோருதல் வேண்டும்:

வரம்புரையாக, அத்தகைய காலமானது அத்தகைய அறிவிப்பை வெளியிட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்கு மிகாது இருத்தல் வேண்டும்;

(ii) (i) ஆம் உட்கூறில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரப் பலகையானது, அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்திற்குள் அகற்றப்படாதவிடத்து, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), மேற்கொண்டு அறிவிப்பு கொடுக்காமலேயே, அத்தகைய விளம்பரப் பலகையை அகற்றி மற்றும் அதற்கான செலவினங்களை தொடர்புடைய நபரிடமிருந்து நிலவருவாயின் நிலுவைத்தொகையாக வசூலித்தல் வேண்டும்;

(b) (i) தடையற்ற மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து இயக்கத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்துவதைப் போன்று சாலையில் போக்குவரத்திற்கு தெளிவாக தெரியுமாறுவைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகை அல்லது மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை எதுவும், (போக்குவரத்து அடையாளக் குறி மற்றும் சாலை வழிகாட்டியைத்தவிர) பாதுகாப்பான சாலை போக்குவரத்து இயக்கத்திற்கு ஆபத்தை மற்றும் இடையூறினை ஏற்படுத்த கூடுமென வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அல்லது தொடர்புடைய செயலாட்சி அலுவலர் மனநிறைவு அடைகிறவிடத்து, நேர்விற்கேற்ப, 198—K பிரிவு அல்லது 198—L பிரிவின்படி அவர் உரிமம் அல்லது அனுமதி எதையும் வழங்குதல் கூடாது;

(ii) (i) ஆம் உட்கூறுக்கு முரணாக விளம்பரப் பலகை அல்லது மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டைகள் எதுவும் அமைக்கப்பட்டிருக்கிறவிடத்து, அதனை அறிவிப்பு ஏதுமின்றி வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அல்லது தொடர்புடைய செயலாட்சி அலுவலரால் அகற்றி பறிமுதல் செய்ய வேண்டும் மற்றும் அதற்கான செலவினங்களை தொடர்புடைய நபரிடமிருந்து நில வருவாயின் நிலுவைத்தொகையாக வசூலித்தல் வேண்டும்.

**198–T தண்டத்தொகை.–** இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஆணை எவற்றையும் மீறுபவர் அல்லது இந்த அத்தியாயத்தின் கீழ் அல்லது அத்தியாயத்தால் வழங்கப்பட்ட அதிகாரம் எதனின் சட்டப்பூர்வ செயல்பாட்டினை தடை செய்யும் நபரெவரும், மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாகும் சிறைத் தண்டனை அல்லது இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகை விதித்தோ அல்லது அவை இரண்டும் விதித்தோ தண்டிக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, செயலாட்சி அலுவலரின் அனுமதியின்றி மின்னணுத்திரையை அல்லது விளம்பர அட்டையை அமைக்கின்ற நபர் எவரும், ஓராண்டு வரை நீட்டிக்கப்படலாகும் சிறைத் தண்டனையோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் பணத் தண்டமோ அல்லது அவை இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.''.

220 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் வரம்புரையானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

256–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டத்தின் 256 ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**“256–A. பணிப்புரைகள் வழங்க அரசுக்கு உள்ள அதிகாரம்.–** அரசானது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக, இந்தச் சட்டத்தின்படி ஊராட்சி அல்லது அதிகாரஅமைப்பு எதற்கும் தான் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரைகளை அவ்வப்போது வழங்கலாம் மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது அத்தகைய ஊராட்சி அல்லது அதிகாரஅமைப்பின் கடமையாகும்.''.

**நோக்கக்காரண விளக்கவுரை**

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 172–B பிரிவானது (தமிழ்நாடு சட்டம் 21/1994) விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முறை மற்றும் ஆட்சேபனைக்குரிய விளம்பரங்களை அகற்றும் முறை ஆகியவற்றிற்கான விதிகளை உருவாக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது, ஆனால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் விளம்பரப் பலகைகள், மின்னணுத்திரைகள் அல்லது விளம்பர அட்டைகள் நிறுவுவதை முறைப்படுத்த மேற்கண்ட சட்டத்தில் வகைமுறைகள் எதுவும் இல்லை.

2. எனவே, கூறப்பட்ட நோக்கத்திற்காக, ஒரு புதிய அத்தியாயத்தை உட்புகுத்துவதன் மூலம், ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் விளம்பரப் பலகைகள், மின்னணுத்திரைகள் அல்லது விளம்பர அட்டைகள் நிறுவுவதை முறைப்படுத்துவதற்காக, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 21/1994 ஐ திருத்தம் செய்ய அரசு, முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2), 3 மற்றும் 5 ஆகிய பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது ஆணைகளை பிறப்பிப்பதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**இ. பெரியசாமி,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 ஏப்ரல் 28.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 16/2025

## 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தி ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (48) ஆம் கூறுக்கு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"வரம்புரையாக, இந்தக் கூறின்கீழ் அத்தகைய அறிவிக்கையை வெளியிடுவதற்கு முன்பு, அத்தகைய பகுதியில் வசிப்பவர்களுக்கு அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்புக்கு அல்லது நிறுவனத்திற்கு, முன்மொழிவுக்கு எதிராக காரணத்தைக் காட்டுவதற்கு ஒரு நியாயமான வாய்ப்பை அரசு வழங்க வேண்டும்; மற்றும் அவர்களின் மறுப்புரைகள் அல்லது பரிந்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை பரிசீலனை செய்தல் வேண்டும்.''.

9–A பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 9–A பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (i) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது: –

"(j) சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து ஆணையத்தின் உறுப்பினர்– செயலாளர், பதவிவழி.''.

9–F பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 9–F பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்,–

(1) (a) கூறுக்காக, பின்வரும் கூறுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன :–

(a) நகர்ப்புற திட்ட பரப்பிடத்தின் பெருமளவில் தமது அதிகார எல்லை அமைந்துள்ள மாவட்ட ஆட்சியர், ஆணையத்தின் பதவிவழி தலைவராக இருத்தல் வேண்டும்;

(aa) அரசால் நியமனம் செய்யப்படும் ஆறு நபர்களில்–

(i) மூன்று நபர்கள் அரசு அலுவலர்களாக இருத்தல் வேண்டும்;

(ii) ஒருவர், மாநிலச் சட்டமன்றத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும்;

(iii) ஒருவர், நகர்ப்புற திட்ட பரப்பிடத்தின் வணிகம் மற்றும் தொழிற்துறையை சார்பாற்றம் செய்தல் வேண்டும்; மற்றும்

(iv) ஒருவர், நகர்ப்புற திட்ட பரப்பிடத்தின் பெருமளவில் தமது அதிகார எல்லை அமைந்துள்ள கூடுதல் மாவட்ட ஆட்சியர் படிநிலைக்கு குறையாத ஓர் அலுவலராக இருத்தல் வேண்டும்; அவர் ஆணையத்தின் பதவிவழி உறுப்பினர் செயலாளராக இருத்தல் வேண்டும்;

(2) (c) கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(c) நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்தின் தலைமை திட்டமிடலாளர் அல்லது தலைமை திட்டமிடலாளர் இல்லாதவிடத்து, முதுநிலை திட்டமிடலாளர்;";

(3) (e) கூறிற்கு பின்பு, பின்வரும் கூறுகளானது சேர்க்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

"(f) நகர்ப்புற திட்டமிடல், நகர்ப்புற போக்குவரத்து, நிதி அல்லது சட்டத்துறைகளில் அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய ஒரு வல்லுநர்;

(g) நகர்ப்புற திட்டமிடல் துறையில் ஒரு கல்விசார் நிறுவனத்திலிருந்து அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய ஒரு பிரதிநிதி.".

9–I பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 9–I பிரிவின் (21) ஆம் கூறிற்குப் பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(22) 124 ஆம் பிரிவில்,—

(a) ஓரத்தலைப்பிறக்காக, "நகர்ப்புற வளர்ச்சி குழுமங்கள் தொடர்பாக விதிகளை செய்வதற்கான அதிகாரம்" எனும் ஓரத்தலைப்பானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(1) அரசு, நகர்ப்புற வளர்ச்சிக் குழுமங்கள் தொடர்பாக இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, முன்தேதியிட்டோ அல்லது பின்தேதியிட்டோ விதிகளைச் செய்யலாம்.";

(c) (2) ஆம் உட்பிரிவில்,—

"(i) "ஒழுங்குமுறை விதிகள்" எனும் சொற்களுக்காக, "விதிகள்" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) "திட்டக் குழுமம்" எனும் சொற்றொடருக்காக, அது காணப்படும் இடங்களிலெல்லாம், "நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(iii) (h) கூறிற்குப் பின்பு, பின்வரும் கூறுகளானது சேர்க்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

"(i) நகர்ப்புற வளர்ச்சி ஆணையாளரின் கடமைகளும், செயற்பணிகளும்;

(j) 9–k பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் மேல்முறையீட்டை தாக்கல் செய்யும் முறை.";

(d) (3) ஆம் உட்பிரிவானது, விட்டுவிடப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் II–C ஐ புதிதாக உட்புகுத்துதல்.

6. முதன்மைச் சட்டத்தின் II–B அத்தியாயத்திற்கு பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

## "அத்தியாயம் II-C.
## நகர்ப்புற வளர்ச்சி ஆணையர்.

**9-K. நகர்ப்புற வளர்ச்சி ஆணையர்.**— (1) அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் நகர்ப்புற வளர்ச்சி ஆணையர் ஒருவர் இருத்தல் வேண்டும்; மற்றும் அவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கடமைகளையும் பொறுப்புகளையும் செயற்படுத்துதல் வேண்டும்.

(2) நகர்ப்புற வளர்ச்சி ஆணையரானவர், நகரப்புற வளர்ச்சிக் குழுமங்களின் கீழுள்ள பதவிகளுக்கான பணிநிலையைக் கட்டுப்படுத்தும் அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அந்தப் பணியிடங்களுக்கு நியமனங்கள், பணியமர்த்தல்கள் மற்றும் பணியிட மாறுதல்கள் செய்தல் வேண்டும். பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில், அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய பதவிகளைப் பொறுத்து பணியமர்த்தல்களையும் பணியிட மாறுதல்களையும் அவர் மேற்கொள்ள வேண்டும்.

(3) நகர்ப்புற வளர்ச்சி ஆணையரின் முடிவினால் அல்லது ஆணையால் இடருற்ற நபர் எவரும், ஆணை அல்லது பணிப்புரை பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அரசிடம் மேல்முறையீடு செய்யலாம்.".

7. முதன்மைச் சட்டத்தின் 47–A பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளுக்காக பின்வரும் உட்பிரிவுகளானது மாற்றாக அமைக்கப்படுத்தல் வேண்டும், அவையாவன:– 47–A பிரிவிற்கான திருத்தம்.

"(1) திட்டப் பரப்பிடத்தைத் தவிர பிற பரப்பிடம் ஒன்றில் நிலம் எதிலும் மேம்பாடு எதனையும் மேற்கொள்ள விரும்பும் நபர் எவரும், ***தமிழ்நாடு அரசிதழில்*** அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் இணையவழி ஒற்றைச் சாளர வலைவாயில் மூலம் அத்தகைய மின்னணு படிவத்தில், உள்ளாட்சி அமைப்பின் அனுமதிக்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய ஆவணங்களுடன் விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும்.

(2) உள்ளாட்சி அதிகாரஅமைப்பானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதி வழங்குவதற்கு முன்பு, இயக்குநரின் முன் ஒப்புதலைப் பெறுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்தை அத்தகைய வீதத்தில் வசூலித்தலும் வேண்டும் மற்றும் அத்தகைய அனுமதியானது கூறப்பட்ட இணையவழி ஒற்றைச் சாளர வலைவாயில் மூலம் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய மின்னணு வடிவத்தில் வழங்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, நன்செய் நிலங்களைப் பொறுத்த நேர்வில், தொடர்புடைய மாவட்ட ஆட்சியரின் முன் ஒப்புதல் தேவையானதாகும்.".

8. முதன்மைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவில், "தகுதிவாய்ந்த திட்டக் குழுமத்தின் எழுத்துவடிவிலான அனுமதி" எனும் சொற்றொடருக்காக, "வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய மின்னணு படிவத்தில் வழங்கப்பட்ட தகுதிவாய்ந்த திட்டக் குழுமத்தின் அனுமதி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 48 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

9. முதன்மைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின்,– 49 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில் "வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் மற்றும் அத்தகைய விளக்கங்களைக் கொண்ட மற்றும் அத்தகைய ஆவணங்களுடன், அனுமதிக்காக எழுத்துவடிவில் தகுதிவாய்ந்த திட்டக் குழுமத்திற்கு" எனும் சொற்றொடருக்காக, பின்வரும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுத்தல் வேண்டும், அதாவது:–

"அனுமதிக்காக தகுதிவாய்ந்த திட்டக் குழுமத்திடம், 47–A பிரிவில் சுட்டப்பட்டுள்ள இணையவழி ஒற்றைச் சாளர வலைவாயில் மூலம், அத்தகைய மின்னணு படிவத்தில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய ஆவணங்கள் மற்றும் கட்டணத்துடன்.";

(2) (3) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுத்தல் வேண்டும், அதாவது:—

"(3) தகுதிவாய்ந்த திட்டக் குழுமமானது, நபரெவருக்கும் அனுமதியளிக்க மறுக்குமிடத்து, 47–A பிரிவில் சுட்டப்பட்டுள்ள இணையவழி வலைவாயில் மூலம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய மின்னணு படிவத்தில், அத்தகைய மறுப்பிற்கான காரணங்களை பதிவு செய்து தெரிவித்தல் வேண்டும்.".

112–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

10. முதன்மைச் சட்டத்தின் 112 ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"112–A. நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம் நிறுவப்படுவதால் ஏற்படும் விளைவுகள்:— இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்கீழ் நகர்ப்புற வளர்ச்சி குழுமம் நிறுவப்பட்ட தேதியிலிருந்து, பின்வரும் விளைவுகள் ஏற்படுதல் வேண்டும், அதாவது:—

(i) நகர்ப்புற வளர்ச்சிக் குழுமமானது, நகர்ப்புற திட்டப்பரப்பிடத்திற்கான திட்டக் குழுமமாக இருத்தல் வேண்டும்;

(ii) நகர்ப்புற வளர்ச்சிக் குழுமமானது, நகர்ப்புற திட்டப்பரப்பிடத்தில், இந்தச் சட்டத்தின்கீழ் அதிகாரங்களை செலுத்துதலும், செயற்பணிகளைப் புரிதலும், கடமைகளை ஆற்றுதலும் வேண்டும்;

(iii) நகர்ப்புற திட்டமிடல் பரப்பிடத்திற்குட்பட்ட எந்தவொரு உள்ளாட்சி திட்டக் குழுமமும் கலைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அத்தகைய கலைத்தலின் பேரில்,—

(a) உள்ளாட்சி திட்டக் குழுமத்தால் செய்யப்பட்ட எதுவும் அல்லது வெளியிடப்பட்ட அல்லது செய்யப்பட்ட எந்தவொரு நியமனம், அறிவிக்கை, ஆணை, திட்டம், துணை விதி அல்லது ஒழுங்குமுறை விதி உள்ளடங்கலாக எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது அனுமதி எதுவும், நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்தால் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி செய்யப்பட்டதாக, எடுக்கப்பட்டதாக, உருவாக்கப்பட்டதாக, வெளியிடப்பட்டதாக அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் அவை இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்தால் செய்யப்பட்ட நடவடிக்கை எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படும் வரை தொடர்ந்து நடைமுறையில் இருத்தல் வேண்டும்;

(b) உள்ளாட்சி திட்டக் குழுமத்தால் ஆட்பட்ட அனைத்து கடமைப்பாடுகளும் பொறுப்படைவுகளும், ஈடுபட்ட அனைத்து ஒப்பந்தங்களும், அதனால், அதனுடன் அல்லது அதற்காக செய்யப்படுவதற்கு உள்ளான அனைத்து செயல்களும், நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்தால் ஆட்பட்டதாக, ஈடுபட்டதாக, செய்யப்படுவதற்கு உள்ளானதாக கருதப்படுதல் வேண்டும்;

(c) உள்ளாட்சி திட்டக் குழுமத்திடம் உற்றமைந்துள்ள அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் மற்றும் எத்தன்மையதான இயல்பு மற்றும் வகையினையுடைய அனைத்து நலன்களும், உள்ளாட்சி திட்டக் குழுமத்தால் பயன்படுத்தப்பட்ட, துய்க்கப்பட்ட மற்றும் உடைமையில் கொண்டிருந்த எத்தன்மையதான அனைத்து உரிமைகளும், நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்திடம் உற்றமைதல் வேண்டும்;

(d) உள்ளாட்சி திட்டக் குழுமத்தால் அல்லது அதற்கு எதிராக தொடுக்கப்பட்ட அல்லது தொடுக்கப்பட்டிருக்கக்கூடிய உரிமையியல் வழக்குகள், குற்றவியல் வழக்குகள் மற்றும் பிற சட்டமுறையிலான நடவடிக்கைகள் அனைத்தும் நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்தால் அல்லது அதற்கு எதிராக தொடரப்படலாம் அல்லது தொடுக்கப்படலாம்.''.

## நோக்கக் காரண விளக்கவுரை

நகர்ப்புற வளர்ச்சிக் குழுமங்கள், கட்டமைக்கப்பட்ட முறையில் வளர்ச்சி நடவடிக்கைகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன, இதன்மூலம் வீட்டுவசதி இடர்ப்பாடுகள், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நகர்ப்புற வாசிகளுக்கு ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழல்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை திறம்பட நிர்வகிக்கின்றன. இதன் பொருட்டு, கூறப்பட்ட குழுமத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணி நிபந்தனைகளை நிர்வகிக்க, ஒரு பணிநிலைக் கட்டுப்பாட்டு அலுவலராக, நகர்ப்புற வளர்ச்சி ஆணையரைக் கொண்டிருப்பது அவசியம் என்று அரசு கருதுகிறது.

2. சென்னை பெருநகர திட்டமிடல் பகுதிக்கு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒரு விரிவான மேம்பாட்டு வழிமுறையை அதாவது, ஒரு பெருந்திட்டத்தை தயாரித்து வருகிறது, மேலும் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம் (CUMTA) விரிவான போக்குவரத்து மேம்பாட்டு வழிமுறையை அதாவது, விரிவான இயக்கத் திட்டத்தை தயாரித்து வருகிறது. சென்னை பெருநகர திட்டமிடல் பகுதியின் பொருளாதார வளர்ச்சி, உள்ளடக்கம் மற்றும் சீரான வளர்ச்சியை மேம்படுத்த இந்த இரண்டு திட்டங்களையும் ஒருங்கிணைப்பது அவசியம் ஆகும். எனவே, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்தின் பிரதிநிதி இருப்பது கட்டாயமாகும், ஏனெனில், இது நகர்ப்புற திட்டமிடல் மற்றும் போக்குவரத்து திட்டமிடலின் ஒருங்கிணைப்பைக் கொண்டுவரும். எனவே, சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து ஆணையத்தின் உறுப்பினர்–செயலாளரை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் பதவி வழி உறுப்பினராகச் சேர்க்க அரசு முடிவு செய்துள்ளது.

3. மேலும், கட்டிடத் திட்ட அனுமதி, தளவமைப்பு ஒப்புதல் மற்றும் நில பயன்பாட்டு மறுவகைப்பாடு ஆகியவற்றில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரகம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் பேரூராட்சி இயக்குநரகம் போன்ற பல்வேறு துறைகள் மற்றும் அதிகாரஅமைப்புகளை ஒருங்கிணைத்து ஒற்றைச் சாளர வலைவாயில் உருவாக்கப்பட்டுள்ளது, மற்றும் இது, 01.05.2022 முதல் படிப்படியாக செயல்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, கூறப்பட்ட நோக்கங்களுக்காக மேற்கூறிய சட்டத்தை தக்கவாறு திருத்தம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்கூறிய முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சு. முத்துசாமி,**
*வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு மற்றும்*
*ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1 (2), 5, 6, 7, 8 மற்றும் 9 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, நேர்விற்கேற்ப, விதிகளைச் செய்வதற்கு அல்லது அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**சு. முத்துசாமி,**
*வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு மற்றும்*
*ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 ஏப்ரல் 28.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/2025

## 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தி ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) (i) 5 ஆம் பிரிவின் (i) கூறு மற்றும் 14 ஆம் பிரிவுகளானது 2017 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(ii) 2 ஆம் பிரிவின் (i) கூறு மற்றும் 6 ஆம் பிரிவுகளானது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(iii) மீதமுள்ள அனைத்து பிரிவுகளும், மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக குறித்துரைக்கலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 19/2017.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), 2 ஆம் பிரிவில், —

(i) (61) ஆம் கூறில், ''9 ஆம் பிரிவு'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''இந்தச் சட்டத்தின் அல்லது 2017 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் (மையச் சட்டம் 13/2017) 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(ii) (69) ஆம் கூறில்,—

(a) (c) ஆம் உட்கூறில், ''நகராட்சியின் மேலாண்மை'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''நிதியம்'' எனும் சொல்லானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(b) (c) ஆம் கூறிற்குப் பின்பு, பின்வரும் விளக்கமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

'விளக்கம்.— இந்த உட்கூறின் நோக்கங்களுக்காக—

(a) "உள்ளாட்சி நிதியம்" என்பது, ஊராட்சிப் பகுதி தொடர்பாக குடிமைப் பணிகளை ஆற்றுவதற்காக நிறுவப்பட்டதும், வரி, தீர்வை, சுங்கவரி, மேல்வரி அல்லது கட்டணம் என எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், அவை எதனையும் விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும், பயன்படுத்துவதற்குமான அதிகாரங்களுடன் சட்டப்படி உற்றமைந்துள்ள உள்ளாட்சி அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் அல்லது மேலாண்மையின் கீழ் உள்ள ஏதேனும் நிதியம் என்று பொருள்படும்;

(b) "நகராட்சி நிதியம்" என்பது, ஒரு பெருநகரப் பகுதி அல்லது நகராட்சிப் பகுதி தொடர்பாக குடிமைப் பணிகளை ஆற்றுவதற்காக நிறுவப்பட்டதும், வரி, தீர்வை, சுங்கவரி, மேல்வரி அல்லது கட்டணம் என எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் அவை எதனையும் விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும், பயன்படுத்துவதற்குமான அதிகாரங்களுடன் சட்டப்படி உற்றமைந்துள்ள உள்ளாட்சி அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் அல்லது மேலாண்மையின் கீழ் உள்ள ஏதேனும் நிதியம் என்று பொருள்படும்;';

(iii) (116) ஆம் கூறிற்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

'(116A) "தனித்துவமான அடையாளக் குறியீடு" என்பது 148A பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (b) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள தனித்துவமான அடையாளக் குறியீடு மற்றும் மின்னிலக்கமுறையிலான முத்திரை, மின்னிலக்கமுறையிலான குறியீடு அல்லது தனித்துவமான, பாதுகாப்பான மற்றும் அகற்ற முடியாத ஏதேனும் பிற ஒத்த குறியீடுகளையும் உள்ளடக்கியது;'.

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில், (4) ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

13 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில், (4) ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

17 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவில், (5) ஆம் உட்பிரிவின், (d) கூறில்,—

(i) "தொழிற்சாலை அல்லது இயந்திரத்தொகுதி" எனும் சொற்றொடருக்காக, "தொழிற்சாலை மற்றும் இயந்திரத்தொகுதி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) விளக்கம் என்பது அதனில் விளக்கம் 1 என்று மறு எண்ணிடப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட விளக்கம் 1—க்கு பின்பு, பின்வரும் விளக்கமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"விளக்கம் 2.– (d) கூறின் நோக்கங்களுக்காக, எந்தவொரு நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பிற அதிகார அமைப்பின் எந்தவொரு தீர்ப்பு, தீர்ப்புரை அல்லது ஆணையில் முரணாக எதுவும் இருந்தபோதிலும், "தொழிற்சாலை அல்லது இயந்திரத்தொகுதி" பற்றிய எந்தவொரு சுட்டுகையும், "தொழிற்சாலை மற்றும் இயந்திரத்தொகுதி" பற்றிய சுட்டுகையாக பொருள்கொள்ளப்படுதல் மற்றும் எப்போதும் அவ்வாறே பொருள்கொள்ளப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும் என்று இதன்மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது;".

20 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவில்,—

(i) (1) ஆம் உட்பிரிவில், "9 ஆம் பிரிவு" எனும் சொற்றொடருக்குப் பின்பு, "இந்தச் சட்டத்தின் அல்லது 2017 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் (மையச் சட்டம் 13/2017) 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ்" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

(ii) (2) ஆம் உட்பிரிவில், "9 ஆம் பிரிவு" எனும் சொற்றொடருக்குப் பின்பு, "இந்தச் சட்டத்தின் அல்லது 2017 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் (மையச் சட்டம் 13/2017) 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ்" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

7. முதன்மைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவின் வரம்புரைக்காக, பின்வரும் வரம்புரையானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

34 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"வரம்புரையாக, வழங்குபவரின் வெளியீட்டு வரி கடப்பாட்டில் குறைப்பு எதுவும்,

(i) அத்தகைய பெறுநர் பதிவு செய்யப்பட்ட நபராக இருக்குமிடத்து; அத்தகைய வரவுக் குறிப்பிற்கு காரணமான உள்ளீட்டு வரி வரவு, பெறப்பட்டு, பெற்றுக்கொள்பவரால் மாற்றப்படவில்லையாயின், அல்லது

(ii) பிற நேர்வுகளில், அத்தகைய வழங்கல் மீதான வரி விதிப்பு வேறு எந்த நபருக்கும், மாற்றப்பட்டிருப்பின்,

அனுமதிக்கப்படலாகாது.".

8. முதன்மைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில்,–

38 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) (1) ஆம் உட்பிரிவில், ''தானியங்கி விவர அறிக்கை'' எனும் சொற்றொடருக்காக, ''விவர அறிக்கை'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (2) ஆம் உட்பிரிவில்,–

(a) "தானியங்கி விவர அறிக்கை" எனும் சொற்றொடருக்காக, "சுட்டப்பட்ட விவர அறிக்கை" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (a) கூறில், ''மற்றும்'' எனும் சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(c) (b) கூறில், ''பெற்றுக் கொள்பவரால்'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''உள்ளடங்கலான'' எனும் சொல்லானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(d) (b) கூறிற்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(c) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற விவரங்கள்''.

9. முதன்மைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில், ''மற்றும் அத்தகைய காலத்திற்குள்'' எனும் சொற்றொடருக்காக, ''அத்தகைய காலத்திற்குள், மற்றும் அத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

39 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 107 ஆம் பிரிவில், (6) ஆம் உட்பிரிவின், வரம்புரைக்காக, பின்வரும் வரம்புரையானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

107 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"வரம்புரையாக, எந்தவொரு வரியையும் கோராமல் தண்டத்தொகையினை கோருகின்ற ஆணை ஏதேனும் இருக்கும் நேர்வில், மேல்முறையீட்டாளர், கூறப்பட்ட தண்டத்தொகையின் பத்து விழுக்காட்டிற்கு சமமான தொகையை செலுத்தினாலன்றி, அத்தகைய ஆணைக்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படுதலாகாது.".

11. முதன்மைச் சட்டத்தின் 112 ஆம் பிரிவின், (8) ஆம் உட்பிரிவில், பின்வரும் வரம்புரையானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

112 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"வரம்புரையாக, எந்தவொரு வரியையும் கோராமல் தண்டத்தொகையினை கோருகின்ற ஆணை ஏதேனும் இருக்கும் நேர்வில், மேல்முறையீட்டாளர், 107 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் வரம்புரையின்கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகையுடன் சேர்த்து, கூறப்பட்ட தண்டத்தொகையின் பத்து விழுக்காட்டிற்கு சமமான தொகையும் செலுத்தினாலன்றி, அத்தகைய ஆணைக்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படுதலாகாது." .

122B எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**12.** முதன்மைச் சட்டத்தின் 122A ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

**"122 B. தடமறியும் மற்றும் சுவடறியும் இயந்திர அமைப்புடன் இணங்கத் தவறியதற்கான தண்டத்தொகை.—** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 148A பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின் (b) ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட எவரேனும், கூறப்பட்ட பிரிவின் வகைமுறைகளுக்கு முரணாகச் செயல்படுமிடத்து, அவர், அத்தியாயம் XV—ன் கீழ் அல்லது இந்த அத்தியாயத்தின் வகைமுறைகளின்கீழ் செலுத்தவேண்டிய ஏதேனும் தண்டத்தொகையுடன் சேர்த்து, ஒரு இலட்சம் ரூபாயோ அல்லது அத்தகைய சரக்குகள் மீது செலுத்த வேண்டிய வரியின் பத்து விழுக்காட்டிற்குச் சமமான தொகையையோ இதில் எது அதிகமோ அதை தண்டத்தொகையாகச் செலுத்துவதற்குப் பொறுப்புடையவராகுதல் வேண்டும்.".

148A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**13.** முதன்மைச் சட்டத்தின் 148 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

**"148A. குறித்த சில சரக்குகளுக்கான தடமறியும் மற்றும் சுவடறியும் இயந்திர அமைப்பு.— (1)** அரசானது, மன்றத்தின் பரிந்துரைகளின் பேரில், அறிவிக்கையின் மூலம் இந்தப் பிரிவின் வகைமுறைகளுக்கு பொருந்துகிற,—

(a) சரக்குகள்;

(b) அத்தகைய சரக்குளை உடைமையில் கொண்டுள்ள அல்லது அவற்றைக் கையாளுகிற நபர்கள் அல்லது நபர்களின் வகுப்பினரை குறிப்பிடலாம்.

(2) அரசானது, (1) ஆம் உட்பிரிவின் (a) கூறில் சுட்டப்பட்டுள்ள சரக்குகளைப் பொருத்து,—

(a) தனித்துவமான அடையாளக் குறியீடுகளை ஒட்டுவதற்கும், அதில் அடங்கியுள்ள தகவல்களை அணுகுவதற்கும், மின்னணு முறையில் சேமிப்பதற்கும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நபர்கள் மூலம் ஒரு மின்னணு அமைப்பினை வழங்கலாம்; மற்றும்

(b) அதில் பதிவு செய்யப்பட வேண்டிய தகவல்கள் உட்பட, அத்தகைய சரக்குகளின் தனித்துவமான அடையாளக் குறியீடுகளை வகுத்துரைக்கலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள், வகுத்துரைக்கப்படலாகும்,—

(a) கூறப்பட்ட சரக்குகள் அல்லது அதன் பொதிகளில், அத்தகைய தகவலைக் கொண்ட, ஒரு தனித்துவமான அடையாளக் குறியினை அத்தகைய முறையில் ஒட்டுதல் வேண்டும்;

(b) அத்தகைய காலத்திற்குள் அத்தகைய தகவல் மற்றும் விவரங்களை சமர்ப்பித்தல் மற்றும் அத்தகைய பதிவேடுகள் அல்லது ஆவணங்களை அத்தகைய வடிவத்திலும் முறையிலும் பராமரித்தல் வேண்டும்;

(c) அத்தகைய சரக்குகளை உற்பத்தி செய்யும் வணிக இடத்தில் நிறுவப்பட்ட இயந்திரங்களின் அடையாளம், திறன், செயல்பாட்டின் காலம் உள்ளடங்கலான விபரங்கள் மற்றும் அத்தகைய பிற விவரங்கள் அல்லது தகவலானது அத்தகைய நேரத்திற்குள் மற்றும் அத்தகைய வடிவத்திலும் மற்றும் முறையிலும் சமர்ப்பித்தல் வேண்டும்;

(d) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அமைப்பு தொடர்பாக அத்தகைய தொகையைச் செலுத்துதல் வேண்டும்.''.

III ஆம் இணைப் பட்டியலுக்கான திருத்தம்.

**14.** முதன்மைச் சட்டத்தின் III ஆம் இணைப்பட்டியலில்,—

(i) 8 ஆம் பத்தியில், (a) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''(aa) ஏற்றுமதிகளுக்காக அல்லது உள்நாட்டு வரிக்கட்டணப் பகுதிக்கான அனுமதிக்கு முன்னர் நபர் எவருக்கும், ஒரு சிறப்பு பொருளாதார மண்டலம் அல்லது ஒரு தடையற்ற வர்த்தக சேமிப்புக் கிடங்கு மண்டலத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சரக்குகளினை வழங்குதல்;'';

(ii) 2 ஆம் விளக்கத்தில், ''நோக்கங்களுக்காக'' எனும் சொல்லுக்கு பின்பு, ''(a) கூறின்'' எனும் சொல்லானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(iii) 2 ஆம் விளக்கத்திற்குப் பின்பு, பின்வரும் விளக்கமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''விளக்கம் **3.**— 8 ஆம் பத்தியின் (aa) கூறின் நோக்கங்களுக்காக, முறையே ''சிறப்பு பொருளாதார மண்டலம்'', ''தடையற்ற வர்த்தக சேமிப்புக்கிடங்கு மண்டலம்'' மற்றும் ''உள்நாட்டு வரிக்கட்டணப் பகுதி'' ஆகிய சொற்றொடர்கள், 2005 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டத்தின் (மையச் சட்டம் 28/2005) 2 ஆம் பிரிவில், அவைகளுக்கு குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்''.

வசூலிக்கப்பட்ட வரியை திருப்பிக் கொடுத்தல் ஆகாது.

**15.** 14 ஆம் பிரிவு நடைமுறையிலிருந்த அனைத்து முக்கிய நேரங்களிலும், அவ்வாறு வசூலிக்கப்படாத ஆனால், பிறவாறு வசூலிக்கப்பட்ட அனைத்து வரிகளையும் திருப்பிக் கொடுத்தலாகாது.

**நோக்கக் காரண விளக்கவுரை**

2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமானது, (தமிழ்நாடு சட்டம் 19/2017), மாநிலத்திற்குள் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவ்விரண்டின் வழங்குகைகளின் மீது மாநில அரசால் வரிவிதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் வகைசெய்கிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 55 –வது கூட்டத்தில், மற்றவற்றுக்கிடையில், 2017– ஆம் ஆண்டு மையச் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில், (மையச் சட்டம் 12/2017) திருத்தங்களை மேற்கொள்ள பரிந்துரைத்து, மேற்கூறிய பரிந்துரைகளுக்கு செயல்வடிவம் கொடுக்க, மைய அரசானது, 2025–ஆம் ஆண்டு நிதிச் சட்டத்தின் (மையச் சட்டம் 7/2025) 121 முதல் 134 வரையிலான பிரிவுகள் வழியாக, 2017 ஆம் ஆண்டு மையச் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தை திருத்தம் செய்துள்ளது. கூறப்பட்ட திருத்தத்திற்கேற்ப, 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 19/2017) தக்கவாறு திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். அதற்கிணங்க, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 19/2017–ஐ தக்கவாறு திருத்துவதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி.மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

1. இந்தச் சட்டமுன்வடிவின் 1(2)(iii),8(ii) மற்றும் 13 ஆகிய பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**பி.மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2025 ஏப்ரல் 28.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

2025–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/2025

## 1908-ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தை தமிழ்நாடு மாநிலத்திற்கு பொருந்தும் வகையில், மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

1. இந்திய குடியரசின் எழுபத்தி ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

(1) இந்தச் சட்டம், 2025–ஆம் ஆண்டு பதிவுச் (தமிழ்நாடு திருத்த) சட்டம் என அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச்சட்டம் XVI/ 1908. 2. 1908–ஆம் ஆண்டு பதிவுச்சட்டத்தின் 34 B–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :— 34–C எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

“34–C. அசல் ஆவணங்களை சமர்ப்பித்தல்.– அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் உள்ளடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அசையாச்சொத்து தொடர்பான ஓர் ஆவணம் எந்த பதிவு அலுவலரிடம் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறதோ, அந்த பதிவு அலுவலர் சமர்ப்பிக்கப்படும் தேதிக்கு முன்பு பத்து நாட்களுக்குள் பெறப்பட்ட தொடர்புடைய சொத்தின் வில்லங்கச் சான்றிதழுடன் இணைத்து அவரால் அடையப்பெற்ற தொடர்புடைய சொத்தின் மீதான உரிமையுடைய முந்தைய அசல் ஆவணத்தை, அந்த நிறைவேற்றுபவர் சமர்ப்பித்தாலன்றி, அதனை பதிவு செய்தலாகாது:

வரம்புரையாக, சொத்தின்மீது அடைமானம் தொடர்பான வில்லங்கம், நடப்பிலுள்ளபோது, பதிவு அலுவலர், அடைமானம் பெறுபவரிடமிருந்து தடையில்லா சான்றிதழ் பெறப்பட்டாலன்றி, அத்தகைய ஆவணத்தை பதிவு செய்தல் ஆகாது:

மேலும் வரம்புரையாக, தொடர்புடைய சொத்தினைப் பொறுத்து விற்பனை ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டு, அது நிறைவேற்றப்படாதவிடத்து, மேற்சொன்ன ஒப்பந்தத்தின் குறித்தவகை நிவாரணத்திற்கான உரிமை வழக்கை தாக்கல் செய்வதற்கான கால வரையறை முடிவுற்றாலன்றி, பதிவு அலுவலர் அத்தகைய ஆவணத்தை பதிவு செய்தல் ஆகாது:

மேலும் வரம்புரையாக, தொடர்புடைய சொத்தானது மூதாதையர் சொத்தாக இருந்து, முந்தைய அசல் ஆவணம் இல்லாத நேர்வில், அந்தச் சொத்து தொடர்பாக வருவாய்த் துறையால் வழங்கப்பட்ட பட்டாவானது சமர்ப்பிக்கப்பட்டாலன்றி, பதிவு அலுவலர் அத்தகைய ஆவணத்தைப் பதிவு செய்தல் ஆகாது:

மேலும் வரம்புரையாக, முந்தைய அசல் ஆவணம் தொலைந்து போயிருப்பின், முந்தைய அசல் ஆவணம் தொலைந்து போனதற்கான அறிவிப்பு குறித்து உள்ளூர் நாளிதழில் வெளியிடப்பட்ட விளம்பரத்துடன் சேர்த்து காவல் துறையால் வழங்கப்பட்ட கண்டறிய இயலவில்லை என்பதான சான்றிதழை சமர்ப்பிக்கப்பட்டாலன்றி, பதிவு அலுவலர் அத்தகைய சான்றிதழைப் பதிவு செய்தல் ஆகாது:

மேலும் வரம்புரையாக, அரசு அல்லது சட்டமுறைக் குழுமமானது ஆவணத்தை நிறைவேற்றுபவராக இருக்கும் ஓர் ஆவணத்திற்கு அல்லது அரசால் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படலாகும் ஆவணங்களின் வகைகளுக்கு முந்தைய அசல் ஆவணத்தை சமர்ப்பிப்பது அவசியமாகாது.”.

## நோக்கக்காரண விளக்கவுரை

அசையாச் சொத்துக்கள் தொடர்பாக ஆவணங்களைப் பதிவு செய்வதில் மோசடி, பொய்யாவணம் புனைதல் மற்றும் ஆள்மாறாட்டத்தால் ஏற்படும் ஆபத்துகளில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் பொருட்டு 1908–ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் (மையச் சட்டம் XVI/1908) 69 ஆம் பிரிவினை பயன்படுத்தி 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு பதிவு விதிகளில் 55–A ஆம் விதி உட்புகுத்தப்பட்டுள்ளது. கூறப்பட்ட 55–A ஆம் விதியானது அசல் உரிமைமூல ஆவணம் அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிற பதிவேடுகளை அசையாச் சொத்துகள் தொடர்பாக ஆவணங்களை பதிவு செய்யும் நேரத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டுமென கட்டளையிடுகிறது. ஆவணத்தை நிறைவேற்றும் நபர் தொடர்புடைய அசையாச் சொத்தின் மீது ஒரு உரிமைமூலத்தைக் கொண்டுள்ளாரா என்பதை உறுதிப்படுத்துவதே கூறப்பட்ட விதியின் குறிப்பிட்ட நோக்கமாகும் மற்றும் மோசடியான பரிவர்த்தனைகளை தவிர்க்கும் உட்கருத்தோடு செய்யப்பட்டதாகும்.

2. எனினும், மாண்பமை உச்சநீதிமன்றம் அதன் 07.04.2025 தேதியிட்ட தீர்ப்புரையில், 69 ஆம் பிரிவின் கீழ் விதியைச் செய்யும் அதிகாரத்தை பயன்படுத்தி, 1908 ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக உள்ள ஒரு விதியை உருவாக்க முடியாது என்று தீர்ப்பளித்துள்ளது மற்றும் அதற்கிணங்கியவாறு, கூறப்பட்ட மையச் சட்டம் XVI/1908–ற்கு மீறுகையாக கூறப்பட்ட விதிகளின் 55–A(i) ஆம் விதி உள்ளது என்று மாண்பமை உச்சநீதிமன்றம் விளம்புகை செய்துள்ளது.

3. மேற்கண்ட சூழ்நிலைகளில், அதற்கு சட்டமுறையிலான மீறத்தகா உயர்நிலை வழங்குவதன் மூலம், கூறப்பட்ட 55–A ஆம் விதிக்குப் பின்புலத்தில் உள்ள நோக்கத்தை எய்துவதற்கு மற்றும் ஆவணங்களைப் பதிவு செய்வதில் மோசடி, பொய்யாவணம் புனைதல் மற்றும் ஆள்மாறாட்டம் ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடிய பொதுமக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு, கூறப்பட்ட மையச் சட்டம் XVI/1908–ல் மாநில சட்டத்திருத்தத்தின் வாயிலாக தகுந்த வகையங்களை உட்புகுத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

4. இந்த சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்விளைவை கொடுக்க முனைகிறது.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 ஏப்ரல் 28.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/2025

**கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவி அமைப்பதற்கும் வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

**இந்திய குடியரசின் எழுபத்தி ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-**

### அத்தியாயம்-I.

### முன்னுரை.

குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு கலைஞர் பல்கலைக்கழகச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அரியலூர், நாகப்பட்டிணம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியிருக்கின்ற பரப்பிடத்தை அளாவி நிற்கும்.

(3) இது, இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளவையும், பேணப்பட்டவையும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட நிலை விதிகள், துணைமுறை விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றிற்கிணங்க, இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெறும் அல்லது அதனால் ஒப்பதலளிக்கப் பெறுபவையுமான அனைத்துக் கல்லூரிகளுக்கும், கல்வி நிலையங்களுக்கும் பொருந்துவதோடு, இந்தச் சட்டத்தின்படி, இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருப்பனவாக அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பனவாகக் கொள்ளப்படும் அனைத்துக் கல்லூரிகளுக்கும் கல்வி நிலையங்களுக்கும் கூடப் பொருந்தும்.

(4) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—

(a) "இணைக்கப்பட்ட கல்லூரி" என்பது, இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளதும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டதும் மற்றும் பல்கலைக்கழகத்தின் பட்டங்களுக்கான தேர்வுகளுக்கு அனுமதிப்பதற்கான பாடப்பிரிவு வகைகளுக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி எதுவும் எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்பட்ட கல்லூரி ஒன்றையும் உள்ளடக்கும்;

(b) "குறிக்கப்பட்ட தேதி" என்பது 1 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி, அறிவிக்கையின் வாயிலாகக் குறிப்பிடப்பட்ட தேதி எனப் பொருள்படும்.

(c) ‘‘ஒப்புதலளிக்கப்பெற்ற கல்லூரி’’ என்பது, இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளதும், இப்பல்கலைக்கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதும் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் சிறப்பு பட்டங்கள் மற்றும் பட்டயங்களுக்கான தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுவதற்கான பாடப்பிரிவுகளுக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி எதுவும் எனப் பொருள்படுவதோடு, இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்பெற்ற கல்லூரி ஒன்றையும் உள்ளடக்கும்;

(d) ‘‘தன்னாட்சி கல்லூரி’’ என்பது, நிலைவிதிகளினால் ஒரு தன்னாட்சி கல்லூரி எனப்பெயர் குறிக்கப்பெற்ற கல்லூரி எதுவும் எனப் பொருள்படும்;

(e) ‘‘கல்லூரி’’ என்பது, பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படும் அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்பெற்றுள்ள அல்லது அத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்றும் பல்கலைக்கழகத்தின் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுவதற்கான பாடப்பிரிவுகளுக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி அல்லது கல்வி நிலையம் எதுவும் எனப் பொருள்படும்;

(f) ‘‘அரசு’’ என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(g) ‘‘அரசு கல்லூரி’’ என்பது, இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரி மற்றும் கல்வி நிலையம் ஒவ்வொன்றும் எனப் பொருள்படும்;

(h) ‘‘மாணவர் விடுதி’’ என்பது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்க, இப்பல்கலைக்கழகத்தால் பேணி வரப்பெறும் அல்லது ஏற்பிசைவு அளிக்கப்பெற்றுள்ள, இப்பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் தங்கியிருப்பதற்கான ஓரிடம் எனப் பொருள் பெறுவதோடு, இந்தச் சட்டத்தின் படி இப்பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவு அளிக்கப்பெற்றிருப்பதாகக் கொள்ளப்பெறும் மாணவர் விடுதியொன்றையும் உள்ளடக்கும்;

(i) ‘‘பட்ட—மேற்படிப்பு கல்லூரி’’ என்பது, இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளதும், இப்பல்கலைக்கழகத்தின் பட்டமேற்படிப்பு பிரிவுகளுக்கு வகை செய்கின்ற பட்டமேற்படிப்புப் பிரிவுகளை வழங்குகின்றதுமான ஒரு பல்கலைக்கழக கல்லூரி அல்லது ஓர் இணைக்கப்பட்ட கல்லூரி எனப் பொருள்படும்;

(j) ‘‘வகுத்துரைக்கப்பட்ட’’ என்பது, நிலை விதிகள், துணைமுறை விதிகள், ஒழுங்குமுறை விதிகளினால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(k) ''முதல்வர்'' என்பது, கல்லூரி ஒன்றின் தலைவர் எனப் பொருள்படும்;

(l) ''இணைப்புப் பட்டியல்'' என்பது, இந்தச் சட்டத்திற்காக இணைக்கப்பட்டுள்ள இணைப்புப் பட்டியல் எனப் பொருள்படும்;

(m) ''நிலை விதிகள்'', ''துணை முறை விதிகள்'' மற்றும் ''ஒழுங்கு முறை விதிகள்'' என்பது, முறையே இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டு அல்லது தொடர்ந்து செயலாற்றல் பெற்றிருக்கும் இப்பல்கலைக்கழகத்தின் நிலை விதிகள், துணைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் எனப் பொருள்படும்;

(n) ''ஆசிரியர்கள்'' என்பது, ஆசிரியர்கள் என நிலை விதிகளால் விளம்பப்படக்கூடிய, கல்லூரிகளில் அல்லது ஆய்வுக்கூடங்களில், இணைக்கப்பெற்ற அல்லது ஒப்புதல் அளிக்கப்பெற்ற கல்லூரிகளில் அல்லது மாணவர் விடுதிகளில் கல்வி கற்பிக்கின்ற உதவிப் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள், முதல்வர்கள், இயக்குநர்கள் மற்றும் பிற நபர்கள் எனவும் மற்றும் நூலகர்கள் எனவும் பொருள்படும்;

(o) ''பல்கலைக்கழக ஆசிரியர்கள்'' என்பது, இப்பல்கலைக்கழகத்தின் சார்பாக கல்வி கற்பிப்பதற்காக, பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பெற்றுள்ளவர்கள் எனப் பொருள்படும்;

(p) ''பல்கலைக்கழகம்'' என்பது, கலைஞர் பல்கலைக்கழகம் எனப் பொருள்படும்;

(q) ''பல்கலைக்கழகப்பரப்பிடம்'' என்பது, 1 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் இந்தச் சட்டம் நீட்டிக்கப்படும் பகுதி எனப் பொருள்படும்;

(r) ''பல்கலைக்கழக மையம்'' என்பது, உயர்கல்வி கற்பிப்பதிலும், ஆராய்ச்சிப் பணியிலும் ஈடுபடுத்திக் கொள்வதற்குத் தகுதி வாய்ந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டத் துறைகளை அல்லது கல்லூரிகளைக் கொண்டிருக்கிற பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்த பரப்பிடம் எதுவும் எனப் பொருள்படும்;

(s) ''பல்கலைக்கழகக் கல்லூரி'' என்பது, இப்பல்கலைக்கழகத்தால் நிறுவப்பெற்ற அல்லது பேணிவரப்பெற்ற மற்றும் ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்கியவாறு தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுவதற்காக மாணவர்கள் தகுதிபெறும் பாடப்பிரிவுகளுக்கு வகை செய்வதற்காக, பல்கலைக்கழக வளாகத்திற்கு உள்ளே அல்லது வெளியே அமைந்துள்ள ஒரு கல்லூரி எனப் பொருள்படும்;

மையச் சட்டம் 3/1956. (t) ''பல்கலைக்கழக மானியக்குழு'' என்பது, 1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறுவி அமைக்கப்பட்டுள்ள குழு எனப் பொருள்படும்;

(u) ''பல்கலைக்கழக ஆய்வுக்கூடம்'' என்பது, இப்பல்கலைக்கழகத்தால் நிறுவப் பெற்றதாயினும் இல்லாவிடினும் அதனால் பேணிவரப்படுவதும், ஆராய்ச்சிப் பணியை செய்துவருவதற்காகவும் அதனை மேம்படுத்துவதற்காகவுமென்று கருதப் பெற்றுள்ளதுமான ஓர் ஆய்வுக்கூடம் எனப் பொருள்படும்;

(v) ''பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்'' ''பல்கலைக்கழக இணைப் பேராசிரியர்'' அல்லது ''பல்கலைக்கழக பேராசிரியர்'' என்பது, இப்பல்கலைக்கழகத்தால் அத்தகையவாறு நியமிக்கப்பெற்றுள்ள அல்லது நியமிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்பட்ட முறையே, உதவிப் பேராசிரியர் அல்லது இணைப் பேராசிரியர் அல்லது பேராசிரியர் ஒருவர் எனப் பொருள்படும்;

(w) ''பல்கலைக்கழகநூலகம்''என்பது,இப்பல்கலைக்கழகத்தால் நிறுவப் பெற்றதாயினும் இல்லாவிடினும், அதனால் பேணி வரப்பெறும் ஒரு நூலகம் எனப் பொருள்படும்;

## அத்தியாயம் - II.

## பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழகம்.

3. (1) கலைஞர் பல்கலைக்கழகம் என்ற பெயரில் பல்கலைக்கழகமொன்று நிறுவப்படுதல் வேண்டும்.

(2) இப்பல்கலைக்கழகம், என்பதோடு, நிலையான தொடர்பாட்டிணையும் தனித்த ஓர் இலச்சினையும் பெற்றுள்ள ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும், மேலும் மேற்சொன்ன பெயரில், வழக்கிடுதலும், வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) இப்பல்கலைக்கழகத்தின் தலைமையகம், கும்பகோணம் நகராட்சியின் எல்லைகளுக்குள்ளோ அல்லது அத்தகைய எல்லைகளைச் சுற்றி இருப்பத்தைந்து கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் உள்ள இடம் எதிலுமோ அமைந்திருத்தல் வேண்டும்.

பல்கலைகழகத்தின் நோக்கங்களும் அதிகாரங்களும்.

4. இப்பல்கலைக்கழகம் பின்வரும் நோக்கங்களையும் அதிகாரங்களையும் பெற்றிருக்கும், அவையாவன:—

(1) அது தீர்மானிக்கலாகும் அத்தகைய கற்கும் பிரிவுகளில் கற்பிப்பதற்கும் பயிற்சியளிப்பதற்கும் வகை செய்வது;

(2) ஆராய்ச்சி மற்றும் அறிவின் மேம்பாட்டிற்காகவும், பரப்புதற்காகவும் வகை செய்வது;

(3) பட்டங்கள், சிறப்பு பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை தொடங்குவது;

(4) தேர்வு வைத்து, பட்டங்கள், சிறப்புப்பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை,—

(a) பல்கலைக்கழக கல்லூரி ஒன்றிலோ அல்லது ஆய்வுக் கூடம் ஒன்றிலோ அல்லது இணைக்கப்பெற்ற அல்லது ஒப்புதலளிக்கப்பெற்ற கல்லூரி ஒன்றிலோ, ஒப்புதலளிக்கப்பெற்ற படிப்புப் பிரிவைத் தொடர வேண்டியதில்லை என நிலைவிதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் விலக்களிக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய படிப்பு பிரிவை தொடர்ந்துள்ளதோடு, இப்பல்கலைக் கழகத்தின் வகுத்துரைக்கப்பட்ட தேர்வுகளில் தேறியுள்ள நபர்களுக்கு; அல்லது

(b) வகுத்துரைக்கப்பட்டுள்ள வரையரைகளின்படி ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தியுள்ள நபர்களுக்கு வழங்குவது;

(5) தன்னாட்சிக் கல்லூரியொன்றில் ஒப்புதல் அளிக்கப்பெற்ற படிப்புப் பிரிவை தொடர்ந்துள்ளவர்களக்குப் பட்டங்கள், சிறப்புப்பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குவது;

(6) இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் தங்கியிருப்பாரானாலும் அவ்வாறில்லையாயினும், அஞ்சல் வழிக் கல்வியின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட படிப்புப் பிரிவு ஒன்றை தொடர்ந்துள்ளவர்களுக்கு தேர்வுகள் வைத்துப் பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குவதும் வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் தங்கியிருப்பவர்கள் அல்லாதவர்களுக்கு அத்தகைய விரிவுரைகளுக்கும் கல்வியளிப்பிற்கும் வகை செய்வது;

(7) வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி, மதிப்புறு பட்டங்களையோ அல்லது பிற கல்விச் சிறப்புகளையோ வழங்குவது;

(8) இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் பிற கல்வி நிலையங்கள் ஆகியவற்றை நிறுவுவது, பேணுவது மற்றும் மேலாண்மை செய்வது;

(9) வகுத்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் பல்கலைக்கழகத்துடன் இணைந்த, தொழில்முறை அல்லது முதுகலை கல்லூரிகளாக இணைத்தல் மற்றும் இணைப்புகளைத் திரும்ப பெறுவது;

வரம்புரையாக, அத்தகைய கல்லூரியொன்றை நிறுவுவதற்கு, அரசின் அனுமதி பெறப்பட்டு அவ்வாறு அனுமதிப்பதற்காக நிபந்தனைகளும் வரைக்கட்டுகளும் எவையேனுமிருந்து அவை இணங்கி நடக்கப்பட்டாலன்றி அத்தகைய கல்லூரி எதுவும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுதல் ஆகாது;

(10) வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின் படி இப்பல்கலைக்கழகத்தின் சிறப்புப்பட்டங்கள் மற்றும் பட்டயங்களுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான படிப்புப் பிரிவுகளுக்கு வகை செய்கின்ற கல்லூரிகளுக்கு ஒப்புதல் அளிப்பதும் அவ்வாறு அளிக்கப்பெற்ற ஒப்புதலை விலக்கிக்கொள்வதும்;

வரம்புரையாக, அத்தகைய கல்வி நிலையமொன்றை நிறுவுவதற்கு, அரசின் அனுமதி பெறப்பட்டு அவ்வாறு அனுமதிப்பதற்காக நிபந்தனைகளும் வரைக்கட்டுகளும் எவையேனுமிருந்து அவை இணங்கி நடக்கப்பட்டாலன்றி அத்தகைய கல்வி நிலையம் எதுவும் இப்பல்கலைக்கழகத்தினால் அனுமதியளிக்கப்படுதல் ஆகாது;

(11) வகுத்துரைக்கப்பட்ட முறையிலும், வரைக்கட்டுகளின் படியும், கல்லூரி எதனையும் அரசின் இசைவுடன் தன்னாட்சிக் கல்லூரியென பெயரிட்டுக் குறிப்பிடுவதும் அவ்வாறு குறிப்பிடப்பட்டதை நீக்கிக் கொள்வதும்;

(12) உதவிப்பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள் மற்றும் இப்பல்கலைக்கழகத்திற்கு தேவைப்படும் பிற ஆசிரியர் பதவிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவது மற்றும் அத்தகைய உதவிப் பேராசிரியர் பதவிகள், இணைப்பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள் மற்றும் பிற ஆசிரியர் பதவிகள் ஆகியவற்றுக்கு நபர்களை நியமிப்பது;

(13) நிலை விதிகளுக்கிணங்க, உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவி சம்பளங்கள், ஆதரவுப் படித்தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்துவது மற்றும் வழங்குவது;

(14) மாணவர் விடுதிகளை நிறுவிப் பேணி மற்றும் நிர்வகித்து வருதல் இப்பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படாத மாணவர் விடுதிகளுக்கு ஏற்பிசைவளித்தல் மற்றும் அவ்வாறு அளிக்கப்பட்ட ஏற்பிசைவினை விலக்கிக்கொள்வது;

(15) மாணவர்களின் உடல் நலன், பொது நலன், ஒழுங்குமுறை நடத்தை ஆகியவற்றை எய்தும் வகையில், கல்லூரிகளின் மூலம் பல்கலைக்கழக மாணவர்களின் மீது அத்தகைய கட்டுபாட்டினைச் செலுத்துவது;

(16) இப்பல்கலைக்கழகத்தின் நிலைக் கொடைகளையும் பிற சொத்துகளையும் மற்றும் நிதியங்களையும் வைத்து நிர்வகித்து வருவது;

(17) இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக இப்பல்கலைக்கழகத்தின் சொத்துப் பிணையத்தின் மீது, அரசின் ஒப்புதல் அளிப்புடன் பணத்தைக் கடன் வாங்குவது;

(18) கட்டணங்களை நிர்ணயிப்பது வகுத்துரைக்கப் படலாகிறவாறான அத்தகைய கட்டணங்களைக் கோரிப் பெறுவது;

(19) தேசிய மாணவர் படையின் பேணுகைக்காக இப்பல்கலைக்கழக நிதியங்களிலிருந்து, மானியங்களை அளிப்பது;

(20) பல்கலைக்கழக விரிவாக்கக்குழு ஒன்றை அமைத்துப் பேணி வருவது;

(21) (a) வெளியீட்டுப் பிரிவொன்றை;

(b) வேலை வாய்ப்புப் பிரிவொன்றை;

(c) மாணவர் சங்கங்களை;

(d)பல்கலைக்கழக உடற்பயிற்சி குழுக்கள்; மற்றும்

(e) அவை போன்ற பிற சங்கங்களை அமைத்து அவற்றின் பேணுகைக்காக நிதியங்களுக்கு வகை செய்வது;

(22) இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் உள்ள கல்லூரிகள், கல்வி நிலையங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றிற்கிடையே ஒத்துழைப்பை வளர்ப்பது மற்றும் இப்பல்கலைக்கழகம் தீர்மானிக்கக்கூடிய முறையிலும் நோக்கங்களுக்காகவும் பிற பல்கலைக்கழகங்களுடனும் பிற அதிகார அமைப்புகளுடனும் ஒத்துழைப்பது;

(23) தேவைப்படும் கால இடைவெளிகளில் கல்லூரிகளின் அளவுக்கிடையே மதிப்பீடுகளையோ அல்லது ஆய்வுகளையோ செய்தலும் மற்றும் கல்லூரிகளின் கல்விச் சிறப்பினை மேம்படுத்த வகுத்துரைக்கப்பட்டவாறு தக்க நடவடிக்கையை எடுப்பது;

(24) உயர்வான கல்விச் சிறப்பினை எய்துவதற்காக கட்டுப்பாட்டு அமைப்பு முறையை வகுத்துரைப்பதன் பொருட்டு இணைக்கப்பட்ட கல்லூரிகளைக் கல்வி முறையில் கண்காணித்தல்; மற்றும்

(25) பொதுவாக, இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை மேம்படுத்துவதற்கு தேவையாயிருக்கக்கூடிய அல்லது விரும்பத்தக்கதாக இருக்கக்கூடிய பிற செயல்கள் அனைத்தையும் செய்து அல்லது நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்பது;

கல்லூரிகள் பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப் படுதலாகாது மற்றும் கல்வி நிலையங்களுக்குப் பல்கலைக் கழகத்தால் ஏற்பிசைவளிக்கப் பெறுதல்.

5. (1) கலைஞர் பல்கலைக்கழகம் தவிர பிற பல்கலைக்கழகம் எதனுடனும், இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள்ளாக உள்ள கல்லூரி எதுவும் இணைக்கப்படுதல் கூடாது.

(2) தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப்பட்டுள்ள அல்லது அதனோடு தொடர்புடைய அல்லது அதனால் பேணி வரப்படும் கல்லூரி அல்லது கல்வி நிலையம் எதுவும் அரசின் மற்றும் தொடர்புடைய பல்கலைக்கழகத்தின் முந்திய ஒப்புதலளிப்புடனல்லாமல், எந்த நோக்கத்திற்காகவும் இப்பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவு அளிக்கப்படுதலாகாது.

பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களைச் சேர்த்து கொள்ளுதல்

6. (1) இந்தச் சட்டத்தின் மற்றும் நிலை விதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு இப்பல்கலைக்கழகமானது அனைத்து நபர்களுக்கும் பொதுவானதாக இருத்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும்,—

(a) வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியை அல்லது படிப்பு தரத்தைப் பெற்றிருக்காத நபர் எவரையும் படிப்புப் பிரிவு எதிலும் சேர்க்குமாறு;

(b) பட்டம், பட்டயம் அல்லது பிற கல்விச் சிறப்புகள் வழங்கத் தேவையான குறைந்த அளவு படிப்பு தரத்திற்குக் கீழே கல்விப் பதிவைப் பெற்றுள்ள எம்மாணவரையும் பல்கலைக்கழக பட்டியலில் வைத்திருக்குமாறு; அல்லது

(c) பல்கலைக்கழகத்தின் நலனுக்கு அல்லது பிற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் ஊறு விளைவிக்கும் விதத்தில் நடந்து கொள்ளும் நபர் எவரையும் சேர்க்குமாறு அல்லது மாணவர் எவரையும் வைத்திருக்குமாறு; பல்கலைக்கழகத்தைக் கோருதல் கூடாது.

மேற்பார்வை அதிகாரம்.

7. (1) அரசானது, அது பணிக்கக் கூடியவரால் அல்லது பணிக்கக் கூடியவர்களால், இப்பல்கலைக்கழகத்தை அதன் கட்டடங்களை, ஆய்வுக் கூடங்களை, நூலகங்களை, அருங்காட்சியங்களை, பட்டறைகளை மற்றும் தளவாடங்களையும்; மற்றும் இப்பல்கலைக்கழகத்தால் பேணி வரப்படுகின்ற, ஏற்பிசைவு அளிக்கப்பட்டுள்ள கல்வி நிலையம் ஏதொன்றையும், மேலும் இப்பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் அல்லது செய்யப்படும் பிற பணியையும், ஆய்வு அல்லது விசாரணை செய்யப்படுமாறு ஆவன செய்வதற்கும், இப்பல்கலைக்கழகம் தொடர்புடைய பொருட்பாடு எதனையும் பொறுத்து விசாரணை ஒன்று செய்யப்படுமாறு ஆவன செய்வதற்கும் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) அரசு, அவ்வாறு ஆய்வு செய்யப்படுமாறு அல்லது விசாரணை செய்ய ஆவன செய்வதற்கான அதன் எண்ணம் குறித்து ஒவ்வொரு நேர்விலும், இப்பல்கலைக் கழகத்திற்கு அறிவிப்பு கொடுத்தல் வேண்டும்; மற்றும் இப்பல்கலைக்கழகம் அதில் தன்தரப்பை எடுத்துரைப்பதற்கு உரிமைத் தகுதிடையதாக இருக்கும்.

(3) அரசு, அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் முடிவுகள் குறித்து அதன் கருத்துகளை பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்தல் வேண்டும் என்பதுடன், அதன் பேரிலான பல்கலைக்கழகத்தின் கருத்தைக் கண்டறிந்த பின்பு, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை என்னவென்பது குறித்து இப்பல்கலைக்கழகத்திற்கு ஆலோசனை கூறலாம்; மேலும் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக காலவரம்பொன்றையும் நிர்ணயிக்கலாம்.

(4) பல்கலைக் கழகம் அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் முடிவுகளின் மீது அல்லது அரசினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் பேரில் எடுக்கக்கருதியுள்ள அல்லது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை ஏதேனுமிருப்பின், அது குறித்து அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள்ளாக அரசுக்கு அறிக்கை கொடுத்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையானது அரசு பணிக்கக்கூடிய அத்தகைய காலத்திற்குள் அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) நியாயமான காலத்திற்குள்ளாக பல்கலைக் கழகமானது, அரசு மனநிறைவடையும்படி நடவடிக்கை எதனையும் எடுக்காதவிடத்து, அரசானது, பல்கலைக்கழகத்தால் கொடுக்கப்பட்ட விளக்கம் எதனையுமோ அல்லது செய்யப்பட்ட முறையீடு எதனையுமோ பரிசீலனை செய்ததற்குப் பின்னர், தக்கதென கருதக்கூடிய பணிப்பாணைகளைப் பிறப்பிக்கலாம்; மற்றும் பல்கலைக்கழகமானது அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும். பல்கலைக்கழகமானது, இது குறித்து அரசினால் நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளாக அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடக்காத நேரத்தில், அரசானது அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடப்பதற்கு நபர் எவரையுமோ அல்லது அமைப்பு எதையுமோ நியமிக்கவும் அதற்கான செலவுகளுக்காக தேவைப்படக் கூடிய அத்தகைய ஆணைகளைச் செய்யவும் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம்-III.

## பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்.

பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்.

8. இப்பல்கலைக் கழகம் பின்வரும் அலுவலர்களை கொண்டிருக்கும் அவர்களானவர்:—

(1) வேந்தர்;

(2) இணை வேந்தர்;

(3) துணை வேந்தர்;

(4) பதிவாளர்;

(5) புலத் தலைவர்;

(6) நிதி அலுவலர்;

(7) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்;

(8) இப்பல்கலைக்கழகத்தின் அலுவலர்களென நிலை விதிகளால் விளம்பப்படக்கூடிய பிற நபர்கள்.

வேந்தர்.

9. (1) தமிழ்நாடு மாநிலத்தின் முதலமைச்சர் பல்கலைக்கழகத்தின் வேந்தராக இருத்தல் வேண்டும். அவர் தமது பதவியின் காரணத்தால், பல்கலைக்கழகத்தின் தலைவராக இருப்பதுடன் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா எதற்கும் தலைமை வகித்து பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகளை அவற்றைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களுக்கு வழங்குவார்.

(2) அதிகார அமைப்புகளுக்கு நபர்களை பெயர்குறித்து நியமிப்பதற்கான அதிகாரம் வேந்தருக்கு வழங்கப்பட்டிருக்கிறவிடத்து, வேந்தர், தேவையான அளவுக்கு மற்றபடி போதிய அளவு பிரதிநிதித்துவம் பெற்றிராதவர்களின் நலன்களுக்கு சார்பாளர்களாக அப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) வேந்தர், தானே முற்பட்டோ அல்லது விண்ணப்பத்தின் மீதோ நடவடிக்கைகள் எவற்றையும் பொறுத்து, அத்தகைய நடவடிக்கைகளின் முறைமை குறித்தோ அவற்றில் எடுக்கப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை ஏதொன்றின் சீர்மை, சட்ட முறைமை அல்லது பொருத்தமுடைமை குறித்தோ, தெளிவுற உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, பல்கலைக்கழகத்தின் அலுவலர் எவரின் அல்லது அதிகார அமைப்பு ஏதொன்றின் பதிவுக் கட்டினையும் தருவித்து ஆய்வு செய்யலாம் மற்றும் நேர்வெதிலும், அத்தகைய முடிவு அல்லது ஆணை எதுவும் திருத்தியமைக்கப்படவோ, அறவு செய்யப்படவோ, எதிர் மாறாக்கப்படவோ அல்லது மறுபரிசீலனைக்காகத் திருப்பியனுப்பி வைக்கப்படவோ வேண்டும் என்று அவருக்குத் தோன்றுமானால் அவர் அதன்படியே ஆணைகளைப் பிறப்பிக்கலாம்:

வரம்புரையாக, இந்தப் பிரிவின் படியான அதிகாரங்கள் செலுத்தப்படுவதற்காக, வேந்தரிடம் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், அந்த விண்ணப்பம் தொடர்புடையதாகவிருக்கிற நடவடிக்கை, முடிவு அல்லது ஆணை எந்தத் தேதியில் அவ்விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்டதோ, அந்தத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, நபரெவருக்கும், அத்தகைய நபர் தன் முறையீட்டினைச் செய்து கொள்வதற்கான வாய்ப்பொன்று அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, ஊறு விளைவிக்கத்தக்கதான ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதலாகாது.

(4) நபர் எவருக்கும், வேந்தரின் முந்தைய ஒப்புதலளிப்பின்றி பல்கலைக்கழகத்தால் மதிப்புறு பட்டம் அல்லது பிற சிறப்பு எதுவும் வழங்கப்படுதலாகாது.

(5) வேந்தர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் படி அல்லது அதனை அடியொற்றியோ, அவருக்கு வழங்கப்படக் கூடிய அதிகாரங்களை செலுத்தி வருதல் மற்றும் பிற கடமைகளை புரிந்து வருதலும் வேண்டும்.

10. (1) உயர்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராக இருத்தல் வேண்டும். இணை வேந்தர்.

(2) இணைவேந்தர், இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி அவருக்கு வழங்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தி வருவார் மற்றும் அத்தகைய கடமைகளைப் புரிந்து வருதல் வேண்டும்.

(3) வேந்தர் இல்லாதிருக்கும் போது அல்லது வேந்தர் செயற்பட இயலாதிருக்கும் போது, இணைவேந்தர், வேந்தரின் அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி அனைத்து கடமைகளையும் ஆற்றுதல் வேண்டும்.

11. (1) (2)—ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படும் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட பெயர் பட்டியல் ஒன்றிலிருந்து, வேந்தரால் துணை வேந்தரின் ஒவ்வொரு நியமனமும், செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய பெயர் பட்டியலில் மேற்சொன்ன குழுவின் உறுப்பினர் எவரின் பெயரும் அடங்கியிருத்தல் ஆகாது; துணை வேந்தர்.

வரம்புரையாக, அக்குழுவினால் அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலில் உள்ள நபரெவருக்கும், வேந்தரானவர் ஒப்புதல் அளிக்கவில்லையெனில், (2)—ஆம் உட்பிரிவிற்கிணங்கிய வகையில் மூன்று பெயர்களைக் கொண்ட புதிய பெயர்ப்பட்டியலைக் கொடுப்பதற்கு அவர் மற்றொரு குழுவினை அமைத்துருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் மற்றும் அவர் புதிய பெயர்ப்பட்டியலில் பெயர்க்குறிப்பிட்டுள்ள நபர்களில் எவரொருவரையும் துணைவேந்தராக நியமித்தல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக் குழுவானது,–

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும், உச்ச நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றம் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளராக இருக்கும் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத, மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளராக இருக்கும் ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சிக் குழுவினால் நியமிக்கப்படுவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

விளக்கம். – இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ‘‘சிறந்த கல்வியாளர்" என்பது,–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணை வேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) ஒரு மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து, குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

வரம்புரையாக, அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரியுடன் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(3) துணை வேந்தரின் பணியமர்த்தத்திற்காக குழுவினால் பரிந்துரைக்கப்படும் ஒரு நபர்,–

(i) அதிக அளவிலான திறமை, நேர்மை, ஒழுக்கம் மற்றும் நிறுவனத்துடன் உடன்பாடுடைய சிறந்த கல்வியாளராக இருத்தல் வேண்டும்;

(ii) ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்ட ஆணை ஒன்றினால், வேந்தருடன் கலந்தாலோசனை செய்து, அரசால் குறித்துரைக்கப்படலாகும், அத்தகைய கல்வித் தகுதிகள் மற்றும் அனுபவங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(4) வேந்தர், அரசு மற்றும் ஆட்சிக் குழுவினால், குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பே தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு நான்கு மாதங்களுக்கு முன்பே முடிவடைதல் வேண்டும்.

(5) துணை வேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக் கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(6) குழுவானது, அது அமைத்துருவாக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். குழுவானது தன்னுடைய பரிந்துரையை மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு சமர்ப்பிக்கபடவில்லையெனில் வேந்தர், அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு, மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2)–ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைத்துருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

(7) துணைவேந்தர், மூன்றாண்டுக் காலஅளவிற்கு பதவி வகிப்பார் என்பதுடன், மேலும் மூன்று ஆண்டு காலஅளவிற்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்:

வரம்புரையாக, நபரெவரும், மொத்தத்தில் ஆறு ஆண்டுகளுக்கு மேல் துணைவேந்தர் பதவியை வகிக்கக் கூடாது:

மேலும் வரம்புரையாக, துணைவேந்தரின் பதவிக்காலம் முடிவுற்றவுடன், பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறு, மொத்தத்தில் ஓராண்டுக்கு மேற்படாத அத்தகைய காலஅளவிற்கு தொடர்ந்து பதவியில் இருத்தல் வேண்டும் என்று வேந்தர் பணிக்கலாம்:

மேலும் வரம்புரையாக, துணை வேந்தர், தான் கைப்பட எழுதி வேந்தருக்கு முகவரியிட்டு மற்றும் இரண்டு மாத கால அறிவிப்பு கொடுத்ததற்குப் பின்பு பதவியை விட்டு விலகலாம்:

மேலும் வரம்புரையாக, துணை வேந்தராக நியமிக்கப்பெற்ற ஒருவர், தம்முடைய பதவிக்காலத்தின் போது அல்லது அதன் நீட்டிப்பு எதிலும் எழுபது வயதினை எய்துவாரானால், அவர் பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

(8) துணை வேந்தரின் பதவியில் தற்காலிக காலியிடம் ஏதேனும் ஏற்படும் போது அல்லது அத்துணைவேந்தர், நோய், பணிக்கு வராமை என்ற காரணத்தாலோ அல்லது ஏதேனும் பிற காரணத்தாலோ, தம்முடைய பதவியின் அதிகாரங்களைப் புரிந்து வரவும், இயலாதிருப்பாரானால், ஆட்சிக் குழுவானது, துணைவேந்தரின் அதிகாரங்களைச் செலுத்தி வருவதற்கும், கடமைகளை புரிந்து வருவதற்கும் கூட்டுநர் குழுவை அமைக்கும் வரையில் பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர், துணைவேந்தரின் கடமைகளை புரிந்து வருதலும் அதிகாரங்களைச் செலுத்தி வருதலும் வேண்டும்:

வரம்புரையாக, கூறப்பட்ட கூட்டுநர் குழுவானது, ஆட்சிக் குழுவின் இரண்டு பதவி வழி உறுப்பினர்களையும் பல்கலைக்கழகத்தின் ஒரு பேராசிரியரையும் கொண்டிருக்கும்.

(9) துணை வேந்தர், பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராக இருப்பார்; மற்றும் அவருடைய ஊதியங்களும் பணி குறித்த வரையறைகளும் நிபந்தனைகளும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்;–

(a) துணை வேந்தருக்கு, அரசால், அவ்வப்போது, நிர்ணயிக்கப்படக்கூடிய சம்பளம் கொடுக்கப்படுதல் வேண்டும். மற்றும் அவருடைய பதவிக் காலம் முழுவதும் அறைகலன்களுடனான குடியிருப்பொன்றை வாடகை செலுத்தமின்றிப் பயன்படுத்துவதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராவார்; மேலும் அத்தகைய குடியிருப்பைப் பேணி வருவது பொறுத்த செலவுப் பொறுப்பு எதுவும் தனிப்பட்டு அத்துணைவேந்தரை சார்தல் ஆகாது. துணைவேந்தர், நிலைவிதிகளில் வகை செய்யக்கூடிய அத்தகைய பிற இடை ஆதாயம் பெற உரிமையுடைவராவார்;

(b) துணை வேந்தர், அவ்வப்போது வேந்தரின் ஒப்புதலுடன், ஆட்சிக் குழுவால் தீர்மானிக்கப்படக் கூடிய அத்தகைய ஓய்வுகாலப் பயன்களுக்கும் படித்தொகைகளுக்கும் உரிமைத் தகுதியுடையராகுதல் வேண்டும்:

வரம்புரையாக,

(i) பல்கலைக்கழகத்தின்; அல்லது

(ii) பிற பல்கலைக்கழகம் எதனின் அல்லது பல்கலைக்கழகம் எதனாலும் பேணிவரப் பெறும் அல்லது அதனோடு இணைக்கப்பெற்றுள்ள கல்லூரி அல்லது கல்வி நிலையத்தின் பணியாளர் ஒருவர், துணை வேந்தராக நியமிக்கப்படுமிடத்து, அவர் தொகையளிப்புச் செய்பவராக உள்ள வருங்கால வைப்பு நிதியத்திற்கு தொடர்ந்து தொகையளிக்க அவர் அனுமதிக்கப்பெறுவார். மேலும், பல்கலைக்கழகத்தின் பங்களிப்பானது, துணை வேந்தராக அவர் நியமிக்கப்படுவதற்கு உடனடி முன்பு அவர் பங்களித்திருந்த அளவுக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்;

(c) துணை வேந்தர், ஆட்சிக் குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய வீதங்களில் பயணப்படிகளுக்கு உரிமைத் தகுதியுடைவராயிருத்தல் வேண்டும்;

(d) துணை வேந்தர், செயலார்ந்த பணியிலிருக்கையில் அவரால் பணியில் செலவழிக்கப்பட்ட கால அளவுகளில் பதினொன்றில் ஒரு பங்கு முழுச் சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்புக்கு அவர் உரிமைத் தகுதியுடைவராயிருப்பர்;

(e) துணை வேந்தரானவர், அவரது பதவிக் கால அளவின் போது மூன்று மாதங்களுக்கு மேற்படாத கால அளவு ஒன்றுக்கு சம்பளமின்றி மருத்துவக் காரணங்களுக்காக அல்லது பிறவாறாக விடுப்பு எடுத்துக் கொள்வதற்குத் தகுதி உடையவராவார்:

வரம்புரையாக, அவரது பதவிக் கால அளவு முடிவடைந்த தேதியன்று, அவரது பதவிக் கால அளவின் முடிவடையும் தேதிக்கு முன்பாக ஈட்டிய விடுப்பானது அவரால் எடுக்கப்படாமல் இருந்தால், அவரது பதவியை விட்டு விலகியதற்குப் பின்னர் பெருமளவு இருநூற்று நாற்பது நாட்களுக்கு உட்பட்டு தம்முடைய கணக்கில் இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பைப் பொறுத்து, விடுப்பு சம்பளத்திற்கு சம மதிப்புள்ள பணத்தைப் பெறுவதற்கு அவர் உரிமைத் தகுதி உடையவராய் இருப்பார்:

மேலும் வரம்புரையாக, அத்தகைய விடுப்பானது (d) எனும் கூறின் படி எந்த அளவுக்கு ஈட்டிய விடுப்புக்கு அவர் உரிமைத் தகுதியுடையவராயிருக்கின்றாரோ, அந்த அளவுக்கு முழுச் சம்பளத்துடன் கூடிய விடுப்புக்கு மாற்றிக் கொள்ளப்படலாம்

(10) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மேற்கொள்ள மறுத்தல் அல்லது வேண்டுமென்றே செயல்படாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் அவரின் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது.—

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும். அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், நீக்கத்திற்கான ஆணை ஒன்றினைச் செய்வதற்கு முன்பு, அதனை சமர்ப்பிக்கக் கோருதல் வேண்டும்.

துணை வேந்தரின் அதிகாரங்களும் கடமைகளும்.

12. (1) துணைவேந்தர், பல்கலைக்கழகத்தின் கல்வித் தலைவராகவும் முதன்மை நிர்வாக அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(2) வேந்தர் மற்றும் இணை வேந்தரும் வருகை தராதவிடத்து, துணை வேந்தரானவர், பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா எதிலும் தலைமை வகித்து பட்டங்கள், சிறப்புப்பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை பெறுவதற்கு உரிமைத்தகுதிடைய நபர்களுக்கு அவற்றை வழங்குவார்.

(3) துணைவேந்தர், பல்கலைக்கழகத்தின் அலுவல்கள் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கும் பல்கலைக்கழகத்தில் உரிய முறையில் ஒழுக்கத்தினைப் பேணுவதற்கும் பொறுப்பினைக் கொண்டவராவார்.

(4) துணை வேந்தரானவர், இதன்கீழ் செய்யப்பட்ட சட்டம் மற்றும் நிலைவிதிகள், துணைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளின் உண்மையான பின்பற்றுதலை உறுதி செய்தல் வேண்டும்.

(5) பல்கலைக்கழகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் பிற நபர்களின் நியமனம், பணிஇடைநீக்கம் மற்றும் பணிநீக்கம் தொடர்பான ஆட்சிக் குழுவின் முடிவை துணைவேந்தர் செயல்படுத்த வேண்டும்.

(6) துணைவேந்தரின் கருத்துப்படி உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று துணைவேந்தர் கருதுகிற அவசர நிலை எதனிலும், அவர் ஆணையின் வாயிலாக, அவசியமெனக் கருதும் அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும் என்பதுடன், எடுக்கப்பட்ட நடவடிக்கையை, சாதாரண போக்கில் கையாண்ட அத்தகைய அலுவலர் அல்லது அதிகார அமைப்பு அல்லது அமைப்புக்கு விரைவில் அறிக்கை செய்தல் வேண்டும்:

வரம்புரையாக, பாதிக்கப்படக் கூடியவருக்கு, கேட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதலாகாது.

(7) (6)–ஆம் உட்பிரிவின் படியான துணை வேந்தரின் ஆணை எதனாலும், பாதிக்கப்பட்ட நபர் எவரும் அவருக்கு அத்தகைய ஆணையானது தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக ஆட்சிக் குழுவிற்கு மேல்முறையீடு ஒன்றை அளிக்கலாம் மற்றும் துணை வேந்தர் அத்தகைய மேல்முறையீட்டின் பேரில் ஆட்சிக் குழுவினால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்குச் செயல் வடிவம் கொடுத்தல் வேண்டும்.

(8) துணைவேந்தரானவர், ஆட்சிக்குழு, கல்விமன்றம் மற்றும் நிதிக்குழு ஆகியவற்றின் பதவி வழித் தலைமையாளராக இருத்தல் வேண்டும். துணைவேந்தர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு எதனின் கூட்டமெதிலும் வந்திருந்து உரை நிகழ்த்துவதற்கு உரிமைத் தகுதியுடையவராயிருப்பார், ஆனால் அத்தகைய அதிகார அமைப்பின் அல்லது அமைப்பின் உறுப்பினர் ஒருவராக அவர் இருந்தாலன்றி அதில் வாக்களிக்க உரிமைத் தகுதியுடையவராகமாட்டார்.

(9) துணைவேந்தர், ஆட்சிக்குழு, கல்விமன்றம் மற்றும் நிதிக்குழு ஆகியவற்றின் கூட்டங்களைக் கூட்டுவதற்கு அதிகாரம் பெற்றிருப்பார்.

(10) துணைவேந்தர், கற்பித்தல், மற்றும் ஆராய்ச்சி, விரிவாக்கக் கல்வி மற்றும் பாடத்திட்ட மேம்பாடு ஆகியவற்றிற்கான ஒத்திசைவிற்கும் ஒருங்கிணைப்பிற்கும் பொறுப்புடையராய் இருத்தல் வேண்டும்.

(11) துணை வேந்தர், நிலைவிதிகளில் வகுத்துரைக்கப்படலாகும் பிற அதிகாரங்களைச் செலுத்தி வருவார் மற்றும் அத்தகைய பிற கடமைகளைப் புரிந்து வருவார்.

பதிவாளர்.

13. (1) பதிவாளர், ஆட்சிக் குழுவால் நியமிக்கப்படும் பல்கலைக்கழகத்தின் முழு நேர சம்பளம் பெறும் அலுவலராக இருப்பார். தகுதிகளும் ஆட்சேர்ப்பு முறையும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும். பதிவாளரின் பணி நிபந்தனைகள் மற்றும் வரையறைகள் பின்வருமாறு:—

(i) பதிவாளர் பதவியை வகிப்பவர், பல்கலைக்கழகப் பேராசிரியரைக் காட்டிலும் படிநிலையில் குறைந்தவராக இருக்கக் கூடாது.

(ii) பதிவாளர் மூன்று ஆண்டு காலத்திற்கு பதவியில் இருப்பார்:

வரம்புரையாக, பதிவாளர் அறுபது வயதை அடைந்தவுடன் அல்லது இந்தக் கூறில் குறித்துரைக்கப்பட்ட காலஅளவு கழிவுற்றவுடன், இவற்றில் எது முந்தையதோ அந்த வயதில் ஓய்வு பெறுவார்;

(iii) பதிவாளரின் பணி ஊதியங்கள் மற்றும் பிற பணி நிபந்தனைகள் மற்றும் வரையறைகள் வகுத்துரைக்கப்படக்கூடியவையாக இருக்கும்;

(iv) பதிவாளரின், பதவி காலியாக இருக்கும் போது அல்லது பதிவாளர் நோய், பணிக்கு வராமை என்கிற காரணத்தால் அல்லது பிற காரணம் எதற்காகவேணும் தம்முடைய பதவிக் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கும் போது பதிவாளரின் பதவிக் கடமைகள் அந்த நோக்கத்திற்காக துணை வேந்தர் நியமிக்கும் ஒருவரால் புரிந்துவரப்படுதல் வேண்டும்.

(2) (a) பதிவாளரானவர், ஆட்சிக் குழுவின் ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் கல்வித் துறை பணியாளர்கள் நீங்கலாக, பணியாளர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் விசாரணை நிலுவையில் இருக்கும் போது அவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்வதற்கு அவர்களுக்கு நிர்வாக எச்சரிக்கை விடுப்பதற்கு அல்லது அவர்கள் மீது கண்டனம் விதிப்பதற்கு அல்லது ஊதிய உயர்வை நிறுத்தி வைப்பதற்குமான அதிகாரத்தை பெற்றிருப்பார்:

வரம்புரையாக, தொடர்புடைய நபருக்கு, அவரை பொறுத்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கெதிராக காரணத்தை எடுத்துரைப்பதற்கான நியாயமானதொரு வாய்ப்பு அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய தண்டனை எதுவும் விதிக்கப்படுதலாகாது.

(b) (a) கூறில், குறித்துரைக்கப்பட்டுள்ள தண்டத்தொகை எதையும் விதிக்கின்ற பதிவாளரின் ஆணை எதற்கும் எதிராக துணைவேந்தரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(c) பதிவாளரின் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட தண்டத்தொகை தேவைப்படுகிறது என்று அந்த விசாரணை வெளிப்படுத்துகிற நேர்வு எதிலும், பதிவாளர், அந்த விசாரணை முடிவடைவதன் பேரில் தம்முடைய பரிந்துரைகளோடு அறிக்கை ஒன்றை செய்து துணைவேந்தருக்குக் கொடுத்தல் வேண்டும் ; துணைவேந்தர் தாம் பொருத்தமெனக் கருதும் ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும்:

வரம்புரையாக, தண்டத்தொகை எதையும் விதிக்கின்ற துணைவேந்தரின் ஆணை ஒன்றுக்கு எதிராக ஆட்சிக் குழுவிடம் மேல்முறையீடு ஒன்றைச் செய்யலாம்.

(d) (b) கூறு அல்லது (c) கூறின் கீழ் எந்த மேல்முறையீடும், மேல்முறையீட்டாளரால் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவுற்ற பிறகு, பெறப்பட்ட ஆணையை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்படுதல் ஆகாது;

(3) பதிவாளர், ஆட்சிக் குழு, கல்வி மன்றம், புலங்கள், மற்றும் பாடத் திட்டக் குழுவின் பதவி வழிச் செயலாளராக இருப்பார், ஆனால் இந்த அதிகாரஅமைப்புகள் எதிலும் உறுப்பினராகக் கருதப்படமாட்டார்.

(4) (a) பதிவுக்கட்டுகள், தனித்த இலச்சினைகள் மற்றும் ஆட்சிக்குழு போன்ற பல்கலைக்கழகத்தின் பிற சொத்துக்கும் பாதுகாவலராக இருத்தல்;

(b) ஆட்சிக்குழு, கல்விமன்றம், புலங்கள், பாடத் திட்டக் குழுக்கள், தேர்வாளர் குழுக்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளினால் நியமிக்கப்படும் குழு எதனின் கூட்டங்களையும் கூட்டுகிற அறிவிப்பு அனைத்தையும் வழங்குதல்;

(c) ஆட்சிக்குழு, கல்விமன்றம், புலங்கள், பாடத் திட்டக் குழுக்கள், தேர்வாளர் குழுக்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளினால் நியமிக்கப்படும் குழு எதனின் கூட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் பற்றிய நடவடிக்கைக் குறிப்பேடுகளை பேணி வருதல்;

(d) ஆட்சிக்குழுவின் அலுவலக தொடர்புகளை நடத்துதல்;

(e) பல்கலைக்கழக அதிகார அமைப்புகளின் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலின் நகல்கள் வெளியிடப்பட்டவுடன் மற்றும் அத்தகைய கூட்டங்களின் நடவடிக்கைகளின் நிகழ்ச்சிக் குறிப்புகளின் நகல்களை வேந்தருக்கு வழங்குதல்; மற்றும்

(f) நிலை விதிகள், துணைமுறை விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிற அதிகாரங்களைப் பயன்படுத்துதல் மற்றும் ஆட்சிக் குழு அல்லது துணைவேந்தரால் அவ்வப்போது தேவைப்படும் பிற கடமைகளைப் புரிதல்,

ஆகியன பதிவாளரின் செயற்கடமைகளாக இருத்தல் வேண்டும்.

(5) பல்கலைக்கழத்தினால் அல்லது அதற்கு எதிராகத் தொடரப்படும் அனைத்து உரிமை வழக்குகள் மற்றும் பிற சட்ட நடவடிக்கைகளில், வாதுரைகளானது சரிபார்த்தல் மற்றும் பதிவாளரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய உரிமை வழக்குகளில் மற்றும் நடவடிக்கைகளில் நீதிமுறைக் கட்டளைகள் அனைத்தும் பதிவாளருக்கு வழங்கப்பட்டு, அவருக்குச் சார்வு செய்யப்படுதல் வேண்டும்;

14. (1) புலத்தலைவர் ஒவ்வொருவரும், அந்தப் புலத்தில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கிடையேயிருந்து மூன்றாண்டுக் கால அளவிற்குத் துணைவேந்தரால் பணியமர்த்தம் செய்யப் பெறுவர் மற்றும் அவர் மறு பணியமர்த்தத்திற்கு தகுதியுடையவராவார்; புலத்தலைவர்.

வரம்புரையாக, ஒரு புலத்தலைவர் அறுபது வயது நிறைவெய்தியவுடன் அவர் அப்பதவியை வகிப்பது அத்தகையவாறு அற்றுப்போகும்.

மேலும் வரம்புரையாக, ஒரு புலத்தில் எச்சமயத்திலேனும் பேராசிரியர் எவரும் இல்லாதிருப்பாராயின் புலத்தலைவரின் அதிகாரங்களை துணைவேந்தரே செலுத்தலாம்.

(2) புலத்தலைவர் பதவி காலியாக இருக்கும் போது அல்லது பிற காரணம் எதனாலும் புலத்தலைவர், தம் பதவிக்கடமைகளைப் புரிவதற்கு இயலாதிருக்கும் போது, அவரது பதவிக் கடமைகளை அந்த நோக்கத்திற்காக துணை வேந்தரால் பணியமர்த்தம் செய்யப்படும் ஒருவரால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஒரு புலத்தின் தலைவராக இருந்துவரும் புலத்தலைவர், அந்தப் புலத்தின் பாடங்கற்பித்தல், தரங்களை பராமரித்தல் மற்றும் ஆராய்ச்சியை நடத்துவதற்காக பொறுப்புடையவர் ஆவார். துணை முறை விதிகளினால் வகுத்துரைக்கப்படும் பிற பதவிப் பணிகளையும் அப்புலத்தலைவர் ஆற்றி வருவார்.

(4) பாடத் திட்டக்குழுக்களின் அல்லது நேர்வுக்கேற்ப, குழுக்களின் புலத்தின் கூட்டம் எதற்கும் வந்திருக்கவும் அதில் உரையாற்றவும் புலத்தலைவர் உரிமை உடையவர் ஆவார். ஆனால் அவர் அதில் ஒர் உறுப்பினராக இருந்தாலன்றி அந்தக் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரிமை உடையவர் ஆகார்.

நிதி அலுவலர்.

15. (1) ஆட்சிக் குழுவால் நியமிக்கப்படும் நிதி அலுவலர், இதன் பொருட்டு ஆட்சிக் குழுவால் குறித்துரைக்கப்படக்கூடிய கால அளவுக்கு இப்பல்கலைக்கழகத்தின் ஊதியம் பெறும் முழுநேர அலுவலராக இருப்பார்.

(2) நிதி அலுவலரின் நியமனம் ஒவ்வொன்றும், அரசினால் பரிந்துரைக்கப்படும் மூன்று அலுவலர்களைக் கொண்ட பெயர்ப் பட்டியல் ஒன்றிலிருந்து துணை வேந்தர் பரிந்துரையின் பேரில் ஆட்சிக்குழுவால் செய்யப்படும்.

(3) நிதி அலுவலரின் ஊதியங்களும் பணி குறித்த வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகள் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(4) நிதி அலுவலர், அறுபது வயதினை எய்தியதின் பேரில் அல்லது (1) ஆம் உட்பிரிவின் படி ஆட்சிக் குழுவினால் குறித்துரைக்கப்படும் கால அளவு முடிவடைவதன் பேரில் இவற்றில் எது முந்தியதோ அதன் பேரில் ஒய்வு பெறுதல் வேண்டும்;

(5) நிதி அலுவலரின் பதவி காலியாக இருக்கும்போது அல்லது நிதி அலுவலர், நோய், பணிக்கு வராமை என்கிற காரணத்தால் அல்லது பிற காரணம் எதனாலேனும் தம்முடைய பதவிக் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கும்போது நிதி அலுவலரின் பதவிக்கடமைகள் அந்த நோக்கத்திற்காக துணை வேந்தர் நியமிக்கக்கூடிய அத்தகைய நபரால் ஆற்றுதல் வேண்டும்.

(6) நிதி அலுவலர், நிதிக்குழுவிற்கு பதவி வழிச் செயாலாளராக இருத்தல் வேண்டும்; ஆனால் அத்தகைய குழுவின் உறுப்பினராகக் கருதப்படுதலாகாது;

(7) நிதி அலுவலர்,—

(a) இப்பல்கலைக்கழகத்தின் நிதியங்களின் மீது பொதுவான கண்காணிப்புச் செலுத்தி வருவார்; மற்றும் பல்கலைக்கழகத்தின் நிதிக்கொள்கை குறித்து அதற்கு ஆலோசனை வழங்குவார்;மற்றும்

(b) ஆட்சிக் குழுவினால் தமக்குக் குறித்தளிக்கப்படக்கூடிய அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தி வருவார் மற்றும் அத்தகைய பிற நிதி சார்ந்த அலுவல்களைப் புரிந்து வருவார்;

வரம்புரையாக, நிதிஅலுவலர், ஆட்சிக் குழுவின் முன் ஒப்புதலளிப்பின்றி செலவு எதையும் செய்தலோ, வகுத்துரைக்கப்படக்கூடிய தொகைக்கு மேற்படும் முதலீடு எதையும் செய்தலோ ஆகாது.

(8) ஆட்சிக்குழுவின் கட்டுபாட்டு அதிகாரத்திற்குட்பட்டு, நிதி அலுவலர்,—

(a) சொத்தினை வைத்திருக்கவும் மேலாண்மை செய்யவும் மற்றும் பொறுப்பாட்சி மற்றும் கொடையாக அளித்த சொத்து உள்ளடங்கலாக பல்கலைக் கழகத்தின் மீது முதலீடு செய்யவும்;

(b) ஓராண்டிற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினங்களுக்காக ஆட்சிக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகள் மேற்படாதவாறும் பணங்கள் அனைத்தும் அவை வழங்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட நோக்கங்களுக்காகச் செலவிடப்படுவதை உறுதி செய்யவும்;

(c) இப்பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள், நிதி மதிப்பீடுகள் வரவு – செலவுத் திட்டம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும் ஆட்சிக் குழுவிடம் அவற்றை அளிப்பதற்கு பொறுப்புடையவராகவும்;

(d) பணம் மற்றும் வங்கி இருப்புகளையும் முதலீடுகளையும் இடைவிடாது கண்காணிக்கவும்;

(e) வருவாய் வசூலின் வளர்ச்சியைக் கண்காணித்து வசூல் செய்வதற்குப் பயன்படுத்தும் முறைகள் குறித்த ஆலோசனை வழங்குவதற்கும்;

(f) கட்டங்கள், நிலங்கள் , அறைகலன் சாதனங்கள் ஆகியவற்றின் பதிவேடுகள் நாளது தேதிவரை வைத்துப் பேணிவரப்படுவதையும், சிறப்பு மையங்கள், தனிசிறப்பு ஆய்வுக் கூடங்கள் , ஆகிய அனைத்திலுமுள்ள சாதனங்கள் மற்றும் பிற நுகரதக்க பொருள்களின் இருப்பு நிலையைச் சரிபார்க்கும் பணி நடத்தப்படுவதையும் உறுதி செய்து கொள்ளவும்; மற்றும் பல்கலைக்கழகத்தால் பராமரிக்கப்படும் கல்லூரிகள்;

(g) அதிகாரமளிக்கப்படாத செலவினம் எதுவும் பற்றி அல்லது பிற நிதிசார் முறைகேடு பற்றித் துணைவேந்ததின் கவனத்திற்குக் கொண்டு வருவார்; மற்றும் தவறு செய்துள்ளவர் மீது எடுக்கப்பட வேண்டிய உரிய நடவடிக்கை குறித்த கருத்தாலோசனை வழங்கவும்; மற்றும்

(h) தம்முடைய கடமைகளைப் புரிவதற்காகத் தாம் தேவையெனக் கருதக்கூடிய தகவல் அல்லது விவர அறிக்கைகள் எவற்றையும் இப்பல்கலைக்கழகத்தினால் பேணி வரப்படும் அலுவலகம், துறை, மையம், ஆய்வுக் கூடம், கல்லூரி ஆகிய எதிலிருந்தும் தருவிப்பார்.

(9) இப்பல்கலைக்கழகத்திற்கு செலுத்தத்தக்க பணம் எதற்காகவும் நிதி அலுவலரோ அல்லது ஆட்சிக் குழுவால் இதற்கென உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட நபரோ, அதிகாரமளிக்கப்பட்ட நபர்களோ, அளிக்கும் பற்று சீட்டானது, அப்பணம் செலுத்தித் தீர்க்கப்பட்டதற்கான போதிய நிறைவேற்ற சான்றாகும்.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.

16. (1) தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், வகுத்துரைக்கப்படக்கூடிய கால அளவிற்க்கும், வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரிலும், ஆட்சிக்குழுவால் நியமிக்கப்பட்ட இப்பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராகவும் கல்வியலாளராகவும் இருத்தல் வேண்டும்.

(2) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தி வருவார், மற்றும் அத்தகைய கடமைகளைப் புரிவார்.

நூலகர்.

17. (1) நூலகர், வகுத்துரைக்கப்படக்கூடிய கால அளவிற்கும் வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரிலும், தெரிவுக்குழுவின் பரிந்துரையின் பேரிலும், ஆட்சிக்குழுவால் நியமிக்கப்பட்ட இப்பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) நூலகர், ஆட்சிக்குழுவால் அவருக்கு குறித்தளிக்கப்படக் கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தியும் அத்தகைய கடமைகளைப் புரிந்தும் வருவார்.

## அத்தியாயம் -IV.

## பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்.

பல்கலைக் கழகத்தின் அதிகார அமைப்புகள்.

**18.** இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் பின்வருவன ஆகும். அவையாவன;

(1) ஆட்சிக்குழு;

(2) கல்விமன்றம்;

(3) நிதிக்குழு;

(4) திட்டமிடும் குழு;

(5) பாடத்திட்டக்குழுக்கள்;

(6) புலங்கள்; மற்றும்

(7) நிலைவிதிகளால் இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளென விளம்புகை செய்யப்பட்ட அத்தகைய பிற அமைப்புகள்.

உறுப்பினர் பதவிக்கான தகுதிக்கேடு.

**19.** (1) நபரெவரும், தேர்தல் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படும் தேதியன்று அவர்.—

(a) மனச்சீர்கேடுற்றவராகவோ; அல்லது

(b) நொடிப்பு நிலையரொருவராக நீதிமுறையில் திர்மானிக்கப்பட வேண்டி விண்ணப்பித்துக் கொண்டுள்ள ஒருவராக அல்லது விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையரொருவராக இருப்பாராயின் ; அல்லது

(c) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்குகின்ற குற்றச்செயல் எதற்காகவும் குற்றவழக்கு நீதிமன்றமொன்றினால் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டவராக இருப்பாராயின், இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் எதனின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ தகுதியுடையவராகமாட்டார்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி நபரொருவர் தகுதியற்றவரா என்பது குறித்து பூசல் அல்லது ஐயம் ஏற்படும் நேர்வில், ஆட்சிக்குழுவானது அதனைத் தீர்மானித்தல் வேண்டும் மற்றும் அதன் முடிவே அறுதியானதாகவும் இருக்கும்.

ஒரு சில நேர்வுகளில் கல்வி மன்றத்திற்கும் ஆட்சிக் குழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்படு வதற்கான அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற் கான தகுதிக்கேடுகள்.

**20.** (1) 21 மற்றும் 24 ஆம் பிரிவுகளில் என்ன அடங்கியிருந்த போதிலும், இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவிலோ அல்லது கல்வி மன்றத்திலோ அல்லது இரண்டிலுமோ ஆறு ஆண்டுகள் என்பதான மொத்த கால அளவு ஒன்றுக்கு உறுப்பினரொருவராகப் பதவி வகுத்த நபரெவரும், மேற்சொன்ன இரண்டு அதிகார அமைப்புகளில் ஏதொன்றுக்கும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ தகுதியுடைவர் ஆகார்:

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள ஆறு ஆண்டு என்கிற மொத்தக் காலத்தினை கணக்கிடும் நோக்கத்திற்காக, ஒரு அதிகார அமைப்பில் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலமாகவோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதன் மூலமாகவோ பதவி வகித்த மூன்றாண்டுக்கால அளவும் மற்றும் மற்றொரு அதிகார அமைப்பில் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலமாகவோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதன் மூலமாகவோ பதவிவகித்த மூன்றாண்டுக்கால அளவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதற்கிணங்கிய வகையில் ஆட்சிக் குழுவிற்கோ அல்லது கல்வி மன்றத்திற்கோ தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அத்தகைய நபர் தகுதியுடையவர் ஆகார்:

மேலும் வரம்புரையாக, இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, தற்காலிக காலியிடத்தில் இந்த உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள அதிகார அமைப்பு ஏதொன்றிலும் ஓராண்டிற்கு குறையாமல் பதவி வகித்திருக்கிற நபரொருவர், அந்த அதிகார அமைப்பில் மூன்று ஆண்டு கால அளவு ஒன்றிற்குப் பதவி வகித்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக நபர் ஒரு அதிகார அமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருப்பின் மற்றும் அத்தகைய நபர் முதலில் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பில் உறுப்பினராக இருந்ததன் விளைவாக மற்றொரு அதிகார அமைப்பிற்கு உறுப்பினராயிருப்பின், முதலில் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பில் பதவி வகித்த அந்தக்காலம் மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவில் உள்ள எதுவும்.–

(i) 21–ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள பதவி வழி உறுப்பினர்கள் தொடர்பாகவோ;

(ii) ஆனால் 24–ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள பதவி வழி உறுப்பினர்கள் தொடர்பாகவோ பொருந்தாது.

21. (1) வேந்தர், 53 ஆம் பிரிவின் படி முதல் துணைவேந்தர் நியமிக்கப்பட்டதற்குப் பின்பு, கூடிய விரைவில் ஆட்சிக் குழுவினை அமைத்தல் வேண்டும். ஆட்சிக்குழு.

(2) ஆட்சிக் குழுவானது துணைவேந்தருடன் சேர்த்து, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அதாவது;–

**வகை I – பதவி வழி உறுப்பினர்கள்.**

(a) உயர் கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(b) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(c) சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(d) கல்லூரி கல்வி இயக்குநர்;

**வகை –II பிற உறுப்பினர்கள்.**

(a) துணைவேந்தரின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் நியமிக்கப்படும் மூன்று சிறந்த நபர்கள், சமூக நீதி மற்றும் மாநில அரசின் கொள்கைகள் தொடர்பான பிரச்சினைகள் உட்பட நிர்வாகம், கல்வி மற்றும் நிதி பொருட்பாடுகளில் துணைவேந்தருக்கு வழிகாட்டுவார்கள்;

(b) ஒற்றை மாற்று வாக்குமுறை வாயிலான விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பிற்கிணங்க அவர்களுக்கிடையே இருந்து இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்;

(c) ஒற்றை மாற்று வாக்குமுறை வாயிலான விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பிற்கிணங்க கல்விமன்றத்தின் உறுப்பினர்களான அவர்களுக்கிடையே இருந்து இணைக்கப்பட்ட கல்லூரிகளின் (முதல்வர்களைத் தவிர) ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்,

விளக்கம்.- இந்த இனத்தின் நோக்கத்திற்காக, ''ஆசிரியர்கள்" என்பது அவர்களுக்கிடையே இருந்து இணைக்கப்பட்ட கல்லூரிகளின் ஆசிரியர்களால் கல்வி மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த ஆசிரியர்கள் என்று பொருள்படும்;

(d) துணை- வேந்தரின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட புலத்தலைவர் அல்லது இயக்குநர்;

(e) துணை-வேந்தரின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர்;

(f) பதவி மூப்பிற்கிணங்க சுழற்சிமுறையில் துணைவேந்தரால் பெயர் குறித்த நியமிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழக இணைப்பேராசிரியர்;

(g) பதவி மூப்பிற்கிணங்க சுழற்சி முறையில் வேந்தரால் பெயர் குறித்த நியமிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்; மற்றும்

(h) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் அதன் உறுப்பினர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒர் உறுப்பினர்.

(3) துணை வேந்தர், ஆட்சிகுழுவின் பதவி வழி தலைமையாளராக இருப்பார்.

(4) (a) உயர்கல்வித்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர் அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர் அல்லது சட்டத்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர் ஏதேனும் காரணத்தினால் ஆட்சிக்குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு வர இயலாதிருக்கும் நேர்வில் அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு அவர், அவரது துறையைச் சேர்ந்த அரசு துணைச் செயலாளரின் படி நிலைக்குக் குறையாத எந்த ஒரு அலுவலரையும் அவருக்குப் பதிலாக அனுப்பலாம். அவ்வாறு பதிலாக அனுப்பப்பட்ட அலுவலர் அந்தக் கூட்டங்களில் கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்கு உரிமையுடையவராவார் மற்றும் வாக்களிப்பதற்கு உரிமையுடையவராவார்.

(b) கல்லூரிக் கல்வி இயக்குநர், ஏதேனும் காரணத்தினால் ஆட்சிக் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு வர இயலாதிருக்கும் நேர்வில் அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு துணை இயக்குநரின் படிநிலைக்குக் குறையாத தன் துறையின் அலுவலர் எவரையும் பதிலாக அனுப்பலாம். அவ்வாறு பதிலாக அனுப்பப்பட்ட அலுவலர், அந்தக் கூட்டங்களின் கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்கு உரிமையுடையவராக இருப்பார் மற்றும் வாக்களிப்பதற்கும் உரிமையுடையவராக இருப்பார்.

(5) (a) பிறவாறு வகை செய்யப்பட்டிருப்பது நீங்கலாக ஆட்சிக்குழுவின் பதவி வழி உறுப்பினரல்லாத பிற உறுப்பினர்கள் மூன்றாண்டுக்கால அளவுக்கு பதவி வகித்து வருவர் மற்றும் அவ்வுறுப்பினர் மற்றுமொரு மூன்றாண்டுகளுக்கு மேற்படாத கால அளவுக்கு தேர்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்த நியமிக்கப்படுவதற்கோ தகுதியுடையவராவர்.

(b) உறுப்பினர் ஒருவர் ஆட்சிக்குழுவின் தற்செயல் காலியிடத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறவிடத்து அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்குமிடத்து அத்தகைய உறுப்பினர் எவரேனும் வகித்து வரும் பதவியின் கால அளவு ஓராண்டுக்கும் குறைவாக இருந்திருப்பின் அது மூன்றாண்டுகளைக் கொண்ட ஒரு முழு கால அளவாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்;

வரம்புரையாக, ஆட்சிக்குழுவின் உறுப்பினராக உள்ள ஒருவர், ஒரு குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பின் அல்லது ஒரு குறிப்பிட்ட நியமனப் பதவியை வகிக்கிறார் என்ற தகுதியினால் அவர் பெயர் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது நியமிக்கப்பட்டிருக்குங்கால், அவர் அந்த குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் அல்லது நேர்விற்கேற்ப அப்பல்கலைக்கழகத்தில் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் அத்தேதியிலிருந்து ஆட்சிக்குழுவின் உறுப்பினராக இருப்பதும் அற்றுப்போகும்.

மேலும் வரம்புரையாக, ஆட்சிக்குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்தப் பதவியின் காரணமாக ஆட்சிக்குழுவின் பதவி வழி உறுப்பினராக இருப்பதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராக இருக்கிறாரோ அந்தப் பதவிகள் எதற்கேனும் தற்காலிகமாக பணியமர்த்தம் செய்யப்படுகிறவிடத்து அவர், தாம் நியமன பொறுப்பை எடுத்துக் கொள்கிற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக தாம் தேர்ந்தெடுக்கப்பட்டதன் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டதன் காரணமாக ஆட்சிக்குழுவின் உறுப்பினராக இருக்கும் பதவியை விட்டு நீங்கி தம்முடைய நியமனத்தின் காரணமாகப் பதவி வழி உறுப்பினராக ஆவதற்கு விரும்புகிறாரா என்பதைத் தன்னுடைய கையொப்பமிடப்பட்டு துணை வேந்தருக்கு தெரிவிக்கப்பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாக தெரிவு செய்தல் வேண்டும் மற்றும் அந்த விருப்பத் தெரிவை செய்யத் தவறுவதின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்த நியமிக்கப்பட்ட உறுப்பினராக உள்ள தம்முடைய பதவியை விட்டு அவர் நீங்கியிருப்பதாகக் கொள்ளப்பெறுவார்.

(6) ஒருவர் ஆட்சிக்குழுவின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் போது, அவர் ஆட்சிக் குழுவில் தமக்கிருந்த உறுப்பினர் பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழக அமைப்புகளில் எதிலேனும் உறுப்பினராக அவர் இருப்பதும் அற்றுப்போகும்.

(7) ஆட்சிக்குழுவின் உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படக்கூடிய தினப் படி மற்றும் பயணப்படிகள் தவிர, இப்பல்கலைக்கழகத்திடமிருந்து ஊதியம் எதையும் பெறுவதற்கு உரிமைத் தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள்;

வரம்புரையாக, இந்தக் கூறில் அடங்கியுள்ள எதுவும், உறுப்பினர் எவரையும், தாம் வகிக்கிற பதவியின் காரணமாக தாம் உரிமைத் தகுதியுடையவராயிருக்கிற தம்முடைய இயல்பான ஊதியங்களைப் பெறுவதை தடை செய்தலாகாது.

(8) ஆட்சிக்குழுவின் பதவிவழி உறுப்பினர் அல்லாத பிற உறுப்பினர் ஒருவர், தமது பதவி முடிவடைகிற கால அளவிற்கு முன்பு எந்தச் சமயத்திலும் தம்முடைய உறுப்பினர் பதவியை விட்டு விலகலாம். அத்தகைய பதவி விலகலானது, வேந்தருக்கு அவ்வுறுப்பினரால் எழுத்துருவிலான கடிதம் ஒன்றின் மூலமாகத் தெரிவிக்கப்படுதல் வேண்டும் மற்றும், அப்பதவி விலகலானது வேந்தரால் , அது ஏற்கப்படும் தேதியிலிருந்து செயல் விளைவு பெறுதல் வேண்டும்.

ஆட்சிக் குழுவின் அதிகாரங்கள்.

22. (1) ஆட்சிக் குழுவானது பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் அதாவது; –

(a) நிலைவிதிகளை இயற்றுதல் மற்றும் திருத்தல் அல்லது அதனை நீக்கறவு செய்தல்;

(b) துணைமுறை விதிகளை இயற்றுதல் மற்றும் திருத்தம் செய்தல் அல்லது அவற்றை நீக்கறவு செய்தல்;

(c) ஆட்சிக்குழுவானது அது தீர்மானிக்கலாகும் அத்தகைய முறையிலும் மற்றும் நோக்கங்களுக்காகவும் பிற பல்கலைக்கழகங்களுடனும் பிற கல்வி அதிகார அமைப்புகளுடனும் கல்லூரிகளுடனும் ஒத்துழைத்தல்;

(d) ஆட்சிக்குழுவானது அது, தான் தக்கதெனக் கருதுகிற அத்தகைய கல்வி கற்கும் பிரிவுகளில் கல்வி கற்பித்தலுக்கும் பயிற்சிக்கும் வகை செய்தல்;

(e) ஆராய்ச்சி செய்வதற்கு, மேம்பாடு அடைவதற்கும் அறிவைப் பரப்புவதற்கும் வகை செய்தல்;

(f) பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படும் உதவிப் பேராசிரியர் பதவிகள், இணைப்பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள் மற்றும் பிற ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துதல்;

(g) பல்கலைக்கழகத்தோடு கல்லூரிகளை இணைப்பதற்கும், பல்கலைக்கழக பகுதிகுள்ளான இணைக்கப்பட்ட கல்லூரிகளுக்கும் மற்றும் இணைப்பினை விலக்கிக் கொள்வதற்குமான வரைக்கட்டுகளை வகுத்துரைத்தல்;

(h) கல்லூரியொன்று எந்த முறையிலும் மற்றும் எந்த வரைக்கட்டுகளுக்குட்பட்டும் தன்னாட்சிக் கல்லூரியென பெயரிட்டுக் குறிப்பிடப்படலாம் என்பதையும், அவ்வாறு பெயரிட்டுக் குறிப்பிடுவதாவது அறவு செய்யப்படலாம் என்பதையும் வகுத்துரைத்தல்;

(i) பல்கலைக்கழக கல்லூரிகளின், கல்லூரிகளின் மற்றும் ஏற்பளிக்கப்பட்ட கல்லூரிகளின் மாணவர்களுக்காக கல்விமன்றமானது தீர்மானிக்ககூடிய விரிவுரைகளை வழங்குவதற்கும் மற்றும் கற்பிப்பதற்கும் வகை செய்தல் மற்றும் கல்லூரிகளின் மாணவர்களாக இல்லாத நபர்களுக்கு விரிவுரை வழங்கவும் மற்றும் கற்பிப்பதற்கும் மற்றும் அவர்களுக்குப் பட்டயங்கள் வழங்கவும் கூட வகை செய்தல்;

(j) பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புப் பட்டங்களை ஏற்படுத்துதல்;

(k) (i) பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றில் அல்லது ஆய்வுக் கூடத்தில் அல்லது இணைக்கப்பட்ட அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரியொன்றில் ஒப்புதல் அளிக்கப்பட்ட குறித்தகால படிப்பொன்றைத் தொடர்ந்திருந்து, அல்லது வகுத்துரைக்கப்பட்ட முறையில் அதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்த மற்றும் பல்கலைக்கழகத்தின் வகுத்துரைக்கப்பட்ட தேர்வுகளில் தேறியுள்ளவர்களுக்கு;

(ii) வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி ஆராய்ச்சியினை நடத்தியுள்ளவர்களுக்கு பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புகளை அளித்தல்.

(l) ஆட்சிக்குழுவின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களின் பரிந்துரையின் பேரில், கௌரவப்பட்டங்களை அல்லது கல்விச் சிறப்புகளை அளித்தல்.

(m) மாணவர் விடுதிகளை நிறுவியமைத்துப் பேணிவருதல் மற்றும் பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்ட மாணவர் விடுதிகளை மேலாண்மை செய்தல்;

(n) பட்டதாரி உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவி சம்பளங்கள், ஆதரவுப்படித் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல்;

(o) கல்லூரிகளுக்கு ஒப்புதலளிப்பதற்காகவும், இணைப்பதற்காகவும், இப்பல்கலைக்கழகத்தின் தேர்வுகள், பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள், பட்டயங்கள் ஆகியவற்றிற்கு அனுமதிக்கப்படுவதற்காகவும், பட்டதாரிகளைப் பதிவு செய்வதற்காகவும், அத்தகைய பதிவினைப் புதுப்பிப்பதற்காகவும் மற்றும் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்கள் எதற்காகவும் அல்லது அனைத்திற்காகவும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்களை வகுத்துரைத்தல்;

(p) ஆண்டறிக்கை, ஆண்டுக் கணக்குகள், நிதிநிலை மதிப்பீடுகள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தலும், அவற்றின் மீது தான் பொருத்தமெனக் கருதக்கூடிய நடவடிக்கையை எடுத்தலும்;

(q) பல்கலைக்கழக விரிவாக்கக்குழு ஒன்றை ஏற்படுத்தி அதைப் பேணிவருதல்;

(r) நூல் வெளியீட்டுப் பிரிவு, மாணவர் சங்கங்கள், வேலைவாய்ப்புப் பிரிவு, பல்கலைகக்கழக உடற்பயிற்சிக் கழகங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி அவற்றைப் பேணிவருதல்;

(s) நிறுவனங்களில் ஏதொன்றின் மேலாண்மையை மேற்கொள்வதற்காகவும் அதன் சொத்துகளையும் கடப்பாடுகளையும் எடுத்துக் கொள்வதற்காகவும் அல்லது இந்தச்சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாயிராத பிற நோக்கங்கள் எவற்றிற்காகவும் மைய அரசு அல்லது மாநில அரசு எதனுடன் அல்லது தனியார் மேலாண்மை நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை எதையும் செய்து கொள்ளுதல்;

(t) பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளுக்கான தேர்தல் முறையையும், கல்வி மன்றம், ஆட்சிக்குழு மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற அதிகார அமைப்புகள் ஆகியவற்றின் கூட்ட நடைமுறையையும், பல்கலைக்கழகத்தின் கல்விமன்றம் அல்லாத பல்கலைக்கழகத்தின் பிற அதிகார அமைப்புகளினால் அலுவல் நடத்தப்பெறுவதற்குத் தேவைப்படும் உறுப்பினர்களின் குறைவெண் வரம்பினையும் முறைப்படுத்துகின்ற நிலை விதிகளைச் செய்தல்;

(u) பல்கலைக்கழக மையமாக, பல்கலைக்கழக பகுதிக்குள் ஒரு பகுதியை அங்கீகரிக்க அரசிடம் பரிந்துரை செய்தல்;

(v) பல்கலைக்கழகத்தின் சொத்துகளையும் நிதியங்களையும் வைத்து வருதல், கட்டுப்பாடு செய்தல், நிருவகித்து வருதல்;

(w) பல்கலைக்கழகத்தின் தனித்த இலச்சினையின் வடிவம், அதைப் பாதுகாப்பில் வைத்திருப்பது, பயன்படுத்துவது ஆகியவை குறித்து பணித்தல்;

(x) இந்தச் சட்டத்திற்கும், நிலை விதிகளுக்கும், துணை முறை விதிகளுக்கும், ஒழுங்குமுறை விதிகளுக்கும் இணங்கிய வகையில், பல்கலைக்கழகம் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளையும் முறைப்படுத்துதலும் முடிவு செய்தலும்;

(y) திட்டவட்டமான நோக்கங்ளுக்காக,இப்பல்கலைக் கழகத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ள சொத்துகள் நிதியங்கள் ஆகிய அனைத்தையும் நிருவகித்தல்;

(z) (i) பல்கலைக்கழக உதவிப்பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை நியமித்தல், அவர்களுடைய ஊதியங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை நிர்ணயம் செய்தல். அவர்களுடைய கடமைகளையும் அவர்களது பணிகள் குறித்த வரைக்கட்டுகளையும் வரையறுத்தல் மற்றும் தற்காலிக காலியிடங்களை நிரப்புவதற்கு வகை செய்தல்;

(ii) நிருவாக மற்றும் அது போன்ற பிற பதவிகளுக்கான நியமன முறையை வகுத்துரைத்தல்; மற்றும் அவற்றின் ஊதியங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை நிர்ணயித்தல், அவற்றினுடைய கடமைகளையும் அவற்றின் பணிவரைக்கட்டுகளையும் வரையறுத்தல் மற்றும் தற்காலிக காலியிடங்களை நிரப்புவதற்கு வகை செய்தல்;

(za) உதவிப் பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், பேராசிரியர்கள், ஆசியர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற பணியாளர்கள் ஆகியோரைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்தல் மற்றும் பணி நீக்கம் செய்தல்;

(zb) பல்கலைக்கழகத்திடம், அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் எவையேனும், நிலைக்கொடைகள், விருப்ப ஆவண வழிக்கொடைகள், நன்கொடைகள், மானியமளிப்புகள் மற்றும் உரிமை மாற்றங்கள் மூலமாக அளிக்கப்படும்போது அவற்றை பல்கலைக்கழகத்தின் சார்பாக, ஏற்றுக் கொள்ளுதல்;

வரம்புரையாக அத்தகைய அனைத்து நிலைக்கொடைகள், விருப்ப ஆவண வழிக்கொடைகள், நன்கொடைகள், மானியமளிப்புகள் மற்றும் உரிமை மாற்றங்களானது, கல்வி மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அறிவித்தல் வேண்டும்;

(zc) (i) மைய அல்லது மாநில அரசு எதனிடமிருந்தும் அல்லது பொது மக்களிடமிருந்து அல்லது மைய அல்லது மாநில அரசு எதற்கேனும் சொந்தமான அல்லது அதன் கட்டுபாட்டிலுள்ள கழகம் எதனிடமிருந்தும், பல்கலைக்கழகத்தின் சார்பாக கடன்களைப் பெறுதல்;

(ii) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக பல்கலைக்கழகச் சொத்தின் பிணையத்தில் பேரில், அரசின் ஒப்புதலளிப்புடன் பணத்தைக் கடன்வாங்குதல்;

(zd) ஏற்பளிக்கப்பட்ட கல்லூரிகளாக அங்கீகாரம் செய்தல்;

(ze) கல்லூரி எதனையும் அரசின் இசைவுடன் தன்னாட்சிக் கல்லூரியாகப் பெயரிட்டுக் குறிப்பிடல், மற்றும் அத்தகைய பெயர் குறிப்பிடலை நீக்கலாம்;

(zf) பல்கலைக்கழகத்தால் பேணி வரப்படாத மாணவர் விடுதிகளுக்கு ஏற்பிசைவளித்தல் மற்றும் துணை முறை விதிகளுக்கிணங்கவும் அதன்படி விதிக்கப்பட்ட வரைக்கட்டுகளுக்கிணங்கவும் நடத்தப்பெறாத மாணவர் விடுதி எதனின், ஏற்பிசைவையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் அல்லது விலக்கிக் கொள்ளுதல்;

(zg) பல்கலைக்கழகக் கல்லூரிகள், இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகள், மாணவர் விடுதிகள் ஆகிய அனைத்தையும் ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்தலும் ஆய்வு செய்யப்பணித்தலும்;

(zh) பல்கலைக்கழகக் கல்லூரிகள், இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகள், மாணவர் விடுதிகள் ஆகியவற்றிலுள்ள ஆசிரியர்களின் தகுதிப்பாடுகளை வகுத்துரைத்தல்;

(zi) பட்டதாரி உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்பு உதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவிச் சம்பளங்கள், ஆதரவுப் படித்தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை நிலை விதிகளுக்கிணங்க வழங்குதல்;

(zj) வகுத்துரைக்கப்படக்கூடிய கட்டணங்களை விதித்தலும் வசூலித்தலும்;

(zk) பல்கலைக்கழகத் தேர்வுகளை நடத்துதலும் அவற்றின் முடிவுகளுக்கு ஒப்புதலளித்து வெளியிடுதலும்;

(zl) பல்கலைக்கழகத்தின் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பாக மற்றும் பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குச் சமமாய் இருப்பதாக ஏற்பிசைவு அளிக்கப்படுவதற்கான தேர்வுகளை வகுத்துரைக்கின்ற துணை முறை விதிகளைச் செய்தல்;

(zm) பாடக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமித்தல்;

(zn) பாடக்குழுக்களின் பரிந்துரைகளை பரிசீலனை செய்ததற்குப் பின்பு, தேர்வாளர்களை நியமிப்பது மற்றும் அவர்களுடைய ஊதியங்களை நிர்ணயித்தல்;

(zo) பல்கலைக்கழகத் துறைகளை மற்றும் கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்கள் தங்கியிருக்கும் இடத்தையும் மாணவர்களின் ஒழுங்கு நடத்தையும் கண்காணித்துக் கட்டுப்பாடு செய்தல், அவர்கள் உடல் நலமும் பொது நலமும் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(zp) பல்கலைக்கழக மையங்கள், பல்கலைக்கழகக் கல்லூரிகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தால் அமைக்கப்படும் அல்லது பேணிவரப்படும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றை நிறுவுதலும், மேலாண்மை செய்தலும்;

(zq) பல்கலைக்கழக விரிவாக்கக் குழுவின் செயற்பாட்டை முறைப்படுத்துதல்;

(zr) பல்கலைக்கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட நூல் வெளியீட்டுப் பிரிவு, மாணவர் சங்கங்கள், வேலைவாய்ப்புப் பிரிவு, பல்கலைக்கழக உடற்பயிற்சிக் கழகங்கள் ஆகியவற்றை மேலாண்மை செய்தல்;

(zs) பல்கலைக்கழகத்தில் பயிற்றுவித்தலையும் கற்பித்தலையும் மறு ஆய்வு செய்தல்;

(zt) பல்கலைக்கழகத்திற்குள் ஆராய்ச்சியை வளர்த்தலும், அத்தகைய ஆராய்ச்சி பற்றி அவ்வப்போது அறிக்கைகளைக் கோருதலும்;

(zu) சட்டத்தினாலோ, அல்லது நிலைவிதிகளினாலோ, துணைமுறை விதிகளினாலோ அல்லது ஒழுங்குமுறை விதிகளினாலோ தனக்கு வழங்கப்படக்கூடிய அல்லது விதிக்கப்படக்கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்துதலும் பிற கடமைகளைப் புரிந்து வருதலும்; மற்றும்

(zv) தன் அதிகாரங்களில் எதையும் துணை வேந்தருக்கோ தன் உறுப்பினர்களிடையேயிருந்து அமைந்த குழுவொன்றிற்கோ அல்லது நிலை விதிகளுக்கிணங்க நியமிக்கப்பட்ட குழுவொன்றிற்கோ ஒப்படைவுசெய்தல்;

(2) ஆட்சிக்குழு, கல்வி பொருட்பாடு எதனைப் பொறுத்தும் கல்விமன்றத்தை கலந்தாய்வு செய்வது தேவையானதென்று தான் கருதுகிறவிடத்து அவ்வாறு கலந்தாய்வு செய்யலாம்.

ஆட்சிக்குழுவின் கூட்டங்கள்.

23. (1) ஆட்சிக்குழுவானது குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையேனும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலங்களிலும், இடங்களிலும் கூடுதல் வேண்டும்; (2) மற்றும் (3) ஆகிய உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, தன் கூட்டங்களின் குறைவெண் வரம்பு உள்ளடங்கலாக, அக்கூட்டங்களில் அலுவல் நடத்துவது தொடர்பாக, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறை விதிகளை பின்பற்றுதல் வேண்டும்.

(2) துணை வேந்தர் அல்லது அவர் வராத போது, வந்திருக்கும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் எவரும், ஆட்சிக்குழுவின் கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்தல் வேண்டும்;

(3) ஆட்சிக் குழுவின் கூட்டம் எதிலும் எழும் அனைத்துக் கேள்விகளும், வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் வாக்குகளின் பெரும்பான்மையினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் வாக்குகள் சமமானவையாக அமைகின்ற நேர்வில்; நேர்விற்கேற்ப, துணை வேந்தரோ அல்லது தலைமை வகிக்கும் உறுப்பினரோ, இரண்டாவது அல்லது அறுதி வாக்கு ஒன்றைப் பெற்றிருத்தலும் அதை செலுத்துதலும் வேண்டும்;

(4) (a) ஆட்சிக்குழு, கலந்தாய்வு செய்யும் நோக்கத்திற்காக, பரிசீலனையில் உள்ள பொருள் எதிலும் சிறப்பு அறிவையோ அல்லது நடைமுறைப் பட்டறிவையோ பெற்றிருக்கின்ற எவரையும் கூட்டம் எதற்கும் வருகை தருமாறு அழைப்பு விடுக்கலாம். அத்தகையவர், அத்தகைய கூட்டங்களில் உரையாற்றலாம்; மற்றும் மற்றபடி நடவடிக்கைகளில் பங்கேற்கலாம்; ஆனால் வாக்களிக்கும் உரிமைத் தகுதியுடையவராகமாட்டார்;

(b) அவ்வாறு அழைக்கப்பட்டவர் ஆட்சிக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு அனுமதிக்கத்தக்கதான, தினப்படி மற்றும் பயணப்படிகளுக்கு உரிமைத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்;

கல்விமன்றம்.

24. (1) கல்விமன்றமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது;

**வகை-I-பதவிவழி உறுப்பினர்கள்.**

(a) துணை வேந்தர்;

(b) புலங்களின் தலைவர்கள்;

(c) பல்கலைக்கழக நூலகர்;

(d) பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர்;

**வகை-II-பிற உறுப்பினர்கள்.**

(a) துணைவேந்தரின் பரிந்துரையின்பேரில் சுழற்சி முறையில் வேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய அரசுக் கல்லூரிகளின் முதல்வர்களுள் ஐவர்;

(b) துணைவேந்தரின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் நியமிக்கப்படும் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள் மற்றும்பிற ஆசிரியர்களுள் பதினைந்து உறுப்பினர்கள்;

(c) ஒற்றை மாற்று வாக்கு முறைவாயிலான விகிதாசாரப் பிரதிநிதித்துவ அமைப்பிற்கிணங்க இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்கள் அவர்களுக்குள் தேர்ந்தெடுத்த பத்து நபர்களுக்கு மிகாமல்;

(d) ஒற்றை மாற்று வாக்கு முறைவாயிலான விகிதாசாரப் பிரதிநித்துவ அமைப்பிற்கிணங்க, இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்களைத் தவிர பிற இணைக்கப்பட்ட மற்றும் ஏற்பிசைவுப்பெற்ற கல்லூரிகளின் ஆசிரியர்கள் அவர்களுக்கிடையே தேர்ந்தெடுத்த ஆசிரியர்களுள் பத்து நபர்களுக்கு மிகாமல்;

(e) துணை வேந்தரால் சுழற்சி முறையில் நியமிக்கப்பட வேண்டிய பாடதிட்டக்குழுவின் தலைவர்களுள் பத்து நபர்களுக்கு மிகாமல்;

(f) வேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய ஐந்து நபர்கள்;

(g) இணை வேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய ஐந்து நபர்கள்;

(h) சட்டமன்ற பேரவையின் உறுப்பினர்களிலிருந்து அவர்களுக்களுக்கிடையே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய இரண்டு உறுப்பினர்கள்;

(i) ஒற்றை மாற்று வாக்குமுறை வாயிலாக விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பிற்கிணங்க தனியார்க் கல்லூரிகளின் செயலாளர்கள் அவர்களுக்கிடையே தேர்ந்தெடுக்கப்படும் இருவர்;

(j) இணை வேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய பல்கலைக்கழக பகுதியிலுள்ள உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர்களுள் இருவர்;

(k) இணை வேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய பல்கலைக்கழகப் பகுதியுள்ள மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆகிரியர்களுள் இருவர்;

(l) அரசின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் நியமிக்கப்பட வேண்டிய தனியார்த் தொழிலகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து நான்கு உறுப்பினர்கள்;

(m) அரசின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் நியமிக்கப்படும் தொழில்சார்ச் சங்கங்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் அல்லது கழகங்களில் இருந்து நான்கு நபர்கள்;

(n) துணை வேந்தரின் பரிந்துரையின் பேரில் இணை வேந்தரால் நியமிக்கப்படும் முன்னாள் மாணவர்களுள் இருவர்; மற்றும்

(o) வேறெந்தவாறும் கல்விக்குழுவின் உறுப்பினரல்லாத ஆட்சிக்குழு உறுப்பினர்கள்:

வரம்புரையாக (c), (d) மற்றும் (e) கூறுகளில் தேர்ந்தெடுக்க அல்லது நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் சரியான எண்ணிக்கை நிலை விதிகளில் வகுத்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, வேந்தரால் செய்யப்படும் நியமனமானது சமுக நீதியின் தேவைகள் மற்றும் பிரதிநிதியற்று எஞ்சியுள்ள பகுதிகளையும் கருத்தில் கொண்டிருக்கலாம்.

(2) (i) (1) ஆம் உட்பிரிவில் வகை II பிற உறுப்பினர்கள் என்பதன் கீழ் (o) இனத்தின் பொருட்டு கல்வி மன்றத்தின் உறுப்பினராக உள்ள உயர்கல்வித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ, அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ, கல்வி மன்றத்தின் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது இருக்கும் நேர்வில் அவர் அரசின் துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுப்பி வைக்கலாம்;

(ii) (1) ஆம் உட்பிரிவில் வகை II பிற உறுப்பினர்கள் என்பதன் கீழ் (o) இனத்தின் பொருட்டு, கல்வி மன்றத்தின் உறுப்பினராக உள்ள கல்லூரிக் கல்வியின் இயக்குநர், காரணம் எதற்காகவும், கல்வி மன்றத்தின் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது இருக்கும் நேர்வில், அவர் துணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத துறை அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுப்பி வைக்கலாம்.

(3) (a) பிறவாறு வகைசெய்யப்பட்டிருந்தால் தவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட கல்வி மன்றத்தின் உறுப்பினர், மூன்றாண்டுக்கால அளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய உறுப்பினர் மற்றுமொறு மூன்றாண்டுகள் கால அளவிற்கு மேற்படாமல் தேர்ந்தெடுக்க அல்லது நியமிக்கப்படுவதற்கு உரிமைத் தகுதியுடையவராகுதல் வேண்டும்.

(b) உறுப்பினர் ஒருவர் கல்விமன்றத்தின் தற்செயல் காலியிடத்திறக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினர் எவராலும் ஓராண்டுக்கு குறையாமல் வகித்து வரப்பட்ட பதவிக்கால அளவானது, ஒரு முழுமையான மூன்று ஆண்டுகளைக் கொண்ட கால அளவாகக் கருதப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் உறுப்பினர் அல்லது ஒரு குறிப்பிட்ட, நியமனப் பதவியை வகிக்கிறார் என்ற தகுதியினைக் கல்விமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு உறுப்பினரானவர், அந்தக் குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் அல்லது நேர்வுக்கேற்ப அந்த நியமனப் பதவியில் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் அத்தேதியிலிருந்து கல்வி மன்றத்தின் உறுப்பினராக இருப்பதும் அற்றுப்போதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, கல்வி மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்தப் பதவியின் காரணமாக கல்விமன்றத்தின் பதவி வழி உறுப்பினராக இருப்பதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராக இருக்கிறாரோ அந்தப் பதவிகள் எதற்கேனும் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறவிடத்து, அவர்தாம் நியமன பொறுப்பை எடுத்துக் கொள்கிற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக தாம் தேர்ந்து எடுக்கப்பட்டதன் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டதன் காரணமாக, கல்விமன்றத்தின் உறுப்பினராகத் தாம் தொடர்ந்து இருப்பதற்கு விரும்புகிறாரா அல்லது அத்தகைய உறுப்பினராக இருக்கும் பதவியை விட்டு நீங்கி தம்முடைய நியமனத்தின் காரணமாகப் பதவி வழி உறுப்பினராவதற்கு விரும்புகிறாரா என்பதைத் தம்மால் கையொப்பமிடப்பட்டு துணை வேந்தருக்கு தெரிவிக்கப்பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாக தேர்வு செய்தல் வேண்டும் மற்றும் அத்தகைய விருப்பத்தெரிவானது, அறுதியானதாக இருத்தல் வேண்டும். அந்த விருப்பத்தெரிவைச் செய்யத் தவறுவதன் பேரில், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக உள்ள தம்முடைய பதவியை விட்டு அவர் நீங்கியிருப்பதாகக் கொள்ளப் பெறுவார்.

(4) நபரொருவர் கல்வி மன்றத்தின் உறுப்பிராக இருப்பது அற்றுபோகும் போது, அவர் கல்விமன்றத்தில் தமக்கிருந்த உறுப்பினர் பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழக அதிகார அமைப்புகள் எவற்றிலும் உறுப்பினராக அவர் இருப்பதும் அற்றுபோதல் வேண்டும்.

(5) கல்விமன்றத்தின் உறுப்பினர்கள் வகுத்துரைக்கப்படலாகிற தினப்படிகள் மற்றும் பயணப்படிகள் தவிர, இப்பல்கலைகழகத்திலிருந்து ஊதியம் எதனையும் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் ஆகார்.

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், உறுப்பினர் எவரும் தாம் வகிக்கிற பதவியின் காரணமாகத் தாம் உரிமைத் தகுதியுடையவராயிருக்கும் தன்னுடைய இயல்பான ஊதியங்களைப் பெறுவதைத் தடைசெய்தல் கூடாது.

(6) பதவி வழி உறுப்பினர் அல்லாத கல்விமன்றத்தின் ஓர் உறுப்பினர், தமது பதவிக்காலம் முடிவதற்கு முன்பு எந்த நேரத்திலும், தமது உறுப்பினர் பதவியிலிருந்தான பதவி விலகலைக் கொடுக்கலாம். அத்தகைய பதவி விலகலானது, அவ்வுறுப்பினரால் எழுத்துருவிலான கடிதமொன்றின் வாயிலாக வேந்தருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அப்பதவி விலகலானது, வேந்தரால் அது ஏற்கப்படும் தேதியிலிருந்து செயல் விளைவு பெறுதல் வேண்டும்.

கல்விமன்றத்தின் அதிகாரங்களும் அலுவல்களும்.

25. (1) கல்விமன்றமானது, பல்கலைக்கழகத்தின் முதன்மையான கல்வி அமைப்பாக இருந்துவரும்; மற்றும் இந்தசட்டத்தின் வழிவகைகளுக்கும் மற்றும் நிலைவிதிகளுக்கும் உட்பட்டு இப்பல்கலைக்கழகத்தில் பயிற்றுவித்திருக்கும் தேர்வுக்குமான கட்டுப்பாட்டினையும் பொது ஒழுங்குமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். அவற்றின் தரநிலைகள் பேணிவரப்படுவதற்குப் பொறுப்பினை உடையதாக இருத்தல் வேண்டும். மேலும் இப்பல்கலைக்கழகத்தின் விரிவான கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் மறு ஆய்வு செய்யும் அமைப்பாகவும் கூட செயற்படுதல் வேண்டும்.

(2) கல்விமன்றமானது, இப்பல்கலைக்கழகத்தின் முதன்மைக் கல்வி அமைப்பாக பின்வரும் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்:—

(a) கற்பித்தல் மற்றும் பிற கல்வித் திட்டங்கள் மீது பொதுவான ஆளுகை அதிகாரத்தைச் செலுத்தி, அதன் தரங்களைப் பேணுதலும், உயர்த்துதலும்;

(b) ஒழுங்குமுறை விதிகளைச் செய்தல்; அவற்றைத் திருத்துதல் அல்லது நீக்கம் செய்தல்;

(c) (i) பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுமதித்தல் மற்றும் அனுமதிக்கப்படவிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பாக;

(ii) பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள், ஆகியவற்றுக்கான படிப்பு பிரிவு தொடர்பாக;

(iii) தேர்வுகளை நடத்துதல், கல்வித் தரங்களைப் பேணுதல் மற்றும் உயர்த்துதல் தொடர்பாக;

(iv) பிற பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், நிறுவனங்கள் மற்றும் குழுமங்களின் சமமான பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் சான்றிதழ்களை வகுத்துரைத்தல் தொடர்பாக;

(v) மாணவர்கள் செயல்திறனை மதிப்பீடு செய்தல், சீர்தூக்கிப் பார்த்தல் மற்றும் தரப்படுத்துதல் தொடர்பாக;

(d) நூலகங்களைக் கட்டுப்பாடு செய்து பேணுதல் உள்ளிட்ட அனைத்து கல்வி சார்ந்த பொருள்களிலும், ஆட்சிக் குழுவிற்கு அறிவுரை கூறுதல்;

(e) துணைப்பேராசிரியர், இணைப்பேராசிரியர், பேராசிரியர், பதவிகளுடன் ஆய்வு ஆசிரியர் உள்ளடங்களான பிற ஆசிரியப் பதவிகளை நிறுவுவதற்கும், அப்பதவிகளுக்குரிய கடமைகள் மற்றும் ஊதியங்கள் குறித்து ஆட்சிக்குழுவுக்கு பரிந்துரை செய்தல்;

(f) கற்பித்தல் மற்றும் ஆய்வுத் துறைகளை அமைக்கவும், மாற்றியமைக்கவுமான திட்டங்களை உருவாக்குதல், மாற்றியமைத்தல், திருத்தியமைத்தல்;

(g) முதுநிலைக் கல்விக் கற்பித்தல் மற்றும் ஆய்வு குறித்து ஆட்சிக்குழுவுக்கு பரிந்துரைகளைச் செய்தல்;

(h) ஆசிரியர்களுக்காக, வகுத்துரைக்கப்பட வேண்டிய கல்வித் தகுதிகள் குறித்து ஆட்சிக் குழுவுக்கு பரிந்துரைகளைச் செய்தல்;

(i) மதிப்புறு பட்டங்கள் மற்றும் இதர சிறப்பு பட்டங்கள் வழங்குவது குறித்து ஆட்சிக் குழுவுக்கு பரிந்துரை செய்தல்;

(j) விதிகள், ஒழுங்கு விதிமுறைகள், பாடத்திட்டம் வகுத்தல் மற்றும் மதிப்பீட்டு முறைகள், புதிய பாடப்பிரிவுகளை அறிமுகம் செய்தல், இருக்கின்ற பாடங்களை மாற்றியமைத்தல் ஆகியவை குறித்த பாடக்குழுவின் கருத்துருக்களை மறு ஆய்வு செய்து செயல்படுத்துதல்;

(k) பட்டதாரி உதவித் தொகைகள் மற்றும் படிப்பு உதவித் தொகைகள் ஆகியவை நிறுவுவது குறித்து ஆட்சிக்குழுவிற்கு பரிந்துரை செய்தல்;

(l) தொழில் நிறுவனங்களும் அரசுப்பணி தருநர்களும் ஒருபுறமும் மறுபக்கத்தில் பல்கலைக்கழகத்திற்கும் இடையே கூட்டு முயற்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆட்சிக் குழுவிற்கு பரிந்துரை செய்தல்;

(m) துணைவேந்தருக்கோ அல்லது கல்வி மன்றத்தின் ஏதேனும் ஒரு குழுவிற்கோ அதன் அதிகாரங்களில் எதனையும் ஒப்படைவு செய்தல்; மற்றும்

(n) ஒவ்வொரு துறைக்கும் தேவையான இடவசதி, கருவிகள், சாதனங்கள், நூலகம் பேணுகை மேலும் பிற இயற்பொருள் சார்ந்த வசதிகள் குறித்த தரத்தினை மதிப்பீடு செய்து பரிந்துரைத்தல்.

(3) இச்சட்டத்தின் பிற வகைமுறைகளுக்குட்பட்டு, மறு ஆய்வு செய்யும் திறன் கொண்ட குழு என்ற வகையில் கல்விமன்றம் பின்வரும் அதிகாரங்களையும், செயற் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) பல்கலைக்கழகத்தின் விரிவான கொள்கைகளையும் செயல்பாடுகளையும் அவ்வப்போது மறு ஆய்வு செய்து பல்கலைக்கழக முன்னேற்றம், மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குதல்;

(b) ஏதாவது பொருள் குறித்து பல்கலைக்கழக வேந்தருக்கு ஆலோசனை அளிக்கக் கோரும்போது அவ்வாறு ஆலோசனை அளித்தல்; மற்றும்

(c) நிலை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற அதிகாரங்களை செலுத்துதல் மற்றும் அலுவற்பணிகளை ஆற்றுதல்.

கல்விமன்றத்தின் கூட்டங்கள்.

26. (1) கல்விமன்றம் துணை வேந்தரால் நிர்ணயிக்கப்படும் தேதிகளில் ஆண்டு ஒவ்வொன்றிலும் குறைந்தது இருமுறையாவது கூடுதல்வேண்டும். அவற்றில் ஒன்று ஆண்டுக் கூட்டமென வழங்கப்படுதல் வேண்டும். கல்விமன்றமானது அது, அவ்வப்போது தீர்மானிக்கக்கூடிய அத்தகைய பிற தேதிகளிலும்கூட கூடலாம்.

(2) கல்விமன்றக் கூட்டமொன்றுக்குத் தேவைப்படக்கூடிய கோரெண் என்பது, கல்விமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்காக இருத்தல் வேண்டும்.

வரம்புரையாக, அத்தகைய கோரெண் இப்பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பிற்கோ அல்லது பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகளை வழங்கும் நோக்கத்திற்காக நடத்தப்படும் கல்விமன்றக் கூட்டமொன்றிற்கோ தேவையாக இருத்தல் கூடாது.

(3) துணை வேந்தர் பொருத்தமென்று தாம் கருதும் போதெல்லாம், கல்விமன்றத்தின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் நூற்றுக்கு ஐம்பது விழுக்காட்டிற்கு குறையாத உறுப்பினர்களால் கையொப்பமிட்ட எழுத்துருவிலான கோரிக்கை ஒன்றின்பேரில், கல்விமன்றத்தின் சிறப்பு கூட்டமொன்றைக் கூட்டலாம்.

27. (1) நிதிக்குழு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:— நிதிக்குழு.

(i) துணை வேந்தர்;

(ii) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(iii) உயர்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச்செயலாளர்;

(iv) ஆட்சிக் குழுவினால் தன்னுடைய உறுப்பினர்களுக்கிடையே இருந்து நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களில் ஒருவர் பேராசிரியராகவும் ஒருவர் வேந்தரால் ஆட்சிக்குழுவிற்கு பெயர்குறித்து நியமிக்கப்படுபவராகவும் இருத்தல் வேண்டும்.

(2) காரணங்கள் எதற்காகவும் நிதித்துறையின் அரசுச் செயலாளர் அல்லது உயர்கல்வித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுக் செயலாளரானவர், நிதிக்குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலவில்லையானால் அவர் அரசின் துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத தன்னுடைய துறையின் அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கலாம். அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட அலுவலர் கூட்டத்தின் கலந்துரையாடலில் பங்கெடுத்துக்கொள்ளும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் வாக்களிக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) நிதிக்குழுவிற்குத் துணை வேந்தர், பதவிவழித் தலைமையாளராகவும் நிதி அலுவலர் பதவிவழிச் செயலாளராகவும் இருந்துவருதல் வேண்டும்;

(4) பதவிவழி உறுப்பினர்கள் தவிர, நிதிக்குழுவின் மற்ற அனைத்து உறுப்பினர்களும், மூன்றாண்டுக்காலஅளவிற்குப் பதவி வகித்தல் வேண்டும்;

(5) நிதிக்குழுவானது, கணக்குகளை ஆய்வு செய்வதற்கும் செலவினத்திற்காக கருத்துருக்களைக் கூர்ந்தாய்வு செய்வதற்குமென ஒவ்வோர் ஆண்டிலும் குறைந்தது இருமுறையாவது கூடுதல் வேண்டும்;

(6) நிதி அலுவலரால் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழக ஆண்டுக் கணக்குகள், பரிசீலனைக்காகவும் கருத்துரைகளுக்காகவும் நிதிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; அதன்பின்னர் ஒப்புதலளிப்புக்காக ஆட்சிக்குழுவிற்கு பணிந்தனுப்புதல் வேண்டும்;

(7) நிதிக்குழுவானது, ஆக்கப்பணிகளின் நேர்வில், கடன்களின் வருவாய் உள்ளடங்கலான இப்பல்கலைக்கழகத்தின் வருமானம் மற்றும் வள ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், ஆண்டிற்கான மொத்த தொடர் செலவினம், மொத்த தொடராச் செலவினம் ஆகியவற்றின் வரம்புகளைப் பரிந்துரைத்தல் வேண்டும்;

(8) நிதிக்குழுவானது,—

(a) அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையை மறு ஆய்வு செய்தல்;

(b) ஆண்டு நிதி மதிப்பீடுகளில் வகைமுறை எதுவும் செய்யப்பட்டிராத முதலீடு அல்லது செலவினத்தை உள்ளடக்கியுள்ள, அல்லது ஆண்டு நிதிமதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ள தொகைக்கும் மிகையாக உள்ள செலவினத்தை உள்ளடக்குகிற, கருத்துரு ஒவ்வொன்றின் பேரிலும், ஆட்சிக்குழுவுக்குப் பரிந்துரை செய்தல்;

(c) பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகள் கணக்குகளை வைத்து பேணி வருவதற்கான முறைகளையும், நடைமுறைகளையும் படிவங்களையும் வகுத்துரைத்தல்;

(d) பல்கலைக்கழகத்தின் நிதிகள் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளின் பேரிலும், ஆட்சிக் குழுவிற்குப் பரிந்துரை செய்தல்; மற்றும்

(e) வகுத்துரைக்கப்படலாகிறவாறான பிற செயற் பணிகளைப் புரிந்துவருதல் வேண்டும்.

(9) நிதி அலுவலரால் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழக நிதி மதிப்பீடுகள் பரிசீலனைக்காகவும் கருத்துரைகளுக்காகவும் நிதிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; நிதிக்குழுவினால் மாற்றியமைக்கப்பட்டவாறான மேற்சொன்ன மதிப்பீடுகள், அதற்குப் பின்னர், பரிசீலனைக்காக ஆட்சிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். ஆட்சிக்குழுவானது நிதிக்குழுவினால் செய்யப்பட்ட மாறுதல்களை ஏற்றுக் கொள்ளலாம்.

திட்டமிடும் குழு.

28. (1) இப்பல்கலைக்கழகத்திற்கென திட்டமிடும் குழு ஒன்று அமைக்கப்படுதல் வேண்டும்; அது பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி குறித்து பொதுவாக ஆலோசனை நல்குதல்; மற்றும் பல்கலைக்கழகக் கல்வித்தரம் மற்றும் ஆராய்ச்சியை ஆய்வு செய்துவருதல் வேண்டும்;

(2) திட்டமிடும்குழு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) துணைவேந்தரானவர் அக்குழுவின் பதவி வழித் தலைமையாளராக இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) உயர் கல்வி தரத்தில் எட்டு நபர்களுக்கு மேற்படாத நபர்கள்;

(3) திட்டமிடும் குழுவின் உறுப்பினர்கள் துணைவேந்தரின் பரிந்துரையின்பேரில் வேந்தரால் நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் வேந்தர் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய கால அளவுக்குப் பதவி வகித்தல் வேண்டும்;

(4) திட்டமிடும் குழுவானது, இந்தச்சட்டத்தினால் அதனிடம் உற்றமைந்துள்ள பிற அதிகாரங்கள் அனைத்திடுனோடும்கூட, கல்வி அலுவல்கள் எதனையும் குறித்து ஆட்சிக்குழுவிற்கும், கல்விமன்றத்திற்கும் ஆலோசனை கூறுவதற்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

பாடக்குழுக்கள்.

29. கற்பிக்கின்ற துறை ஒவ்வொன்றுடனும் இணைக்கப்பட்ட பாடக்குழுக்கள் இருத்தல் வேண்டும். பாடக்குழுக்களின் அமைப்பும் அதிகாரங்களும்; வகுத்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்;

புலன்களை அமைத்துரு வாக்குதலும் செயற் பணிகளும்.

30. (1) பல்கலைக்கழகமானது நோக்கங்கள் மற்றும் அதனுடைய அலுவற் பணிகளைக் கருத்தில் கொண்டு நிலைவிதிகளால் வகுத்துரைக்கப்பட்டவாறாக புலங்களை அமைத்துருவாக்கலாம்.

(2) புலன்களின் அமைத்துருவாக்கவும் அலுவற்பணிகளும், நிலை விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக்கூடியனவாக இருத்தல் வேண்டும்.

(3) புலம் ஒவ்வொன்றும், நிலை விதிகளின் மூலமாக வகுத்துரைக்கப்படக்கூடிய கற்பிக்கின்ற துறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பிற அதிகார அமைப்புகளை அமைத்துரு வாக்குதல்.

31. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளென நிலைவிதிகளின் மூலம் விளம்பப்படக்கூடிய பிற அமைப்புகளை அமைத்துருவாக்குதலும் அவற்றின் அதிகாரங்களும், வகுத்துரைக்கப்படக் கூடியனவாக இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் - V.
## நிலை விதிகள், துணைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள்.

நிலை விதிகள்.

32. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, நிலைவிதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அல்லது அவற்றுள் ஏதொன்றுக்குமோ, வகை செய்யலாம்; அதாவது:—

(i) பட்டங்களை வழங்குவதற்காக, பட்டமளிப்பு விழாவை நடத்துதல்;

(ii) மதிப்புறு பட்டங்களையும் கல்விச் சிறப்புப் பட்டங்களையும் வழங்குதல்;

(iii) இப்பல்கலைக் கழக அதிகார அமைப்புகளின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்;

(iv) அதிகார அமைப்புகளின் உறுப்பினர்களிடையே எழும் காலியிடங்களை நிரப்புகின்ற முறை;

(v) அதிகார அமைப்புகளின் மற்றும் அவற்றில் குழுக்களின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படத்தக்க படித் தொகைகள்;

(vi) அதிகார அமைப்புகளின் கூட்டங்களில் அலுவல் நடத்துவதற்கான கோரண் உள்ளடங்களாக; அத்தகைய கூட்டங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்;

(vii) அதிகார அமைப்புகளின் ஆணைகள் அல்லது முடிவுகளுக்கு உறுதியொப்பமளித்தல்;

(viii) இப்பல்கலைக் கழகத்திலும், பல்கலைக்கழகத்தின் கல்லூரிகளிலும் கற்பிக்கின்ற துறைகளை உருவாக்குதல்;

(ix) வேந்தர் மற்றும் இணைவேந்தர் அல்லாத இப்பல்கலைக்கழகத்தின் பிற அலுவலர்களின் பதவிக்கால அளவும் அவர்களின் நியமன முறைகளும் மற்றும் பணி பற்றிய வரைக்கட்டுகளும்;

(x) இப்பல்கலைக்கழகத்தினால் பணியமர்த்தப்படும் ஆசிரியர்கள் மற்றும் ஏனையோரின் தகுதிப்பாடுகள்;

(xi) இப்பல்கலைக்கழகத்தினால் பணியமர்த்தப்படும் ஆசிரியர்களையும் ஏனையோரையும் வகைப்படுத்துதல், அவர்களின் நியமனமுறை மற்றும் அவர்களின் பணி பற்றிய வரையறைகளையும் வரைக்கட்டுக்களையும் தீர்மானித்தல்;

(xii) இப்பல்கலைக்கழகத்தினால் பணியமர்த்தப்படும் அலுவலர்கள், ஆசிரியர்களையும் மற்றும் ஏனையோரின் நன்மைக்காக ஓய்வூதியம், பணிக்கொடை, காப்பீடு அல்லது வருங்கால வைப்பு நிதியத்தை ஏற்படுத்துதல்;

(xiii) பட்டதாரி உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவிச் சம்பளங்கள், ஆதரவுப் படிப்புத் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்துதலும் அவற்றை அளிப்பதற்கான வரைக்கட்டுகளும்;

(xiv) கூடங்கள், மாணவர் விடுதிகள், ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றை நிறுவியமைத்தலும், பேணி வருதலும்;

(xv) கூடங்களிலும், மாணவர் விடுதிகளிலும், இப்பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருப்பதற்கான வரைகட்டுகளும் அவ்வாறு தங்கியிருப்பதற்கான கட்டணங்களையும் பிற தொகைகளையும் விதித்தலும்;

(xvi) பட்டதாரிகளைப் பதிவு செய்வதற்கான வரைக் கட்டுகளும் மற்றும் அதற்கான பதிவேட்டினை பேணி வருதலும்;

(xvii) ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு ஏற்பிசைவு அளிப்பதற்கான மற்றும் இப்பல்கலைக்கழகத்தோடு இணைப்புக் கல்லூரிகளை இணைப்பதற்கான வரைக்கட்டுகள்;

(xviii) கல்லூரியொன்று தன்னாட்சிக் கல்லூரியாக பெயர் குறித்தழைக்கப்படுதலோ அல்லது அத்தகைய கல்லூரியை அவ்வாறு பெயர் குறித்து அழைக்கப்படுதலை நீக்குதலோ என்ற முறையிலும் மற்றும் எந்த வரைக்கட்டுக்களுக்கும் உட்பட்டும் செய்யப்பட வேண்டும் என்பதும் மற்றும் கல்விக்குழு, பணியாளர்கள்குழு, பாடக்குழுக்கள், தேர்வாளர் குழுக்கள் ஆகியவற்றை அமைத்துருவாக்குதல் அல்லது மாற்றி அமைத்துருவாக்குதல், அவற்றின் அதிகாரங்கள், பணிகள் ஆகியவை உள்ளடங்கலான தன்னாட்சிக் கல்லூரிகளை நிருவகித்தல் தொடர்பான பொருட்பாடுகள்;

(xix) இப்பல்கலைக்கழக அதிகார அமைப்புகளிடம் அல்லது அலுவலர்களிடம் உள்ளமைந்துள்ள அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்; மற்றும்

(xx) நிலைவிதிகளின் மூலம் வகுத்துரைக்கப்பட வேண்டுமெனக் கோரப்படுகின்ற அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்;

நிலை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன

**33. (1)** ஆட்சிக்குழு, அவ்வப்போது, நிலைவிதிகளைச் செய்யலாம் மற்றும் இந்தப்பிரிவில் இதன்பின்பு வகை செய்யப்பட்டுள்ள முறையில் அந்நிலை விதிகளைத் திருத்தலாம் அல்லது நீக்கலாம்.

(2) கல்விமன்றம், ஆட்சிக் குழுவிற்கு, அவ்வாட்சிக்குழுவால் நிறைவேற்றப்படவேண்டிய நிலைவிதி எதனின் அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது நீக்கம் எதனின் வரைவையும், முன்மொழியலாம், மற்றும் அத்தகைய வரைவானது ஆட்சிக்குழுவினால் அதன் அடுத்த கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, கல்விமன்றம், கல்வி அலுவல்பாடுகள் தவிர பிற பொருட்பாடுகள் தொடர்பான நிலைவிதி எதனின் அல்லது நிலைவிதி ஒன்றின்திருத்தம் அல்லது நீக்கம் எதனின் வரைவினை முன்மொழிதலாகாது.

(3) ஆட்சிக்குழு, (2)–ஆம் உட்பிரிவின்படி கல்விமன்றத்தினால் முன்மொழியப்பட்ட வரைவைப் பரிசீலனை செய்யலாம்; மற்றும் அவ்வரைவை நிறைவேற்றலாம் அல்லது ஏற்க மறுத்துவிடலாம் அல்லது திருத்தங்களுடனோ இல்லாமலோ அதை மறுபரிசீலனைக்காகக் கல்விமன்றத்திற்கு திருப்பியனுப்பலாம்;

(4) (a) ஆட்சிக் குழுவின் உறுப்பினர் எவரும் நிலைவிதியொன்றின் அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது அதன் நீக்கம் எதனின் வரைவையும் ஆட்சிக்குழுவிற்கு முன்மொழியலாம்; மற்றும் ஆட்சிக்குழுவானது அவ்வரைவை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது அது கல்விமன்றத்தின் அதிகாரவரம்பு எல்லைக்குள் வாராத பொருட்பாடு ஒன்றைப் பற்றியதாக இருக்குமானால், அதை ஏற்க மறுத்தவிடலாம்.

(b) அத்தகைய வரைவு, கல்விமன்றத்தின் அதிகார வரம்பு எல்லைக்குள் இருக்கிற பொருள் ஒன்றைப்பற்றியதாக இருக்கிற நேர்வில், ஆட்சிக்குழு, அதைப் பரிசீலனை செய்வதற்காகக் கல்விமன்றத்திற்குக் குறித்தனுப்புதல் வேண்டும்; அம்மன்றமானது அவ்வரைவிற்குத் தான் ஒப்புதலளிக்கவில்லை என்று ஆட்சிக்குழுவிற்கு அறிவிக்கலாம்; அல்லது கல்விமன்றம் ஒப்புதலளிக்கக்கூடிய வடிவில் ஆட்சிக் குழுவிற்கு அவ்வரைவைப் பணிந்தனுப்பலாம்; மேலும், அவ்வாட்சிக் குழு அவ்வரைவைத் திருத்தங்களுடனோ, இல்லாமலோ நிறைவேற்றலாம் அல்லது அதை ஏற்க மறுத்தவிடலாம்.

(5) ஆட்சிக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட நிலைவிதி ஒன்று அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது நீக்கமானது, வேந்தருக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். அவர் அதற்கு இசைவு அளிக்கலாம் அல்லது தாம் இசைவு அளிப்பதை மறுத்து நிறுத்தி வைக்கலாம். ஆட்சிக் குழுவினால் நிறைவேற்றப்பட்ட நிலைவிதி ஒன்று அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது நீக்கமானது, வேந்தரால் அதற்கு இசைவளிக்கப் படுகிற வரையிலும், செல்லுந்தன்மையைப் பெறாது இருத்தல் வேண்டும்.

34. இந்தச் சட்டத்தின் மற்றும் நிலை விதிகளின் வகை முறைகளுக்குட்பட்டு, துணைமுறை விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கேனும் வகை செய்யலாம் அதவாது:— துணைமுறை விதிகள்.

(i) இப்பல்கலைக்கழகத்திற்கும் அதனோடு இணைக்கப்பட்ட அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் மற்றும் பல்கலைக்கழகக் கல்லூரிகள் மற்றும் ஆய்வுகூடங்களில் கட்டணங்களை விதித்தல்;

(ii) இப்பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பட்டங்கள், சிறப்பு பட்டங்கள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழி செய்கின்ற குறித்தகாலப் படிப்புப் பிரிவுகள்;

(iii) பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் தங்குமிடம் குறித்த வரைக்கட்டுகள் மற்றும் பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படும் மாணவர் விடுதிகளில் தங்குமிடத்திற்கான கட்டணங்களை விதித்தல்;

(iv) பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படாத விடுதிகளின் ஏற்பிசைவளிப்பதற்கான வரைக்கட்டுகள்;

(v) எந்த வரைக்கட்டுகளின்படி, இப்பல்கலைக்கழகப் பட்டங்கள், சிறப்பு பட்டங்கள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழி செய்கின்ற குறித்த காலப் படிப்புப் பிரிவுகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதும்;

(vi) இப்பல்கலைக்கழகத்தின் தேர்வுகளை நடத்துதலும் எந்த வரைக்கட்டுகளின் பேரில் அத்தகைய தேர்வுகளுக்கு மாணவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதும்;

(vii) தேர்வுகளுக்கு மாணவர்களை ஏற்றுக் கொள்வது தொடர்பாக எந்த முறையில் விலக்கு அளிக்கப்படலாம் என்பதும்;

(viii) தேர்வு அமைப்புகளின் மற்றும் தேர்வாளர்களின் வரைக்கட்டுகள் மற்றும் நியமன முறை; அவர்களுடைய கடமைகள்;

(ix) இப்பல்கலைக்கழக மாணவர்களிடையே ஒழுக்கத்தைப் பேணி வருதல்;

(x) குறித்த காலப் படிப்புப் பிரிவு, ஆராய்ச்சி, பரிசோதனை மற்றும் நடைமுறைப் பயிற்சி ஆகியவற்றிற்காகவும் இப்பல்கலைக் கழகத்தின் பட்டங்கள், சிறப்பு பட்டங்கள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றிற்கான தேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்வதற்காகவும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்;

(xi) பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களின் தகுதிகள் மற்றும் ஊதியங்கள்;

(xii) எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, இதன் பின்பு நிரந்தரமாகப் பணியமர்த்தப்படுபவர்கள் பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளிலும் மாணவர் விடுதிகளிலும் கற்பிப்பதற்கு தகுதியுடையவரென ஏற்பிசைவு அளிக்கப்படலாகும் என்பது; மற்றும்

(xiii) இந்தச் சட்டத்தினாலோ, நிலை விதிகளினாலோ, செய்யப்பட வேண்டியதாகவுள்ள அல்லது துணைமுறை விதி ஒன்றினால் வகுத்துரைக்கப்படக் கூடிய பிற பொருட்பாடு எதுவும்.

துணைமுறை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன

**35.** (1) இந்தப் பிரிவில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறு தவிர, கல்விமன்றத்தினால் துணை முறை விதிகள் செய்யப்படுதல் வேண்டும்.

(2) கல்வி மன்றத்தால் செய்யப்பட்ட துணைமுறை விதிகள் அனைத்தும், கல்வி மன்றத்தால் நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய தேதியிலிருந்து செயல் விளைவு கொள்ளுதல் வேண்டும்; ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட துணைமுறைவிதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்டதற்குப் பின்னர் கூடிய விரைவில் ஆட்சிக் குழுவிற்கு பணிந்தனுப்பப்பட வேண்டும்; மற்றும் ஆட்சிக்குழு தனது அடுத்தக் கூட்டத்தில் அதனை பரிசீலனை செய்தல் வேண்டும்.

(3) ஆட்சிக்குழுவானது, அத்தகைய கூட்டத்தில் வருகை தந்திருக்கும் மூன்றில் இரண்டு பங்குங்கு குறையாத பெரும்பான்மை உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால், அத்தகைய துணைமுறைவிதியை மாற்றியமைக்கவோ, அல்லது நீக்கவோ அதிகாரம் கொண்டதாகும் மற்றும் அவ்வாறான துணைமுறைவிதி, அவ்வாறான தீர்மானத்தின் தேதியிலிருந்து அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வாறான வடிவத்தில் நேர்வுக்கேற்ப செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும், அல்லது அத்தகைய அவ்வாறு செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்.

ஒழுங்குமுறை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன.

**36.** (1) கல்வி மன்றமானது , இந்தச் சட்டம், நிலை விதிகள் மற்றும் துணைமுறை விதிகளுக்கிணங்க, அவற்றின் கீழ் அதற்கு குறித்தளிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்வதற்கு ஒழுங்கு முறை விதிகளை செய்யலாம்.

(2) அத்தகைய ஒழுங்கு முறை விதிகள் அனைத்தும், கல்விமன்றத்தால் குறிக்கக்கூடிய அத்தகையத் தேதியிலிருந்து செயல்திறம் பெறும். ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதி ஒவ்வொன்றும் கூடியவிரைவில் அதனுடைய அடுத்துவரும் கூட்டத்தில் அதனுடைய பரிசீலனைக்காக ஆட்சிக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் — VI.

## மாணவர்களின் சேர்க்கை மற்றும் தங்குமிடம்.

பல்கலைக்கழக படிப்புப் பிரிவுகளுக்கான சேர்க்கை.

**37.** (1) பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள் அல்லது பட்டயங்களின் தேர்வுகளுக்கான அனுமதிக்காக இப்பல்கலைக்கழகத்திலுள்ள குறித்த கால படிப்பு பிரிவு ஒன்றிற்கு நபரெவரும்:—

(a) அதற்கென வகுத்துரைக்கப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலன்றி ; மற்றும்

(b) இப்பல்கலைக்கழகத்தால் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய பிற கல்வி வரைக்கட்டுகளை நிறைவேற்றியிருந்தாலன்றி

அனுமதிக்கப்படுதல் கூடாது.

(2) பல்கலைக்கழகத் தேர்வு ஒன்றிற்காக நபர் ஒவ்வொருவரும் கல்விமன்றப் பரிந்துரையின்பேரில் செய்யப்பட்ட ஆட்சிக்குழுவின் தனி ஆணை ஒன்றினால் இந்த உட்பிரிவின் வகைமுறைகளிலிருந்து அவர் விளக்களிக்கப்பட்டிருந்தாலன்றி பல்கலைக்கழகக் கல்லூரி அல்லது உறுப்புக் கல்லூரியின் ஆய்வுகூடம் அல்லது இணைக்கப்பட்ட கல்லூரி அல்லது ஏற்பளிக்கப்பட்ட கல்லூரியின் உறுப்பினர் ஒருவராக பதிவு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய விலக்களிப்பு எதுவும் ஆட்சிக்குழு பொருத்தமென கருதலாகிறவாறான அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு செய்யப்படலாம்.

(3) (2)—ஆம் உட்பிரிவின் வகைமுறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாணவர்களும் பட்டமொன்றுக்கான குறித்த காலப் படிப்புப் பிரிவு அல்லாத பிற குறித்த காலப் படிப்புப் பிரிவுகளுக்கு வகுத்துரைக்கப்படும் வரைக்கட்டுகளுக்கிணங்க சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களும், பல்கலைக்கழகத்தின் கல்லூரி சாரா மாணவர்களாக இருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு அனுமதித்தல்.

38. தேர்வு எழுதுபவர் எவரும் பல்கலைக்கழகக் கல்லூரி, அல்லது ஆய்வுக்கூடமொன்றின் அல்லது இணைக்கப்பட்ட கல்லூரி அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரியொன்றின் உறுப்பினரொருவராக அவர் பதிவுசெய்யப்பட்டிருந்தாலன்றி மற்றும் அதற்கான ஒழுங்குமுறை விதிகளின்படி தேவைப்படும் வருகைப் பதிவுகுறித்த தேவைப்பாடுகளை நிறைவு செய்திருந்தாலன்றியும், அல்லது வகுத்துரைக்கப்பட்ட ஒழுங்கு முறை விதிகளின்படி செய்யப்பட்ட கல்விமன்றத்தின் பரிந்துரையின் பேரில் பிறப்பிக்கப்பட்ட ஆட்சிக் குழுவின் ஆணை ஒன்றின் மூலமாக, அவ்வாறு பதிவுசெய்யப்படுவது அல்லது வருகைப்பதிவு குறித்த அல்லது இரண்டையும் குறித்த தேவைப்பாடுகளிலிருந்து அவருக்கு விலக்களிக்கப்பட்டிருந்தாலன்றி, பல்கலைக்கழகத் தேர்வு எதற்கும் ஏற்றுக்கொள்ளப்படுதல் கூடாது. இந்தப் பிரிவின்படி வழங்கப்படும் விலக்களிப்புகளானவை, ஆட்சிக்குழு பொருத்தமென கருதக்கூடிய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டவையாயிருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கான வருகைப் பதிவு குறித்த தகுதி.

39. இப்பல்கலைக்கழகத்தினால் நிறுவப்பெற்ற மற்றும் பேணப்பட்ட, அதனுடன் இணைக்கப்பட்ட அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்பட்டதல்லாத பிற கல்லூரி எதிலும் கல்வி கற்பிக்கப்படுவதன் போதான வருகைப் பதிவு எதுவும், பல்கலைக்கழகத் தேர்வு எதற்கும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுடையதாக ஆக்காது.

தங்குமிடமும் மாணவர் விடுதியும்.

40. இப்பல்கலைக்கழகத்தின், கல்லூரி சாரா மாணவரில்லாத பிற மாணவர், ஒவ்வொருவரும், மாணவர் விடுதியொன்றிலோ அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற வரைக் கட்டுகளின்படியோ தங்குமாறு கோரப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் - VII.

## பல்கலைக்கழக நிதியங்கள்.

பொது நிதியம்.

41. இப்பல்கலைக்கழகம், பொது நிதியம் ஒன்றைப் பெற்றிருக்கும், அந்நிதியத்தில்,—

(a) கட்டணங்கள், மானியங்கள், நன்கொடைகள், கொடைகள் ஆகியவை எவையேனும் இருப்பின் அவற்றிலிருந்து பெறப்படும் அதன் வருமானத்தை;

(b) மைய அரசு அல்லது மாநில அரசு, பல்கலைக்கழக மானியக் குழு அல்லது அதுபோன்ற அதிகார அமைப்பு, உள்ளாட்சி அதிகார அமைப்பு எதுவும் அல்லது அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கூட்டு நிறுவனம் எதனாலும் வழங்கப்பட்ட பங்களிப்பு அல்லது மானியம் எதையும்; மற்றும்

(c) நிலைக் கொடைகளையும் பிற வரவுகளையும் வரவு வைத்தல் வேண்டும்.

பிற நிதியங்கள்.

42. பல்கலைக்கழகம் நிலைவிதிகளினால் வகுத்துரைக்கப் படலாகும் பிற நிதியங்களைக் கொண்டிருக்கலாம்.

நிதியங்களை மேலாண்மை செய்தல்.

43. பல்கலைக்கழக நிதியங்களும் அனைத்துப் பணங்களும் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் மேலாண்மை செய்யப்படுதல் வேண்டும்.

ஆண்டறிக்கை.

44. பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையானது ஆட்சிக் குழுவால் தயாரிக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கல்விமன்றத்திற்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அது கல்விமன்றத்தால் அதன் அடுத்த ஆண்டு கூட்டத்தில் பரிசீலனைச் செய்யப்படுதல் வேண்டும். கல்விமன்றமானது அதன்பேரில் தீர்மானங்களை நிறைவேற்றலாம். அதனை ஆட்சிக்குழுவிற்குத் தெரியப்படுத்தலாம்; மற்றும் அது அதற்கிணங்கியவகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆட்சிக்குழுவானது, அதனால் எடுக்கப்பட்ட நடவடிக்கையினை கல்வி மன்றத்திற்கு தெரிவித்தல் வேண்டும். ஆண்டு அறிக்கையின் படி யொன்றும், அதன்பேரிலான தீர்மானம் ஏதேனும் இருப்பின் அதன் படி ஒன்றும் அரசுக்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

ஆண்டுக் கணக்குகள்.

45. (1) இப்பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் அரசு பணிக்கக்கூடிய அத்தகைய ஆய்வுக்கும் தணிக்கைக்கும் உட்படுத்தப்படுதல் வேண்டும் மற்றும் ஆண்டுக் கணக்குகளின் மற்றும் தணிக்கை அறிக்கையின் நகலொன்று அரசுக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) இப்பல்கலைக்கழகம், அத்தகைய தணிக்கையில் எழுப்பப்பட்ட மறுப்புரைகளைத் தீர்த்து வைத்தல் வேண்டும் மற்றும் அந்தத் தணிக்கை அறிக்கையின்பேரில் அரசினால் பிறப்பிக்கப்படக்கூடிய அத்தகைய அறிவுறுத்தல்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) கணக்குகள், தணிக்கை செய்யப்பட்டவுடன் ஆட்சிக்குழுவால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அதனுடைய நகல்களை கல்விமன்றத்திற்கு அதன் அடுத்தக் கூட்டத்தில் வைப்பதற்காகப் பணிந்தனுப்புவதோடு அவற்றை அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதத்திற்குள் அரசுக்கு பணிந்தனுப்புதல் வேண்டும்.

(4) அரசு, ஆண்டுத் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளையும் ஆண்டு அறிக்கையும் அதன் கருத்துரைகளோடுகூட சட்டமன்றப் பேரவையின் முன்பு வைப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் - VIII.

## பணி நிபந்தனைகள்.

ஓய்வூதியம், பணிக்கொடை முதலானவை.

46. (1) இப்பல்கலைக்கழகம், இப்பல்கலைக்கழகத்தால் பணியமர்த்தப்பட்டுள்ள தன் அலுவலர்கள், ஆசிரியர்கள், மற்ற நபர்கள், ஆகியோரின் நலனுக்காக, வகுத்துரைக்கப்படக்கூடிய முறையிலும் மற்றும் அத்தகைய வரைகட்டுகளுக்குட்பட்டும், தான் பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய ஓய்வூதியம், பணிக்கொடை காப்பீடு, வருங்கால வைப்பு நிதியம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் வேண்டும்.

(2) இப்பல்கலைக்கழகம் (1) ஆம் உட்பிரிவின்படி வருங்கால வைப்பு நிதியம் ஒன்றை அவ்வாறு ஏற்படுத்தியுள்ளவிடத்து, இப்பல்லைக்கழகம் ஓர் உள்ளாட்சி அதிகார அமைப்பாகவும், அந்நிதியம் ஓர் அரசு வருங்கால வைப்பு நிதியமாகவும் இருந்தாற் போன்றே, 1925– ஆம் ஆண்டு வருங்கால வைப்பு நிதியங்கள் சட்டத்தின் வகைமுறைகள் அந்நிதியத்திற்குப் பொருந்துதல் வேண்டும் என்று அரசு விளம்பலாம்.

மையச் சட்டம் XIX/1925

(3) இப்பல்கலைக்கழகம், நிதிக்குழுவை கலந்தாய்வு செய்து; தான் தீர்மானிக்கலாகும் முறையில் அவ்வருங்கால வைப்பு நிதியத் தொகையை முதலீடு செய்யலாம்.

47. (1) பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பு முகமையாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இருத்தல் வேண்டும்: ஆளெடுப்பும் பணி நிபந்தனைகளும்.

வரம்புரையாக, அரசுப் பணியில் உள்ள தொகுதி D பதவிகளுக்கு இணையான பல்கலைக்கழகப் பதவிகள், வெளிப்பணியாக்கம் மூலம் நிரப்பப்படும்.

(2) இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்குட்பட்டு, இப்பல்கலைக்கழகத்தில் பணியிலமர்த்தப்பட்டுள்ள, ஆசிரியர்கள் மற்ற நபர்கள் ஆகியோரின் நியமனம், அவர்களை தெரிவு செய்வதற்கான நடைமுறை, அவர்களின் சம்பளம் மற்றும் படித் தொகைகள் மற்றும் பிற பணி நிபந்தனைகள் ஆகியன, வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

48. (1) இப்பல்கலைக்கழகத்தினால் பேணி வரப்படும் கல்வி நிலையங்களின் உதவிப் பேராசிரியர், இணைப் பேராசிரியர், பேராசிரியர், நூலகர் மற்றும் இதர ஆசிரியர் பதவிகளுக்கு நியமனஞ் செய்வதற்காக ஆட்சிக் குழுவிற்குப் பரிந்துரைகளைச் செய்வதற்காகத் தெரிவுக் குழுக்கள் இருத்தல் வேண்டும். தெரிவுக் குழுக்கள்.

(2) (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான தெரிவுக் குழுவானது, துணைவேந்தரையும், வேந்தரால் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரையும், அரசால் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரையும் வகுத்துரைக்கப் படக்கூடிய அத்தகைய பிற நபர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

வரம்புயைராக, தெரிவுக் குழுவால் செய்யப்படும் அத்தகைய நியமனங்கள் பல்கலைக்கழக மானியக் குழுவினால் அல்லது அத்தகைய நியமனம் தொடர்பான பிற முகவாண்மைகளால் பிறப்பிக்கப்பட்ட நெறிமுறைகளுக்கு இணங்கிய வகையில் இருத்தல் வேண்டும்.

(3) துணைவேந்தர், தெரிவுக்குழுவின் கூட்டங்களுக்கு தலைமை வகிப்பார்.

(4) தேர்வுக்குழு ஒன்றின் கூட்டங்கள் துணைவேந்தரால் கூட்டப்படும்.

(5) பரிந்துரைகளைச் செய்வதில் தெரிவுக்குழுவினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை என்னவென்று, துணை முறை விதிகளின் மூலம் விதிக்கப்படுதல் வேண்டும்.

(6) தெரிவுக்குழு ஒன்றினால் செய்யப்படும் பரிந்துரைகளை ஆட்சிக்குழு ஏற்றுக் கொள்வதற்கு இயலாதிருக்குமானால், அது தன் காரணங்களைப் பதிவு செய்து, இறுதி ஆணைகளுக்காக, அதை வேந்தருக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(7) தற்காலிகப் பதவிகளுக்கான நியமனங்கள், கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ள முறையில் செய்யப்படுதல் வேண்டும்:—

(i) அத்தற்காலிகக் காலியிடமானது ஒரு கல்விக்காலத் தொடருக்கும் அதிகமானதொரு கால அளவிற்கானதாக இருக்குமானால், அது முன்சென்ற வகைமுறைகளில் குறித்துக் காட்டப்பட்டுள்ள நடைமுறைக்கிணங்கத் தெரிவுக் குழுவின் ஆலோசனையின் பேரில் நிரப்பப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, துணை வேந்தர், பணி நலனை முன்னிட்டு அக்காலியிடத்தை நிரப்புவது தேவையாயிருக்கிறது என்று தெளிவுறக் காண்பாரானால் (ii)–ஆம் உட்கூறில் குறிப்பிடப்படும் உள்ளமை தெரிவுக்குழு ஒன்றினால், ஒரு தற்காலிக அடிப்படையின் பேரில் ஆறு திங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு அந்த நியமனம் செய்யப்படலாம்.

(ii) அத்தற்காலிக காலியிடமானது, ஓராண்டுக்கு குறைவானதொரு கால அளவுக்கானதாக இருக்குமானால், தொடர்புடைய புலத்தின் தலைவரையும் துறைத் தலைவரையும், துணை வேந்தரால் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரையும் உள்ளடக்கிய உள்ளமை தெரிவுக்குழு ஒன்றின் பரிந்துரையின்பேரில், அத்தகைய காலி இடத்திற்கு நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, ஒருவரே புலத்தலைவர் பதவியையும் மற்றும் துறைத்தலைவர் பதவியையும் சேர்த்து வகிப்பாரானால், அத்தெரிவுக்குழு துணை வேந்தரால் பெயர் குறிப்பிடப்பட்ட இருவரை உள்ளடக்கியதாக இருக்கலாம்:

மேலும் வரம்புரையாக, கற்பிக்கின்ற பதவிகளில் இறப்பினாலோ, பிற காரணம் எதனாலுமோ எதிர்பாராத தற்செயல் காலியிடங்கள் ஏற்படும் நேர்வில், புலத்தலைவர் தொடர்புடைய துறையின் தலைவரைக் கலந்தறிந்து ஒரு திங்களுக்குத் தற்காலிகப் பணி நியமனம் ஒன்றைச் செய்து, அத்தகைய நியமனம் குறித்துத் துணை வேந்தருக்கும் பதிவாளருக்கும் அறிவிக்கலாம்;

(iii) தற்காலிகமாக நியமிக்கப்படும் ஆசிரியர் எவரும், இந்தச்சட்டத்தின்படி நியமிக்கப்படுவதற்காக முறையான தெரிவுக்குழு ஒன்றினால் அவர் பரிந்துரைக்கப்படவில்லையானால், நேர்விற்கேற்ப, அவர் தற்காலிக அல்லது நிலையான நியமனத்திற்காக ஒரு உள்ளமை தெரிவுக் குழுவினாலோ அல்லது ஒரு முறையான தெரிவுக் குழுவினாலோ பின்னர் தெரிந்தெடுக்கப்பட்டாலன்றி, அத்தகைய தற்காலிக வேலை வாய்ப்பின்பேரில் பணியில் தொடர்ந்து இருத்தல் கூடாது.

துறைத் தலைவர்களின் பணி வரையறைகளும் வரைக்கட்டுகளும்.

49. (1) இப்பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறையும் ஒரு பேராசிரியராக இருக்க வேண்டிய ஒரு தலைவரை அல்லது இயக்குநரைக் கொண்டிருக்கும்: மற்றும் அவருடைய கடமைகளும் அலுவற்பணிகளும், நியமனத்திற்கான வரையறைகளும் வரைக்கட்டுகளும் துணைமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, துறை எதிலேனும் ஒருவருக்கு மேற்பட்ட பேராசிரியர்கள் இருப்பார்களானால், அந்தத் துறையின் தலைவர், துணைமுறை விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் நியமிக்கப்படுதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, பேராசிரியர் எவரும் இல்லாத துறையொன்றில், துணைப் பேராசிரியர் ஒருவர் அல்லது சிறப்புப் பேராசிரியர் ஒருவர் துணைமுறை விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் துறையின் தலைவராக நியமிக்கப்படலாம்.

(2) துறைத் தலைவராக நியமிக்கப்பட முன்வந்ததை ஏற்க மறுத்துவிடுவதற்கு ஒரு பேராசிரியர் அல்லது இணைப் பேராசிரியர் அல்லது துணைப் பேராசிரியர் உரிமையுண்டு.

(3) துறைத் தலைவராக நியமிக்கப்பட்ட ஒருவர், மூன்றாண்டுக் கால அளவிற்கு அத்தகையவராகப் பதவி வகித்தல் வேண்டும். மற்றும் மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.

(4) துறைத் தலைவரொருவர், தம்முடைய பதவிக்கால அளவின்போது, எந்த நேரத்திலும் தம்முடைய பதவியை விட்டு விலகலாம்.

(5) துறைத் தலைவரொருவர், துணைமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அலுவற்பணிகளைப் புரிந்து வருவார்.

குழுக்களை அமைத்துருவாக்குதல்.

50. பல்கலைக்கழக அதிகார அமைப்புகள் அனைத்தும், குழுக்களை அமைத்துருவாக்குவதற்கும் அல்லது மாற்றியமைத்துருவாக்குவதற்கும் மற்றும் தங்களுடைய அதிகாரங்களுக்குள் தாங்கள் பொருத்தமென கருதுகின்றவற்றை, அவற்றிடம் ஒப்படைவு செய்வதற்கும் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும். அத்தகைய குழுக்கள், பிறவாறு வகைசெய்யப்பட்டுள்ளவாறு தவிர, தொடர்புடைய அதிகார அமைப்பின் உறுப்பினர்களையும் அவ்வதிகாரஅமைப்பு ஒவ்வொரு நேர்விலும் பொருத்தமென கருதக்கூடிய பிற நபர்கள் எவரேனும் இருப்பின் அவர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் – IX.

### கல்லூரிகளை மாற்றுதல்.

தமிழ்நாடு சட்டம் 2/1982.

ஒரு சில கல்லூரிகளைப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றுதல்.

51. (1) 1981–ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி (இதன்பின்பு, 2/1982–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) செய்யப்பட்ட, நிலை விதிகள் ஒழுங்குமுறை விதிகள், ஆணைகள் ஆகியவற்றில் என்ன அடங்கியிருந்த போதிலும் குறிக்கப்பட்ட தேதியன்றும் அதுமுதற்கொண்டும், பல்கலைக்கழக பரப்பிடத்தில் உள்ள கல்லூரிகள் அத்தகைய தேதிக்கு முன்னதாக உள்ள குறிக்கப்பட்ட தேதியன்று 1982–ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலிருந்து இணைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(2) அரசு, குறிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் எந்நேரத்திலும், தாம் பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், அதன் பயன்பாட்டிற்காக உள்ள அதனுடைய நிலங்கள் எதனையும் பல்கலைக் கழகத்திற்கு மாற்றலாம்.

(3) அரசு, குறிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர், எந்நேரத்திலும், தாம் பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின்பேரில், இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ள அதன் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் எவற்றையும் கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை செய்வதை இப்பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாம்.

(4) இம்மாநிலத்தில், பல்கலைக்கழகமொன்றை நிறுவுவது தொடர்பான பிறச்சட்டம் எதிலுமோ, அல்லது அதன்படி செய்யப்பட்ட நிலைவிதிகள், துணை முறை விதிகள், ஒழுங்குமுறை விதிகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும் குறிக்கப்பட்ட தேதியன்றும் அதுமுதற் கொண்டும் (3)–ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட கல்லூரிகள் அல்லது நிறுவனங்கள் குறிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக உள்ள தேதியன்று, அவை எந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கட்டிருந்தனவோ அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரிக்கப்பட்டு இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

பாரதிதாசன் பல்கலைக்கழகப் பணியாளர்கள் குறித்த சில பணியை இப்பல்கலைக் கழகத்திற்கு மாற்றுதல்.

52. (1) நியமிக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முன்னர், பாரதிதாசன் பல்கலைக்கழக அலுவல் தொடர்பாகப் பணியாற்றி வருகின்ற ஒவ்வொரு நபரும், கூறப்பட்ட தேதியிலிருந்து அவர் பாரதிதாசன் பல்கலைக்கழகப் பணியாளராய் இருத்தல் அற்றுப் போதல் வேண்டும் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் பணியாளரொருவராகுதல் வேண்டும்.

(2) (a) நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்பு கூடிய விரைவில் அரசு, பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் இப்பல்கலைக்கழக துணை வேந்தர்களுடன் கலந்தறிந்த பின்பு, பொது அல்லது சிறப்பு ஆணையின் மூலம், அத்தகைய ஆணையில் குறித்துரைக்கப்படும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் அத்தகைய பணியாளர்கள், அவ்வாணையின் குறித்துரைக்கப்படலாகும் அந்தேதியினின்றும் அது முதற்கொண்டும், இப்பல்கலைக்கழகத்தின்அலுவலர்கள் தொடர்பாகப் பணியாற்றுவதற்கு ஒதுக்கியளிக்கப்பட்டவராகுதல் வேண்டும்:

வரம்புரையாக, அத்தகைய பணிப்பாணை எதுவும், அத்தகைய பணியாளர் எவரையும் பொறுத்து, அத்தகைய ஒதுக்கீட்டிற்கு அவருடைய இசைவில்லாமல் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(b) (a) –கூறின் படியான ஆணையில் குறிப்பிடப்படும் தேதியிலும், அது முதற்கொண்டும், அத்தகைய ஆணையின் குறித்துரைக்கப்படுபவர்கள் பல்கலைக்கழகத்தின் பணியாளர்களாக ஆகுதல் வேண்டும் மற்றும் அவர்கள் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பணியாளர்களாய் இருத்தல் அற்றுப் போதல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவு அல்லது (2)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படும் நபர் ஒவ்வொருவரும், நேர்விற்கேற்ப இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிராதது போன்ற நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது (2) ஆம் உட்பிரிவின் படியான ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அவர் பெற்றிருக்கக்கூடிய அதே பதவிக்கால அளவு, அதே ஊதியம், மற்றும் அதே வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரிலும், ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை என்று ஏதேனுமிருப்பின் அது மற்றும் பிற பொருட்பாடுகள் குறித்து அதே உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுடனும் பல்கலைக்கழகத்தின் கீழ் பதவி வகித்து வருவார்.

(4) (1) மற்றும் (2) –ஆம் உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை ஆகியவற்றை வழங்குவதற்கான கடப்பாடானது, பல்கலைக்கழகத்தின் கடப்பாடாக இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் - X.

## மாறுதல்கால வகைமுறைகள்.

முதல் துணை வேந்தரின் நியமனம்.

53. 11–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும் இந்தச் சட்டமானது ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியில் இருந்து மூன்று திங்களுக்குள்ளாக, முதல் துணை வேந்தரானவர் அரசினால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கு அதனால் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தின் பேரிலும் அது பொருத்தமெனக் கருதலாகும் பிற வரைக்கட்டுகளின் பேரிலும் நியமிக்கப்படுவார்:

வரம்புரையாக, முதல் துணை வேந்தராக நியமிக்கப்பட்டவர், அவருடைய பதவிக் காலத்தின்போது எழுபது வயதை நிறைவுசெய்வாரானால், பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

முதல் பதிவாளரின் நியமனம்.

54. 13–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டமானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள்ளாக, முதல் பதிவாளரானவர், அரசினால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கும் அதனால் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தின் பேரிலும் மற்றும் அது பொருத்தமெனக் கருதலாகும் பிற வரைக் கட்டுகளின்பேரிலும் நியமிக்கப்படுவார்:

வரம்புரையாக, முதல் பதிவாளராக நியமிக்கப்பட்டவர், அவருடைய பதவி காலத்தின்போது அறுபது வயதை நிறைவுசெய்யும் போது பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

முதல் துணை வேந்தரின் மாறுதல்கால அதிகாரங்கள்.

55. (1) நியமனம் செய்யப்பட்ட தேதிக்கு பின்பு ஆறு திங்களுக்குள் அல்லது அறிவிக்கையின் மூலம் அரசு குறித்துரைக்க கூடிய ஓராண்டுக்கு மேற்படாத அத்தகைய அதிகமான கால அளவிற்குள், ஆட்சிக்குழு மற்றும் கல்வி மன்றம் ஆகியவற்றையும் இப்பல்கலைக்கழகத்தின் பிற அதிகார அமைப்புகளையும் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது முதல் துணை வேந்தரின் கடமையாகும்.

(2) முதல் துணை வேந்தர் அரசைக் கலந்தறிந்து, இப்பல்கலைக்கழகம் செயற்படுவதற்கு தேவையாயிருக்கக்கூடிய விதிகளைச் செய்தல் வேண்டும்.

(3) (1)–ஆம் உட்பிரிவின்படி அமைத்து உருவாக்கப்பட்ட அதிகார அமைப்புகள், அரசு இதன்பொருட்டு அறிவிக்கையின் மூலம் குறித்துரைக்கக் கூடிய தேதியில் அவற்றின் செயற்பணிகளைச் செலுத்தத் தொடங்குதல் வேண்டும்.

(4) தேவைப்படலாகும் நிலை விதிகள் துணை முறை விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றை வரைந்து அவற்றை முடிவு செய்வதற்காக, அவை பற்றி நடவடிக்கை எடுக்கத் தகுதி வாய்ந்த அந்தந்த அதிகார அமைப்புகளுக்கு அவற்றைப் பணிந்தனுப்ப வேண்டியது முதல் துணை வேந்தரின் கடமையாகும். அத்தகைய நிலைவிதிகள், துணை முறை விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை, உருவாக்கப்பட்டவுடன் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்.

(5) இந்தச் சட்டத்திலும் நிலை விதிகளிலும், என்ன அடங்கியிருந்தபோதிலும், மற்றும் அதிகார அமைப்பு ஒன்று உரியவாறு அமைக்கப்படும் காலம் வரையிலும், முதல் துணை வேந்தர், இந்தச் சட்டம் மற்றும் நிலைவிதிகளின்படி அத்தகைய அதிகார அமைப்பின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளில் எதனையும் செலுத்தி வருவதற்கும் புரிந்து வருவதற்கும் தற்காலிகமாக அலுவலர் எவரையும் நியமிக்கலாம் அல்லது குழு எதையும் அமைத்துருவாக்கலாம்.

## அத்தியாயம் - XI.

## பல்வகைப்பட்டவை.

தற்செயல் காலியிடங்களை நிரப்புதல்.

56. இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் பதவிவழி உறுப்பினர்களல்லாத பிற உறுப்பினர்களுக்கிடையேயும் எழும் தற்செயல் காலியிடங்கள் அனைத்தும், எந்த உறுப்பினருடைய பதவியிடம் காலியாக ஆகியுள்ளதோ அந்த உறுப்பினரைப் பெயர் குறித்து நியமனம் செய்தவரால் அல்லது தேர்ந்தெடுத்தவரால் அல்லது அமைப்பினால் வசதிக்கேற்றபடி எவ்வளவு விரைவில் கூடுமோ அவ்வளவு விரைவில் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் தற்செயல் காலியிடமொன்றுக்கு பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர் எவருடைய பதவியிடத்தை அவர் நிரப்புகிறாரோ அவர் ஓர் உறுப்பினராக இருந்திருக்கக்கூடிய காலஅளவின் எஞ்சிய பகுதிக்கு அத்தகைய அதிகார அமைப்பு அல்லது அமைப்பின் உறுப்பினராக இருந்து வருவார்:

வரம்புரையாக, இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கிடையேயும் காலக்கழிவினால் எழுகின்ற காலியிடங்கள் அந்தக் காலியிடங்கள் ஏற்படும் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு முந்தியதல்லாத, துணைவேந்தர் பொருத்தமென நினைக்கின்ற நாட்களில் நடைபெற வேண்டுமென்று அவரால் தீர்மானிக்கப்படக்கூடிய தேர்தல்கள் மூலம் நிரப்பப்படலாம்:

மேலும் வரம்புரையாக, தற்செயல் காலியிடம் எதுவும் இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினரின் பதவிக் காலமும் முடிவடையும் தேதிக்குமுன், ஆறு மாதங்களுக்குள்ளாக அத்தகைய காலியிடம் ஏற்படுமானால், நிரப்பப்படுதலாகாது.

பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளின் மற்றும் பிற அமைப்புகளின் நடவடிக்கைகள் காலியிடங்கள் காரணமாகச் செல்லாதவையாக ஆக்கப்படுதல் ஆகாது.

57. இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் காலியிடம் ஏதேனும் இருக்கின்ற காரணத்தால் மட்டுமே, அல்லது இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினர் ஒருவரின் தேர்தலில் அல்லது நியமனத்தில் குறைபாடு அல்லது முறைகேடு ஏதேனும் உள்ள காரணத்தால் மட்டுமே, அல்லது நேர்வுக்கான தகுதிகளை ஊறுபடுத்தாத அத்தகைய செயல் அல்லது நடவடிக்கையில், குறைபாடு அல்லது முறைகேடு ஏதேனும் உள்ள காரணத்தால் மட்டுமே, அல்லது பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பானது இந்தச் சட்டம் கோருகிறவாறு அத்தகைய இடைவெளிகளில் கூடவில்லை என்னும் காரணத்தால் மட்டுமே செல்லாததாக ஆக்கப்படுதலாகாது.

பல்கலைக்கழக உறுப்பினர் பதவி நீக்கல்.

58. (1) ஆட்சிக் குழுவானது, ஆட்சிக் குழுவின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குகளுக்குக் குறையாதவர்களின் பரிந்துரையின் பேரில், இதன் பொருட்டு செய்யப்படும் எழுத்துருவிலான ஆணை ஒன்றின் மூலமாக பட்டதாரிகள் பதிவேட்டிலிருந்து நபர் எவரின் பெயரையும் நீக்கம் செய்யலாம் அல்லது இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் எவரேனும், ஆட்சிக் குழுவின் கருத்தின்படி, ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கியதாகவுள்ள ஒரு குற்றச் செயலுக்காக குற்றவியல் வழக்கு நீதிமன்றமொன்றினால் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பாரானால், அல்லது கடுந்தவறான நடத்தை இழைத்த குற்றவாளியாக இருப்பாரானால், ஆட்சிக் குழுவின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையரால் கூட்டத்திற்கு வருகை தந்து வாக்களிக்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்கு குறைந்ததல்லாத பெரும்பான்மையாராலும் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலமாகவும் இதன் பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்துருவிலான ஆணை ஒன்றின் மூலம் அத்தகைய நபரை, இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கம் செய்யலாம் மற்றும் அதே காரணத்திற்காக, இப்பல்கலைக்கழகத்தால் அந்த நபருக்கு அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட பட்டம் அல்லது பட்டயம் எதனையும் திரும்பப் பெறலாம்.

(2) நபர் எவரும், மனச் சீர்கேடுற்றவராகவோ அல்லது நொடித்த ஒருவராக நீதித் தீர்ப்பு பெறுவதற்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தால் அல்லது நொடித்த ஒருவராக நீதித் தீர்ப்பு அளிக்கப் பெற்றிருந்தால், இதன் பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்துருவிலான ஆணையொன்றின் மூலம் ஆட்சிக் குழுவானது, இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் அவரை நீக்கம் செய்யலாம்.

(3) நபரொருவரின் மீதும் எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கு எதிராகக் காரணங்காட்டுவதற்கு, அவருக்கு நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி இந்தப் பிரிவின்படி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் கூடாது.

(4) நேர்விற்கேற்ப, (1)–ஆம் உட்பிரிவு அல்லது (2)–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றின் படி ஒன்றினை, அது அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய நபருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

பல்கலைக்கழக அதிகார அமைப்புகளையும் பிற அமைப்புகளையும் அமைத்துரு வாக்குதல் பற்றிய தகராறுகள்.

59. இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது இப்பல்கலைக்கழக பிற அமைப்பு எதனின் உறுப்பினர் ஒருவராக எவரேனும் உரியவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா அல்லது பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்டுள்ளாரா அல்லது உறுப்பினராயிருப்பதற்குத் தகுதி உடையவராயிருக்கின்றாரா என்பது குறித்து வினா ஏதேனும் எழுமானால், அவ்வினா, வேந்தருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும். அதன் மீதான அவருடைய முடிவே இறுதியானதாகும்.

தகவல் பெறுவதற்கான அதிகாரம்.

60. இந்தச் சட்டத்திலோ அப்போதைக்கு செல்லாற்றல் பெற்றுள்ள பிற சட்டம் எதிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசு எழுத்துருவிலான ஆணையின் மூலமாக, இப்பல்கலைக்கழக அலுவல்கள் தொடர்பான பொருட்பாடு எதையும் பற்றி, இப்பல்கலைக் கழகத்திடமிருந்து தகவல் எதையும் கேட்டுப் பெறலாம், மற்றும் இப்பல்கலைக்கழகம் அத்தகைய தகவல் தன்னிடம் இருக்குமானால், அத்தகைய தகவலை நியாயமானதொரு கால அளவுக்குள் அரசுக்கு அளித்தல் வேண்டும்:

வரம்புரையாக இப்பல்கலைக்கழகம் கமுக்கமானதெனக் கருதுகிற தகவலைப் பொறுத்தவரையில், இப்பல்கலைக்கழகமானது அதை வேந்தர் மற்றும் இணைவேந்தர் ஆகியோர் முன்பு வைக்கலாம்.

வருங்கால வைப்பு நிதியம் மற்றும் அது போன்ற நிதியங்களில் சேர்ந்துள்ள தொகைகளை மாற்றுதல்

61. (1) நியமனம் செய்யப்பட்ட நாளன்று 52ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் மற்றும் 52ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (*a*) கூறின்படி ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நாளன்று அந்தப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் வருங்கால வைப்பு நிதியக் கணக்குகளின் வரவு, இருப்பில் உள்ள தொகைகள், இப்பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன வருங்கால வைப்பு நிதியக் கணக்குகளைப் பொறுத்த கடப்பாடானது, இப்பல்கலைக்கழகத்தின் கடப்பாடாக இருக்கும்.

(2) பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் வயது முதிர்வு ஓய்வு நிதியம் மற்றும் அதே போன்ற பிற நிதியங்கள் எவையேனுமிருப்பின் அவற்றில் சேர்ந்துள்ள தொகைகளிலிருந்து, 52ஆம் பிரிவின் (1) மற்றும் (2)ஆம் உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட நபர்களின் சார்பாக வயது முதிர்வு நிதியம் அல்லது அதுபோன்ற பிற நிதியங்கள் எவையேனுமிருப்பின், அவற்றின் வரவு வைக்கப்பட்டிருக்கின்ற தொகைகளை பல்கலைக்கழகத்திற்கு வழங்குதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட தொகையானது பல்கலைக்கழகத்தால் அதன் பணியாளர்களின் நலனுக்காக நிறுவப்படக்கூடிய வயது முதிர்வு ஓய்வு நிதியம் அல்லது அதுபோன்ற பிற நிதியங்கள் எவையேனுமிருப்பின் அவற்றின் பகுதியாக அமைத்தல் வேண்டும்.

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தினால் சில குறிப்பிட்ட தொகை வழங்கப்படுதல்.

62. (1) பாரதிதாசன் பல்கலைக்கழகமானது, நியமனஞ்செய்யப்பட்ட தேதியன்று உள்ள தனது நிதியங்களிலிருந்து பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் கலந்தறிந்து, அரசு குறித்துரைக்கக்கூடிய தொகையினை, பல்கலைக்கழகத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(2) (1)—ஆம் உட்பிரிவின்படி வழங்கப்படவேண்டிய தொகையானது, 52 ஆம் பிரிவின்படி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் இப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகைகளுடன் கூட அமைந்ததாக இருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 2/1982 பொருந்தாது.

63. (1) (2) முதல் (8) வரையிலான உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டு 1982 ஆம் ஆண்டு சட்டமானது குறிக்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகிற பரப்பிடங்களைப் பொறுத்த அளவில், பொருந்துவது அற்றுப் போதல் வேண்டும்.

(2) அவ்வாறு அற்றுப்போவதானது,—

(a) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகின்ற பரப்பிடங்களைப் பொறுத்த அளவில், 1982 ஆம் ஆண்டுச் சட்டம், முந்தைய செயற்பாட்டில் இருந்ததையோ; அல்லது

(b) 1982 ஆம் ஆண்டு சட்டத்திற்கெதிராகப் புரியப்பட்ட குற்றச் செயல் எதனையும் பொறுத்த அளவில் ஏற்க நேரிட்ட தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையுமோ; அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதையும் பாதிக்கலாகாது; இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதது போன்றே, அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதுவும் தொடுக்கப்படலாம், தொடர்ந்து நடத்தப்படலாம், அல்லது நிறைவேற்றப்படலாம்; மற்றும் அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், 1982—ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் செய்யப்பட்டவையும், மற்றும் அமர்த்துகை செய்யப்பட்ட தேதியில் செல்லாற்றல் பெற்றுள்ளவையுமான நிலைவிதிகள், துணை முறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அனைத்தும், அவற்றிற்குப் பதிலாக இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்படக்கூடிய நிலைவிதிகள், துணை முறை விதிகள் மற்றும் ஒழுங்கு முறை விதிகள் ஆகியவை அமைக்கின்ற வரையிலும், அவை எந்த அளவிற்கு இந்தச் சட்டத்துடன், வகைமுறைகளுடன் ஒவ்வாதவாக இல்லாதிருக்கின்றனவோ அந்த அளவுக்கு இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தில் அல்லது (3)—ஆம் உட்பிரிவின்படி தொடர்ந்து செல்லாற்றல் பெறச் செய்யப்பட்டுள்ள அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட நிலை விதிகள், துணை முறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் என்ன அடங்கியிருந்த போதிலும், நியமனஞ்செய்யப்பட்ட தேதிக்கு முன்னர் பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்பெற்ற இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் இருக்கின்ற கல்லூரி ஒன்றின் மற்றும் அந்தப் பல்கலைக்கழகத் துறைகளில் மாணவராய் இருந்திருக்கின்ற அல்லது பாரதிதாசன் பல்கலைக்கழகத் தேர்வுகளில் எதையும் எழுதுவதற்குத் தகுதி வாய்ந்தவராக இருந்திருக்கின்ற ஒவ்வொரு நபரும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தனது குறித்த காலப் படிப்பிற்கிணங்க கலைஞர் பல்கலைக்கழகத்தால் தீர்மானிக்கப்படக்கூடிய மாணவர்கட்கு, தீர்மானிக்கப்படக்கூடிய கால அளவுக்கு மற்றும் தீர்மானிக்கப்படக்கூடிய பயிற்றுவித்தல், கற்பித்தல் மற்றும் பயிற்சிக்கு கலைஞர் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்தல் வேண்டும். மேலும் அத்தகைய மாணவர்கள் அந்தக் கால அளவின் போது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் வைக்கப்படும் அல்லது நடத்தப்படும் தேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தேர்வுகளின் முடிவின் பேரில் தகுதி பெற்ற மாணவர்கட்கு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் நேரிடையான பட்டம், பட்டயம் அல்லது பிற கல்விச் சிறப்புகள், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் அளிக்கப்படுதல் வேண்டும்.

(5) அமர்த்துகை செய்யப்பட்ட தேதிக்கு முன்னர்,—

(a) பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் இணைக்கப்பட்டவையாய் இருக்கின்ற அல்லது அதனால் ஏற்பிசைவு அளிக்கப்பட்டவையாக இருக்கின்றவையும்; மற்றும்

(b) பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பட்டத் தேர்வுக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான குறித்த காலப்படிப்பிற்கு வகை செய்கின்றவையுமான இந்தச்சட்டத்தின்படி, கலைஞர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச்சட்டத்தின் வகைமுறைகள் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு அதன்படியே பொருத்துதல் வேண்டும்.

(6) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள் மற்றும் பட்டயங்களுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளபடுவதற்கான குறித்த காலம் படிப்பிற்கு வகை செய்கின்ற அந்த பல்கலைக்கழகத்தினால் தொடர்ந்து ஏற்பிசைவளிக்க பெறுகின்ற, இப் பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் உள்ள அனைத்து கல்லூரிகளும், இந்தச் சட்டத்தின் படி பல்கலைக்கழகத்தால் ஒப்புதலளிக்கப்பெற்ற கல்லூரிகளாக கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு அதன்படியே பொருந்துதல் வேண்டும்.

(7) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் தொடர்ந்து ஏற்பிசைவளிக்க பெற்று வருகின்ற இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் உள்ள தங்கும் விடுதிகள் அனைத்தும் இந்தச் சட்டத்தின் படி கலைஞர் பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவளிக்க பெற்ற தங்கும் விடுதிகளாக கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு அதன்படியே பொருந்துதல் வேண்டும்.

(8) (2)—ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, ஆனால் (3) முதல் (6) வரையிலான உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு ஊறில்லாமல், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகின்ற பரப்பிடங்கள் எதனையும் பொறுத்து, 1982—ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறை எதனின்படியும் அமர்த்துகை குறிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் நேரிணையான வகைமுறையின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச்சட்டத்தின் நேரிணையான வகைமுறையின்படி செய்யப்பட்ட செயல் எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் தள்ளி வைக்கப்பட்டாலன்றியும் தள்ளி வைக்கப்படுகின்ற வரையிலும் அதன்படி தொடர்ந்து செயல் விளைவு பெற்றிருத்தலும் வேண்டும்.

பட்டதாரிகளை பதிவுசெய்தல்.

64. (1) குறிக்கப்பட்ட நாளன்றும் அது முதற்கொண்டும்,—

(a) இந்திய எல்லைப் பரப்பிடத்திற்குள் பல்கலைக்கழகம் எதனின் பட்டதாரியாக மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் இருந்து வந்திருக்கிற; அல்லது

(b) இந்திய எல்லைப் பரப்பிடத்திற்குள், உள்ள பல்கலைக் கழகம் எதனின் பதிவுபெற்ற பட்டதாரியாக இருக்கிற இப்பல்கலைகழக பரப்பிடத்திற்குள் சாதாரணமாக வசிக்கும் நபரெவரும் நிலைவிதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வரைகட்டுகளுக்கு உட்பட்டு அத்தகையக் கட்டணத்தை செலுத்துவதன்பேரில், ஐந்து ஆண்டு கால அளவிற்கு இந்தச் சட்டத்தின்படி பேணிவரப்படும் பட்டதாரிகள் பதிவேட்டில் தன்னுடைய பெயரை பதிவு செய்ய உரிமைத் தகுதியுடையவராவார்.

(2) (1)—ஆம் உட்பிரிவின்படி பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் வகுத்துரைக்கப்பட்ட கட்டணத்துடனும் நிலைவிதிகளினால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தகுதிகளின் நிரூபணங்களுடனும் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(3) பதிவாளர் (2)—ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பம் பெற்றுக்கொண்டதன்பேரிலும் தாம் தக்கதெனக் கருதுகிற அத்தகைய விசாரணையை மேற்கொண்டதற்குப் பின்பும் விண்ணப்பதாரருடைய பெயரை பட்டதாரிகளுடைய பதிவேட்டில் பதிவு செய்தல் வேண்டும்.

(4) (3)—ஆம் உட்பிரிவின்படி பட்டதாரிகளுடைய பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும், நிலை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவதன்பேரிலும் இதன்பொருட்டு பதிவாளருக்கு விண்ணப்பிப்பதன் பேரில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அத்தகைய பதிவினை புதுப்பித்துக்கொள்ள உரிமைத் தகுதியுடையவராவார்.

சிறப்பு நியமனமுறை.

65. (1) ஆட்சிக் குழு தான் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், இப்பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் பதவி ஒன்றை ஏற்றுக் கொள்ளுமாறு, உயர்கல்வி சிறப்பையும் தொழில்முறைத் தேர்ச்சிப் பேறுகளையும் பெற்றுள்ள நபரொருவரை அழைக்கலாம்; மற்றும் அவர் ஏற்றுக் கொண்டதன் பேரில், அவரை அப்பதவிக்கு நியமிக்கலாம்.

(2) ஆட்சிக்குழு, துணை முறை விதிகளில் விதிக்கப்பட்டுள்ள முறைக்கிணங்க கூட்டுச் செயல் திட்டமொன்றை மேற் கொள்வதற்காக, பிற பல்கலைக்கழகம் அல்லது அமைப்பு எதிலேனும் பணிபுரிகின்ற ஆசிரியர் ஒருவரையோ கல்விப் பணியாளர் தொகுதியின் பிற உறுப்பினர் எவரையுமோ நியமிக்கலாம்.

துணைவேந்தர் மற்றும் பிற அலுவலர்கள் முதலியோர் அரசு ஊழியர்களாக இருத்தல்.

66. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பதிவாளர், நிதி அலுவலர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற பணியாளர்கள், இந்தச் சட்டத்தின் எந்தவொரு வகைமுறைகளுக்கும் இணங்க செயல்படும்போது அல்லது செயல்படுவதாகக் கருதும்போது, 2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் 2 ஆம் பிரிவின் (28) ஆம் கூறின் பொருளின்படி பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் 45/2023

இணைக்கப்பட்ட கல்லூரி மீதான அறிக்கை.

67. ஆட்சிக்குழுவானது குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒவ்வொரு மூன்றாண்டுகளின் முடிவிலும், இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளின் நிலையைப் பற்றி அரசிற்கு அறிக்கையொன்றை பணிந்தனுப்புதல் வேண்டும். அரசு, அவ்வறிக்கையின் மீது தான் பொருத்தமெனக் கருதும் நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

68. (1) குறிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதையேனும் முதல் முதலில் அமைத்துருவாக்குதல் குறித்தோ அல்லது மீண்டும் அமைத்துருவாக்குதல் குறித்தோ, அல்லது பிறவாறு இந்தச் சட்டத்தின் வகை முறைகளைச் செயல்படுத்துதல் குறித்தோ இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, அறிவிக்கையின் மூலமாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்காக தேவையானதென்று அல்லது உகந்ததென்று தனக்குத்தோன்றக் கூடிய, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதவையாயிராத வகை முறையைச் செய்யலாம்;

வரம்புரையாக, அத்தகைய அறிவிக்கை எதுவும் 3—ஆம் பிரிவின்படி பல்கலைக்கழகம் நிறுவியமைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிவடைந்ததற்கு பின்பு, பிறப்பிக்கப்படுதலாகாது.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படியோ அல்லது இந்தச் சட்டத்தின் பிறவகை முறைகள் எவற்றின்படியுமோ பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, நடைமுறைக்கு இயன்ற விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது, அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய அறிவிக்கை எதிலும் மாறுதல் எதையேனும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமானால், அல்லது அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படலாகாது என்று சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அந்த அறிவிக்கையானது அதன் பின்பு அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்லாற்றல் பெறுதல் வேண்டும்; அல்லது நேர்விற்கேற்ப, செல்லாற்றல் பெறாதுபோதல் வேண்டும்; எனினும், அத்தகைய மாறுதல் அல்லது நீக்கம் எதுவும் அந்த அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

பணிப்புரைகள் வழங்க அரசுக்கு உள்ள அதிகாரம்.

69. அரசானது அவ்வப்பொழுது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக தான் தக்கதெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரைகளை பல்கலைக்கழகத்திற்கு பிறப்பிக்கலாம்; மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது பல்கலைக்கழகத்தின் கடமையாகும்.

ஐயங்களை அகற்றுதல்.

70. ஐயங்களை அகற்றுவதற்காக அது ஈங்கிதனால் விளம்புகை செய்யப்படுகிறது. அதாவது, தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமனஞ்செய்யப்பட்ட அல்லது பிறவாறு 1982–ஆம் ஆண்டு சட்டத்தின்படி, இந்தச் சட்டத்தின் 63–ஆம் பிரிவின் (5)–ஆம் உட்பிரிவின்படி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக கருதப்படும் கல்லூரிகளிலிருந்து அத்தகையவாறு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளின் உறுப்பினர்களாக இருப்பவர்கள், இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதிக்கு முன்புவரை அத்தகைய உறுப்பினர்களாகவே இருப்பர்.

1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 2 / 1982.

1 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

71. (இதன்பின்பு 1982 ஆம் ஆண்டுச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1981–ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் 1–ஆம் பிரிவில், (2) –ஆம் உட்பிரிவிற்காக பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(2) இது தமிழ்நாடு மாநிலத்திலுள்ள திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி இருக்கின்ற பரப்பிடத்தை அளாவி நிற்கும்.”

இணைப்புப் பட்டியலுக்கான மாற்றீடு.

72. 1982–ஆம் ஆண்டு சட்டத்தின் இணைப்புப் பட்டியலுக்கு, பின்வரும் இணைப்புப் பட்டியலானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்:–

**"இணைப்புப் பட்டியல்.**
**[2(dd) பிரிவைக் காண்க]**

| வரிசை எண். (1) | கல்லூரிகளின் பெயர். (2) |
|---|---|
| 1. | தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி. |
| 2. | அரசு கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. |
| 3. | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, முசிறி. |
| 4. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஸ்ரீரங்கம். |
| 5. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமுளூர், லால்குடி. |
| 6. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மணப்பாறை. |
| 7. | அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கரூர். |
| 8. | டாக்டர்.கலைஞர் அரசு கலைக்கல்லூரி, குளித்தலை. |
| 9. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தரகம்பட்டி. |
| 10. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர். |
| 11. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர். |
| 12. | அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி , வேப்பூர். |
| 13. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பந்தட்டை, பெரம்பலூர். |
| 14. | கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), புதுக்கோட்டை. |
| 15. | எச்.எச்.ராஜா கல்லூரி (தன்னாட்சி), புதுக்கோட்டை. |
| 16. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கறம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம். |
| 17. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அறந்தாங்கி. |
| 18. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆலங்குடி, புதுக்கோட்டை. |
| 19. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமயம், புதுக்கோட்டை.". |

| | **பின் இணைப்பு.** |
|---|---|
| | **இணைப்புப் பட்டியல். [2(g) பிரிவைக் காண்க]** |
| **வ ரி சை எண். (1)** | **அரசு கல்லூரிகளின் பெயர். (2)** |
| 1. | அரசு மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம். |
| 2. | குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர். |
| 3. | ராஜா சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி ), தஞ்சாவூர். |
| 4. | அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம். |
| 5. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேராவூரணி. |
| 6. | அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி , ஒரத்தநாடு. |
| 7. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருக்காட்டுப்பள்ளி. |

| | |
|---|---|
| 8. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேதாரண்யம். |
| 9. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகப்பட்டினம். |
| 10. | அரசு கலைக் கல்லூரி, அரியலூர். |
| 11. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஜெயங்கொண்டம். |
| 12. | எம்.ஆர் அரசு கலைக் கல்லூரி, மன்னார்குடி. |
| 13. | திரு. வி. க. அரசு கலைக் கல்லூரி, திருவாரூர். |
| 14. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருத்துறைப்பூண்டி. |
| 15. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நன்னிலம். |
| 16. | அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கூத்தாநல்லூர். |
| 17. | டாக்டர்.புரட்சி தலைவர் எம்ஜிஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குடவாசல். |

## நோக்கக் காரண விளக்கவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 24.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கும்பகோணத்தில் "கலைஞர் பல்கலைக்கழகம்" என்ற பெயரில் ஒரு புதிய பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

2. தமிழ்நாடு மாநிலத்தில், அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருவாரூர் ஆகிய எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய மாநிலத்தின் பெரும்பகுதிகளை கொண்ட ஒரே மாநிலப் பல்கலைக்கழகம் பாரதிதாசன் பல்கலைக்கழகமாகும். குறிப்பாக, டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் உள்ள மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் பல்கலைக்கழகம் கடினப்படுகிறது. மேலும் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடையே அதிகரித்து வரும் உயர்கல்வித் தேவைகளை நிறைவு செய்வதற்கும், இளைஞர்களின் குறிப்பாக டெல்டா பகுதியைச் சேர்ந்த பின்தங்கிய பின்னணியிலிருந்து வரும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவும், உயர்கல்வி நிறுவனங்களில் நுழைவதற்கும், கூறப்பட்ட பகுதியில் மொத்த சேர்க்கை விகிதத்தை அதிகரிப்பதற்கும், புதிய பல்கலைக்கழகத்தை நிறுவுவது இன்றியமையாததாகும். அரியலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் வாழும் மாணவர்களின் மேம்பாட்டிற்காக உலகத் தரம் வாய்ந்த வசதிகளையும் அறிவுப் பரப்புதலையும் இந்தப் பல்கலைக்கழகம் வழங்கும்.

3. மேற்கண்ட அறிவிப்புக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில், அரியலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மாணவர்களின் நலனுக்காக, கும்பகோணத்தில் "கலைஞர் பல்கலைக்கழகம்" என்ற புதிய பல்கலைக்கழகத்தை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர் கோவி. செழியன்,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 1(4), 4, 6(2), 11(3), 12(11), 13(1), 14(3), 15, 16, 17(1), 21(7), 22(1), 23(1), 24, 25(2), 27(8), 29, 30, 31, 32, 34, 36, 37, 38, 40 42, 43, 44, 45(3), 46(1), 47, 48, 49, 55, 58(4), 64, 67 மற்றும் 68 ஆம் பிரிவுகளானது, முன்மொழியப்பட்ட சட்டத்தின் குறித்த வகைமுறைகள் இயற்றப்பட்டு செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்போது, அவற்றைச் செயல்படுத்தும் விதம் மற்றும் முறையை வகுத்துரைப்பதற்கு நேர்விற்கேற்ப, தகுந்த ஆணைகள், அறிவிக்கைகள், நிலை விதிகள், துணைமுறை விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளை வெளியிட, அரசு, பல்கலைக்கழகத்தின் கல்வி மன்றக் குழு, ஆட்சிக்குழு மற்றும் பிற அதிகார அமைப்புகள் ஆகியவற்றிற்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**முனைவர் கோவி. செழியன்,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2025 ஏப்ரல் 28.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/2025**

## 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் எழுபத்தி ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XXXVI/1947.

அத்தியாயம் IX–ற்கான மாற்றீடு.

2. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), அத்தியாயம் IX–ற்காக, பின்வரும் அத்தியாயமானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

### "அத்தியாயம் IX

தண்டத்தொகைகளும் தீர்ப்பளிக்கின்ற செயல்முறையும்.

**45. தண்டத்தொகைகள்.–** (1) 3, 7 முதல் 11 வரை, 13 முதல் 23 வரை, 25, 26, 29 முதல் 41 வரை, 47, 47–A மற்றும் 50–A ஆகிய பிரிவுகளின் வகைமுறைகள் எதனையும் மீறுகின்ற எவரொருவரும், முதல் முறை மீறலுக்காக, ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்; மற்றும் இரண்டாவது முறை அல்லது அடுத்தடுத்த மீறுகைக்கு, பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்.

**விளக்கம்.**— இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''இரண்டாவது முறை அல்லது அடுத்தடுத்த மீறுகை'' என்பது முதல் முறை மீறுகை செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஒரு வேலைவழங்குநரால் செய்யப்பட்ட ஒரேவகையான அல்லது அதைப் போன்ற மீறல் என்று பொருள்படும்.

(2) 41–A பிரிவுக்கு இணங்கத் தவறுகிற எந்தவொரு வேலைவழங்குநரும், ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தவறுகை தொடருமாயின், நேர்விற்கேற்ப, தண்டத்தொகை விதிக்கப்பட்ட பின்பு அல்லது மீறுகையை இணக்கமாக தீர்த்த பின்பு, அத்தகைய தவறுகை தொடருகின்ற நாள் ஒவ்வொன்றுக்கும், இருநூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் மேலும் ஒரு தண்டத்தொகை விதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் மொத்தத்தில் அந்தத் தண்டத்தொகையானது ஒரு இலட்ச ரூபாய்க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். வேலைவழங்குநர் செலுத்துகிற தண்டத்தொகை முழுவதையும் அல்லது பகுதி எதனையும் பாதிக்கப்பட்ட பணியாளருக்கு இழப்பீடாக வழங்குவதற்கு, தீர்ப்பளிக்கும் அலுவலர் ஆணையிடலாம்.

(3) (a) (i) இந்தச் சட்டத்தின்கீழ் ஆய்வாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் எதனையும் அவர் செயல்படுத்துகிறபோது அவரையோ; அல்லது

(ii) அவரது அதிகாரத்தைச் செயற்படுத்துவதில் ஆய்வாளருக்குச் சட்டப்பூர்வமாக உதவுகின்ற நபர் எவரையுமோ,

வேண்டுமென்றே தடுக்கிற அல்லது;

(b) ஆய்வாளரால் செய்யப்பட்ட சட்டப்பூர்வ ஆணை எதனையும் இணங்கத் தவறுகிற,

நபரெவரும், ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்தொகைக்கு உள்ளாதல் வேண்டும்.

**46. மீறுகைகளை இணக்கமாக தீர்த்தல்.–** (1) 45 ஆம் பிரிவின்கீழ் அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதி எதனின் மீறுகை எதுவும், தீர்ப்பு நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ, ஆனால் தண்டத்தொகை விதிக்கப்படுவதற்கு முன்பு, அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அந்த அலுவலரால் குறிப்பிடப்படலாகும் அத்தகைய தொகையைச் செலுத்துவதன் பேரில், இதன் பொருட்டு, தொழிலாளர் ஆணையரால் அதிகாரமளிக்கப்படலாகும் அத்தகைய அலுவலரால் இணக்கம் செய்யப்படலாம்:

வரம்புரையாக, அவ்வாறு இணக்கமாக தீர்க்கப்பட்ட மீறுகைக்கான அத்தகைய தொகையானது, எந்நேர்விலும், இந்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படலாகும் அதிகபட்ச தண்டத்தொகைக்கு மேற்படுதல் கூடாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ், மீறுகை எதுவும் இணக்கமாக தீர்க்கப்பட்டபோது, அவ்வாறு இணக்கமாக தீர்க்கப்பட்ட மீறுகையைப் பொறுத்து, இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எதுவும் தொடங்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடத்தப்படுதலோ கூடாது.

**46–A. தீர்ப்பளிக்கும் அலுவலர்.–** (1) மாநில அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின்கீழ் தண்டத்தொகைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய முறையில் விசாரணையை நடத்தவும், தண்டத்தொகையை விதிக்கவும், தொழிலாளர் இணை ஆணையர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவரை தீர்ப்பளிக்கும் அலுவலராக நியமிக்கலாம்:

வரம்புரையாக, மாநில அரசானது, தேவைப்படலாகும் எண்ணிக்கையில் தீர்ப்பளிக்கும் அலுவலர் பலரை நியமிக்கலாம்.

(2) தீர்ப்பளிக்கும் அலுவலரின் கருத்தில், விசாரணையின் பொருட்கூறுகளுக்குப் பயனுள்ளதாகவோ அல்லது அதற்கு தொடர்புடையதாகவோ இருக்கும் எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்ய அல்லது சாட்சியம் அளிக்க, வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நன்கு அறிந்த நபரெவரையும், தீர்ப்பளிக்கும் அலுவலர், அழைப்பாணை விடுத்து வருகை தருமாறு கட்டாயப்படுத்தலாம்; மற்றும் அத்தகைய விசாரணையின் பேரில், தொடர்புடைய நபர், 45 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட வகைமுறைகள் அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகள் எதனையும் இணங்கத் தவறினார் என அவர் மனநிறைவடைந்தார் எனில், அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய தண்டத்தொகையை விதிக்கலாம்:

வரம்புரையாக, தொடர்புடைய நபருக்கு, அவர் தரப்பினை கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்காமல் அத்தகைய தண்டத்தொகை எதுவும் விதிக்கப்படுதலாகாது.

**46–B. மேல்முறையீடு.–** **(1)** 46–A பிரிவின்கீழ் தீர்ப்பளிக்கும் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் இடருற்ற நபரெவரும், ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், அரசால், அறிவிக்கையின் மூலம், நியமனம் செய்யப்பட்ட கூடுதல் தொழிலாளர் ஆணையர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவராக இருக்கின்ற மேல்முறையீட்டு அலுவலரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

**(2)** மேல்முறையீட்டாளர், அறுபது நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யாததற்குப் போதுமான காரணம் இருப்பதாக மேல்முறையீட்டு அலுவலரை மனநிறைவடையச் செய்தால், மேல்முறையீடானது, அந்தக் காலஅளவு முடிவடைந்த பின்பும் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

**(3)** மேல்முறையீட்டு அலுவலர், மேல்முறையீட்டின் தரப்பினருக்கு அவர் தரப்பினை கேட்பதற்கான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

**(4)** மேல்முறையீட்டு அலுவலர், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், அதனை முடித்து வைக்க வேண்டும்.

**46–C. வசூலித்தல்.–** நேர்விற்கேற்ப, 46–A பிரிவின்கீழ் அல்லது 46–B பிரிவின்கீழ் தண்டத்தொகை விதிக்கப்பட்டிருப்பின், அது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வைப்பீடு செய்யப்படவில்லையெனில், செலுத்த வேண்டிய தொகையானது, நில வருவாயின் நிலுவைத் தொகையை வசூலிப்பது போன்று வசூலிக்கப்படுதல் வேண்டும்.''.

**3.** முதன்மைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் **(2)** ஆம் உட்பிரிவில், ''அபராதம்'' எனும் சொல்லுக்காக, ''தண்டத்தொகை'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

49 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

## நோக்கக் காரண விளக்கவுரை

“2024 ஆம் ஆண்டு வணிக சீர்திருத்த செயல் திட்டம் (BRAP 2024)” மற்றும் “2024 ஆம் ஆண்டு இணக்கச் சுமையை குறைத்தலில் முன்னெடுப்பு (RCB 2024+)” ஆகியவற்றில் கருதப்பட்டுள்ள சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு அரசு, முழு முயற்சி எடுத்து வருகிறது. இணக்கச் சுமையை குறைப்பதற்கு, மாநிலங்கள்/ ஒன்றிய அரசின் ஆட்சிப்பகுதிகளுக்கான நடைமுறைப்படுத்துதலின் வழிகாட்டியில், கடைகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான பல்வேறு தொழிலாளர் சட்டங்களைப் பொறுத்து, இணக்கம் மற்றும் அதன் சுமை குறைப்பு ஆகியன அடையாளம் காணப்பட்டுள்ளது. RCB 2024+ ஆனது, குற்றமற்றது உள்ளடங்கலாக, இணக்கம் மற்றும் அதன் சுமை குறைத்தலின் நான்கு அடிப்படைத் தூண்களை உள்ளடக்கியுள்ளது. மேலும், கூறப்பட்ட RCB 2024+ இல், சிறைத்தண்டனையை நீக்குவதன் மூலம் கடுமையான தண்டனையைக் குறைத்தல், தண்டத்தொகை விதிப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல், விகிதப்படியான அல்லது வகைப்படுத்தப்பட்ட தண்டனைகள், வழக்கு நடத்துதல் மற்றும் மேல்முறையீட்டு செயல்முறைகளை நிறுவுதல் மூலம் குற்றமற்றது என்பது தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

2. எனவே, கூறப்பட்ட RCB 2024+ இல் கருதப்பட்டுள்ளதைப் போன்று, தொழில் புரிதலை எளிமைப்படுத்துவதன் பொருட்டு, சிறைத்தண்டனை மற்றும் அபராதத்தை, தண்டத்தொகைகளாக மாற்றியமைத்தல் மற்றும் தீர்ப்பளிப்பு மற்றும் மேல்முறையீட்டு செயல்முறைகளை நிறுவுதல் மூலம், 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் XXXVI/1947) உள்ள குற்றங்களைக் குற்றமற்றதாகச் செய்வது அவசியமாகிறது. அதற்கிணங்க, அரசானது, கூறப்பட்ட சட்டத்தை, கூறப்பட்ட நோக்கத்திற்காக, தகுந்தவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. கணேசன்,**
*தொழிலாளர் நலன் மற்றும்*
*திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2) மற்றும் 2 ஆம் பிரிவுகள், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**சி.வி. கணேசன்,**
*தொழிலாளர் நலன் மற்றும்*
*திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 ஏப்ரல் 28.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.